போற்றி! போற்றிநின் பொன்னடி போற்றி!
போற்றி! போற்றிநின் பொன்னருள் போற்றி! (108)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ராமக்ருஷ்ண நாம சங்கீர்த்தனம்

ஸர்வஜீவ பாபநாச காரணம் பவேச்வரம்
ஸ்வீக்ருதம் ச கர்ப்பவாஸ தேஹபாசமீத்ருசம்
யாபிதம் ஸ்வலீலயா ச யேன திவ்ய ஜீவனம்
தம் நமாமி தேவ தேவ ராமகிருஷ்ணமீச்வரம் ||

ஓம் ஸ்ரீ விவேகானந்தாதி-ஸச்சிஷ்ய-ஸுபூஜிதாய,
ஸ்ரீ சாரதா தேவ்யா விரத-ஸேவிதாய, ஸ்ரீ ராமகிருஷ்ண
பரம ஹம்ஸாய, அவதார வரிஷ்டாய ச தே நம: ||

| | |
|---|---|
| பரப்ரஹ்ம-பராசக்தி-ஜகத்ரூப | ராமக்ருஷ்ண |
| தர்ம ரக்ஷணாய ஜகதி தேஹதாரி | ராமக்ருஷ்ண |
| ஜன்மபூத-வங்கதேச-விப்ரவம்ச | ராமக்ருஷ்ண |
| சந்த்ரமணி-க்ஷுதீராம-செளக்யதாத்ரு | ராமக்ருஷ்ண |
| சைசவேடபி சில்பகீத-கலாநிபுண | ராமக்ருஷ்ண |
| பக்ஷிபங்க்தி-தர்சனாத் ஸமாதிமாப்த | ராமக்ருஷ்ண |
| ஸப்த மாப்த-லுப்த பித்ருப்ரேம-பால | ராமக்ருஷ்ண |
| பால்ய ஏவ விராகாக்னி-தஹ்யமான | ராமக்ருஷ்ண |
| பூதபுவி த்யான மக்ன-பாலயோகி | ராமக்ருஷ்ண |
| பிக்ஷுயோகி ஸாது ஸங்க-மோதமான | ராமக்ருஷ்ண |
| விசாலாக்ஷி ஸத்மபதே விஸ்ம்ருதாத்ம | ராமக்ருஷ்ண |
| ஸூத்ர தரண கால-பாலித-ப்ரதிக்ஞ | ராமக்ருஷ்ண |
| தனீதத்த-பிக்ஷயாடேதி துஷ்யமான | ராமக்ருஷ்ண |
| ஸூரிஸபா-ராஜமான-பாலஸூர்ய | ராமக்ருஷ்ண |
| சைவ ராத்ரி-நாடகே சிவாயமான | ராமக்ருஷ்ண |
| ஸ்ரீ நிவாஸ வலயகார பூஜிதாங்க்ரி | ராமக்ருஷ்ண |
| ஸதா பக்தி கீத-தேவ பூஜனரத | ராமக்ருஷ்ண |
| கிருஷ்ண ராக யுக்த-ராதிகாயமான | ராமக்ருஷ்ண |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோக சிக்ஷணம் விஹாய மோக்ஷகாம ராமக்ருஷ்ண
தக்ஷிணேச-காலிகாலர்ச்சனாதி நிரத ராமக்ருஷ்ண
பக்திஹீன-ராஸமணிம்-தாடிதவன் ராமக்ருஷ்ண
ஜகன் மாத்ரு-தர்சனாய ரோருவன் ஹி ராமக்ருஷ்ண

ஆத்மஹனன-ஸமய-தத்த-மாத்ருத்ருஷ்டி ராமக்ருஷ்ண
ஸர்வ கால-ஜகன் மாத்ரு-த்ருஷ்டி பரித ராமக்ருஷ்ண
சிவோன்மாத நிராஸாய க்ருதோத்வாஹ ராமக்ருஷ்ண
விவாஹே க்ருதேSபி தவாசலம் மனோ ராமக்ருஷ்ண

பைரவேய பாததலே சிஷ்யபூத ராமக்ருஷ்ண
தந்த்ர சாஸ்த்ர-ஸாதனேன ஸித்திமாப்த ராமக்ருஷ்ண
பக்தி மக்ன சித்த யுக்த-பரம பக்த ராமக்ருஷ்ண
ராம பக்தி-விஸ்ம்ருதாத்ம-வானரஸம ராமக்ருஷ்ண

கிருஷ்ணபக்தி-விஸ்ம்ருதாத்ம-ராதிகைவ ராமக்ருஷ்ண
தோதாபுரி-விதித வேத சிரஸ் தத்வ ராமக்ருஷ்ண
சிர ஸமாதி-மேரு சிகர-த்ருடஸ்தான ராமக்ருஷ்ண
ஸாதன சமயேSபி சிக்ஷிதாத்மகுரோ ராமக்ருஷ்ண

க்ரைஸ்த பூர்வ சித்ர தர்ம-சரண நிரத ராமக்ருஷ்ண
ஸர்வ தர்ம-ஸமானத்வ-ஸத்யதர்சி ராமக்ருஷ்ண
ஏக வஸ்து-விவித நாம-தத்வ தர்சி ராமக்ருஷ்ண
ஸ்வபத்ன்யை விசுத்த ஹர்ஷ போத தாத்ரு ராமக்ருஷ்ண

ப்ரயாகாதி-தீர்த்தனகர்யடன சீல ராமக்ருஷ்ண
தத்ர துக்கி ஜனான் வீக்ஷ்ய மோசிதாச்ரு ராமக்ருஷ்ண
ஸ்வபத்ன்யாம பூர்வ மாத்ரு த்ருஷ்டி பார்த்ரு ராமக்ருஷ்ண
ஸமாதிஸ்த-சாரதாம் ஸுபூஜிதவன் ராமக்ருஷ்ண

ப்ராஹ்ம ஸப்ய-கேசவாதி-கர்ஷிதவன் ராமக்ருஷ்ண
பக்த ஸேவகாகமம் ப்ரதீக்ஷமாண ராமக்ருஷ்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸாது சிஷ்ய-பக்த வ்ருந்த-ப்ருங்க கமல ராமக்ருஷ்ண
ஸாது சிஷ்ய-பக்த-ஹ்ருதய-கமல-தரணி ராமக்ருஷ்ண

நரேந்திராதி-சாத்ர கோடி-சிக்ஷமாண ராமக்ருஷ்ண
பக்த பாப கர்ஷணாத்ரு ஜயாSSக்ரஸ்த ராமக்ருஷ்ண
ரோக துக்க நிர்விஷண்ண-மனோ யுக்த ராமக்ருஷ்ண
மஹா ஸமாதௌ ஹி பரப்ரஹ்மலீன ராமக்ருஷ்ண

---

# ஸ்ரீ ராமக்ருஷ்ண தேவர் அஷ்டோத்ரம்

**ஓம் ஸ்தாபகாய ச தர்மஸ்ய சர்வ தர்ம ஸ்வரூபிணே**
**அவதார வரிஷ்டாய ஸ்ரீ ராமகிருஷ்ணாய தே நம :**

ஓம் கதாதராய நம :
ஓம் ப்ரம்ம ஸ்வரூபிணே நம :
**ஓம் காமார்ப்புகூர் ஜனிதாய நம :**
**ஓம் சந்த்ரமணி சுதாய நம :**
ஓம் பராசக்தி ப்ரியாய நம :
ஓம் சம்பத் குமாராய நம :
ஓம் ஜகந் நாதாய நம :
ஓம் சர்வ சாதன ஸ்வரூபாய நம
ஓம் சைதன்யாய நம : 10
ஓம் அம்ருத சாகராய நம :
ஓம் பதித பாவனாய நம :
ஓம் பக்தவத்சலாய நம :
ஓம் தக்ஷிணேஸ்வர வாசினே நம :
ஓம் ப்ரேம சாகராய நம :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் தேஹ திகம்பராய நம :
ஓம் தோதாபுரி ப்ரியாய நம :
ஓம் கங்காதீர வாசினே நம :
ஓம் சாரதாமணி நாதாய நம :
ஓம் ப்ரம்ம சனாதனாய நம :
ஓம் தீனபந்தவே நம : 20
ஓம் ப்ரம்மாவதாராய நம :
ஓம் சரண்யாய நம :
ஓம் குல ஸ்ரேஷ்டாய நம :
ஓம் ஜகத் குரவே நம :
ஓம் ஜகன் மாத்ரே நம :
ஓம் அபய ப்ரதாய நம :
ஓம் மோக்ஷ ப்ரதாய நம :
ஓம் சகுண நிர்குணாய நம :
ஓம் காலஸ்ய காமின்யை நம :
ஓம் கைவல்ய தாயினே நம : 30
ஓம் அந்தர் யாமினே நம :
ஓம் ஹரி ஹராய நம :
ஓம் மாயாதீஸ்வராய நம :
ஓம் திவ்ய லாவண்ய பூர்ணாய நம :
ஓம் விபத் பஞ்ஜனாய நம :
ஓம் நரேந்த்ராதி சர்வஜன பூஜிதாய நம :
ஓம் ப்ரம்ம சக்தயே நம :
ஓம் சோடச கலா பூர்ணாய நம :
ஓம் அனந்த பாவ ரூபிண்யை நம :
ஓம் சத்வகுண பரிபூர்ணாய நம : 40
ஓம் சகல சாஸ்த்ர நிபுணாய நம :
ஓம் கௌராங்காய நம :
ஓம் ஸர்வ க்ஞாய நம :
ஓம் மஹாகாள்யை நம :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பாப விமோசனாய நம :
ஓம் க்றிஸ்து ரூபாய நம :
ஓம் அல்லா ரூபாய நம :
ஓம் ஈஸ்வராவதாராய நம :
ஓம் தர்ம தாரணாய நம :
ஓம் இஷ்ட மூர்த்தயே நம : 50
ஓம் பாலகோபாலாய நம :
ஓம் மோக்ஷ ப்ரதாய நம :
ஓம் மோஹ நாஸனாய நம :
ஓம் சச்சிதானந்த ரூபாய நம :
ஓம் சர்வ தேவ தேவீ ஸ்வரூபாய நம :
ஓம் ஸர்வ தர்ம ஸ்வரூபாய நம :
ஓம் சர்வ மந்த்ர ஸ்வரூபாய நம :
ஓம் தீன நாதாய நம :
ஓம் முக்தி தாத்ரே நம :
ஓம் பக்தி தாத்ரே நம : 60
ஓம் தயா ஸாகராய நம :
ஓம் அபய ப்ரதாய நம :
ஓம் லோகானுகம்பாய நம :
ஓம் சரஸ்வத்யை நம :
ஓம் லோக மாத்ரே நம :
ஓம் துரீயாய நம :
ஓம் கல்ப தரவே நம :
ஓம் தேவாதி தேவாய நம :
ஓம் மஹாதீர வீர புருஷாய நம :
ஓம் சிவாவதாராய நம : 70
ஓம் யுகாவதாராய நம :
ஓம் ஜயாயை நம :
ஓம் மஹாபுருஷாய நம :
ஓம் ப்ரம்மாவ தாராய நம :
ஓம் த்ரிபுவன ஸ்வாமினே நம :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஊர்த்வ ரேதஸ யோகினே நம :
ஓம் ஸர்வத்யாகினே நம :
ஓம் ஸாந்த மூர்த்தயே நம :
ஓம் சாதக சூடாமணயே நம :
ஓம் காம காஞ்சன வர்ஜிதாய நம : 80
ஓம் ராதாப்ரியாய நம :
ஓம் தயாநிதயே நம :
ஓம் சிந்தாமண்யை நம :
ஓம் உத்தமாய நம :
ஓம் ராம ரூபாய நம :
ஓம் க்ருஷ்ண ரூபாய நம :
ஓம் அனந்த மூர்த்தயே நம :
ஓம் அவதார வரிஷ்டாய நம :
ஓம் ஸாந்தி தாத்ரே நம :
ஓம் வேதாதீதாய நம : 90
ஓம் காருண்ய நிலயாய நம :
ஓம் கருணா நிதயே நம :
ஓம் புத்தாவதாராய நம :
ஓம் சதானந்தாய நம :
ஓம் மஹா மஹேஸ்வராய நம :
ஓம் விஸ்வ மனஸே நம :
ஓம் வ்யோம சாரிணே நம :
ஓம் அர்த்த நாரீஸ்வராய நம :
ஓம் சர்வைஸ்வர்யாய நம :
ஓம் ஸர்வ கலாநிதயே நம : 100
ஓம் விஸ்வவ்யாபினே நம :
ஓம் மஹாசார்யாய நம :
ஓம் நிமித்தோபாதனாய நம :
ஓம் ஸர்வ ஸித்தி தாத்ரே நம :
ஓம் ஸமாதி முகாய நம :
ஓம் பூர்ண ஆதர்ஸாய நம :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பூர்ணாவ தாராய நம :
ஸ்ரீ ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸ தேவாய நம : 108

ஓம் ஸமஸ்த நானாவித பரிமள
மந்த்ர புஷ்பம் அர்ச்சனம் ஸமர்ப்பயாம:

ஓம் ஸாந்தி: ஸாந்தி: ஸாந்தி: । ஹரி : ஓம் தத்ஸத் ॥

---

## மங்களம்

**ராகம் : சுருட்டி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

ஸ்ரீராம க்ருஷ்ணருக்கு ஜயமங்களம்-திவ்ய
செங்கமல பாதருக்கு சுபமங்களம்

**சரணம்**

காளி உபாசருக்குக் கருணையுரு வானவர்க்கு
வாழியென்றே வையகம் வாழ்த்தும் வரதருக்கு (ஸ்ரீ)

முக்கண்ணி கடாக்ஷத்தால் மூவாசை கொன்றவர்க்கு
தக்கணேச்வரத் திருந்தே தாரணியை வென்றவர்க்கு (ஸ்ரீ)

நாஸ்திக கொள்கையினால் நாசமுற்ற மக்கள் தம்மை
ஆஸ்திக ராக்கித்தம் அடிபணிய வைத்தவர்க்கு (ஸ்ரீ)

சாரதை மணாளருக்கு ஸர்வமத தாசருக்கு
பாரதத்தை உய்யவைத்த பரமஹம்ஸ தேவருக்கு (ஸ்ரீ)

**— திரு க. இராமச்சந்திரா**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரதேவ தேவ ஜய ஜய நரதேவ ।

சக்தி ஸமுத்ர ஸமுத்த தரங்கம்
தர்சித ப்ரேம விஜ்ரும்பித ரங்கம் ।
ஸம்சய ராக்ஷஸ நாச மஹாஸ்த்ரம்
யாமி குரும் சரணம் பவ வைத்யம் ॥

அத்வய தத்வ ஸமாஹித சித்தம்
ப்ரோஜ்ஜ்வல பக்தி படாவ்ருத வ்ருத்தம் ।
கர்ம கலேவரமத்புதசேஷ்டம்
யாமி குரும் சரணம் பவ வைத்யம் ॥

**— ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள்**

---

காஹோரே ஜய ஜய ராமக்ருஷ்ண நாம் ॥

ஆஜியே சுபதின மிலியே பகத ஜன ।
காஹோ காஹோ ராமக்ருஷ்ண நாம் ॥

ராமக்ருஷ்ண நாமே ராமக்ருஷ்ண ப்ரேமே ।
மாதியா உடுக தரா தாம் ॥

ஹரிதே பூபார் ப்ரேம அவதார் ।
ப்ரபு ராமக்ருஷ்ண குணதாம் ॥

ஜெய் ராம ஜெய் க்ருஷ்ண விச்வகுரு ராமக்ருஷ்ண ।
ஏகா தாரே ச்யாமா சிவ ச்யாம் ॥

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சாரதா ஸுப்ரபாதம்

மாத: ஸமஸ்தஜகதாம் பரமஸ்ய பும்ஸ:
சக்திஸ்வரூபிணி சிவே கருணார்த்ர சித்தே ।
லோகஸ்ய சோகசமனாய க்ருதாவதாரே
ஸ்ரீசாரதேSஸ்து ஸிவதே தவ ஸுப்ரபாதம் ॥ (1)

பால்யே பவஸ்ய தமஸ: பரிஹாரயித்ரே
லீலாமனுஷ்யவபுஷேSத கதாதராய ।
தத்தே ததர்ப்பிததியாSSப்தஸமஸ்தவித்யே
ஸ்ரீ சாரதேSஸ்து சுபதே தவ ஸுப்ரபாதம் ॥ (2)

பால்யாத் பரே வயஸி பர்தரி ஸம்ப்ரவ்ருத்தாம்
உன்மத்த இத்யனுசிதாமவதூய வார்த்தாம் ।
தத்தர்சனக்ரமிததுர்க்கமதூரமார்க்கே
ஸ்ரீராமக்ருஷ்ணதயிதே தவ ஸுப்ரபாதம் ॥ (3)

ஸந்யாஸிதம் பதிமவேக்ஷ்ய ச நோத்விஜானே
ஸேவார்ப்பிதத்ரிகரணே பரிசுத்தச்சித்தே ।
தத்சாதனாசரமஸீம்னி சமர்ப்பிதாங்க்ரே
ஸ்ரீராமக்ருஷ்ணபரமேஸ்வரி ஸுப்ரபாதம் ॥ (4)

யாமேவ சாத்மஜனனீம் பவதாரிணீம் ச
ஸேவாபராம் து புபுதே குருரஸ்தபேத: ।
தஸ்யாஸ்ஸமஸ்த ஜகதோSஸ்ய சரண்ய மூர்த்தே:
ஸ்ரீராமக்ருஷ்ணதயிதே தவ ஸுப்ரபாதம் ॥ (5)

ஆவ்ருண்வதீ பரமிகாம் ப்ரக்ருதிம் ஸ்வகீயாம்
ஸம்ஸாரிணீவ பஹுது:க்கஜலே பவாப்தௌ ।
ஸர்வம் ஸஹோ ச்ரிதஜனோத்தரணைகதீக்ஷே
ஸ்ரீராமக்ருஷ்ணதயிதே தவ ஸுப்ரபாதம் ॥ (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேஹஸ்ய மார்ஜனவிதௌ மம கர்மசாந்தி
நாயாத்யசங்க்யபுஜநிஷ்க்ரியமாணமேவம் ।
ஆகஸ்மிகோக்திவிவ்ருதாகிலசக்திரூபே
ஸ்ரீராமக்ருஷ்ணதயிதே தவ ஸுப்ரபாதம் ॥ (7)

ஸ்ரீராமக்ருஷ்ணதயிதே தததீனஸத்வே
தத்பக்தவ்ருந்தபரிபாலினி முக்திதாத்ரி ।
தத்பாவரக்தஹ்ருதயே ததபின்னதத்வே
மாதஸ்ஸமஸ்தஜகதாம் தவ ஸுப்ரபாதம் ॥ (8)

**— ஸ்ரீ அசலானந்த சுவாமிகள்**

---

## ஸ்ரீ சாரதா ராகமாலா

**ராகம் : ராகமாலிகை** **தாளம் : ஆதி**

**பிலஹரி**

சக்தி சொரூபம் சாரதா தேவி
சரணம் பணிவோம் புதுமலர் தூவி
பக்தியை ஊட்டும் தெய்விகப் பாவை
பகவான் ராமக்ருஷ்ணரின் சேவை (சக்தி)

**தன்யாசி**

காமம் தீண்டாக் காதலின் ஜோதி
கணவன் தவத்தைக் காத்திடும் பாதி
நேமம் தவறா நிர்மல யோகம்
நிறைகுணப் பெண்மை நிரந்தர த்யாகம் (சக்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கல்யாணி

தன்னலம் கருதாத் தாய்மையின் பீடம்
தவசிகள் தேடும் சாந்தியின் பாடம்
மன்னுயிர் யாவிலும் தன்னுயிர் காணும்
மாபெருங் கருணையின் மாட்சிமை பூணும் *(சக்தி)*

### ஹிந்தோளம்

சங்கடம் எதையும் சகித்திடும் பொறுமை
சாதனை சேவைகள் புரிந்திடும் திறமை
மங்கையர் குலத்தின் மதிப்பரும் பிறவி
மானிடப் பொதுவிலும் மிகபெருந் துறவி *(சக்தி)*

### மோஹனம்

பாரத நாட்டின் பழம்புகழ் நாட்டும்
பத்தினிப் பெண்மைப் பண்பினைக் காட்டும்
சாரதா தேவியின் சரித்திரப் பெருமை
'சாந்தம்' என்பதை சாதித்த அருமை *(சக்தி)*

### மத்யமாவதி

வாழ்க நம் பரம ஹம்சரின் மனைவி
மாதவப் பெருமையைக் காத்திடும் துணைவி
வாழிய சாரதா அன்னையின் பக்தி
வையகத் துயிர்களை வளர்த்திடும் சக்தி *(சக்தி)*

— **நாமக்கல் கவிஞர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சாரதா தேவியார்

(திருத்தாண்டகம்)

*பாரதத்தின் வேதாந்தப் பதியில் வந்து*
*பாரெல்லாம் ஒளிவீசும் பரம ஹம்ஸர்*
*தாரமதாய் வைத்துகந்த தைய லாளைத்*
*தாரணிக்கோர் தனியணங்காய்த் தோன்றினாளை*
*நாரதர்போல் பக்திநெறி நல்கி னாளை*
*நரேந்திரனுக் கருள்சுரந்த நங்கை தன்னை*
*சாரதையாம் திருநாமம் படைத்து ளாளைச்*
*சரண்புகுவார் சாந்திநிலை யடைவர் தாமே.*

**— திரு.க. இராமச்சந்திரா**

---

**ராகம் : ஷண்முகப்ரியா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

*துறவுக்கும் தூய்மைக்கும் உருவே-ஞானச்*
*சுடர் பொங்கி எழ நின்ற திருவே* *(துறவு)*

**அனுபல்லவி**

*குறைவற்ற இன்பத்தின் உறைவிடம் நீயே*
*குன்றாத தவவாய்மை குடிகொண்ட தாயே* *(துறவு)*

**சரணம்**

*நெஞ்சு மலர வரும் நீள் கதிர் ஆனாய்*
*நினைக்கும் அடியார் இன்னல் நீங்குமே தானாய்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சம்என அடைந்தேன் சாரதா மணியே
தமியேன் புரிய அருள்நின் திருப்பணியே (துறவு)

— திரு.ர. அய்யாசாமி

---

**ராகம் : கல்யாணி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

அன்னை சாரதாமணிதேவி அருள்மிகு
அன்புருவாய் வந்த ஆதிநாராயணியே (அன்னை)

**அனுபல்லவி**

முன்னையுலகம் ஈன்ற முதல்வியே தேவியே
இன்னல்கள் எம்மை விட்டேகிட வந்த-பேர் (அன்னை)

**சரணம்**

பரமனருள் வடிவான பராசக்தி
பயங்கர ரூபி ஓம் காளி பரமேச்வரி
அமரமதளித்திடும் அமுதுடனே பிறந்த
அமலையும் கலைமகள் ஆகிய தேவியும்
பகவான் ராமகிருஷ்ணர் பாதபங்கய மமர்
ஜகமே பணியும் ஸர்வசக்தியும் நீயே என்
(அன்னை)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : ஹம்ஸத்வனி தாளம் : ஆதி

### பல்லவி

*சாரதாமணி ஸர்வகாரணி*
*ஸத்குணி கல்யாணி சகல கலைவாணி (சாரதா)*

### அனுபல்லவி

*பாரத பெண்மையின் பூரண ரூபிணி*
*பக்தர் நெஞ்ச மெல்லாம் நர்த்தனம் செய்வேணி (சாரதா)*

### சரணம்

*வான்புவி வணங்கும் தேன்பதத் துறவி*
*வள்ளல் ராமகிருஷ்ணர் நல்லறத் தலைவி*
*ஆன்மஜோதி காட்டும் ஞானக் கண்மணியே*
*அம்புவிக்கெல்லாம் பேரின்பமூட்டும் தாயே (சாரதா)*

*மந்திரப் பொருள் நீ, தந்திரக் கலை நீ*
*மாதவப் பயன் நீ, சாதனைத் திறன் நீ*
*சிந்தனைக் கினிக்கும் சுந்தரக் கனி நீ*
*பந்த மறுத்து நீ தந்திடு அருள்-ஸ்ரீ (சாரதா)*

---

ராகம் : பிலஹரி தாளம் : ஆதி

### பல்லவி

*சாரதா தேவி பாதம் சரணடைந்தே நிதம்*
*சக்தி ஓம் சக்தி என்று வாழ்த்திடுவோம் (சாரதா)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபல்லவி

பாரத தேசப் பெண்கள் பண்பாட்டின் வடிவாகி
பாரெங்கும் தூய தாயாய்ப் பேரொளி வீசிடும் *(சாரதா)*

## சரணம்

பரமஹம்சரின் தர்ம பத்தினி யாகவந்து
பர்த்தாவின் அருள் காத்த பரமேச்வரி
கருணையே வடிவாகிச் சரணடைந்தோரைத் தாங்கி
கர்மவினை களையும் கருணாம்பிகையாம் அன்னை
*(சாரதா)*

—'குலம்'

---

**ராகம் : செஞ்சுருட்டி** **தாளம் : சாபு**

## பல்லவி

தேவிபாதம் பணிவோம்-சாரதா தேவிபாதம் பணிவோம்
தேவிபாதம் பணிந்தே-அன்னையின் திருவருள்
பெறுவோம்

## சரணம்

கூவியழைத் திடுவோம்-அன்னையை கூவியழைத்திடுவோம்
தாவிப்பிடித் திடுவோம்-அன்னைபாதம்
தாவிப்பிடித் திடுவோம்
தாயே என்று ஓலமிட்டால் தயவுடன் வருவாள்
மாயையை போக்கி மருள்தனை நீக்கியே
மங்கள வாழ்வதைத் தந்திடுவாள் *(தேவி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியளித் திடுவாள்-தூய அன்னை சக்தியளித் திடுவாள்
பக்தியளித் திடுவாள்-எங்களன்னை முக்தியளித்திடுவாள்
அம்மா என்று ஓலமிட்டால் அன்புடனே அணைப்பாள்
இம்மையிலும் பின் மறுமையிலும்-அவள்
இன்ப நிலையதை ஈந்திடுவாள் (தேவி)

— 'குலம்'

---

ராகம் : ஹரிகாம்போதி தாளம் : ஏகம்

பல்லவி

சாரதா ஜயந்தியைக் கூடிக் கொண்டாடுவோம்-அவள்
தண்ணருளை நினைந்து உள்ளம் கனிந்து பாடுவோம்

அனுபல்லவி

பொல்லாவினை போக்கிடு மா புனிதையாமவள்-அந்தப்
பூரணியின் புகழைநிதம் போற்றிப் பாடுவோம்

சரணம்

பரமஹம்ஸ தேவன் அவள் பர்த்தாவாகினான்-வாழ்க்கைப்
பாவனையில் அன்னையென்றே சாதனை செய்தான்
சாரதையும் நாதன் அருட் சக்தியைக் காத்தாள்-அந்தச்
சாதனையை எண்ணித்தூய வாழ்வை நாடுவோம்

பாரததேசப் பெண்மையதின் பெருமை நாட்டினாள் - அவள்
பாரினிலே தாய்மையதின் பொருளைக் காட்டினாள்
தூய அன்னை யென்று போற்றும் ஜோதியாகினாள்-அருட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின்பாதம் பற்றித்தூய சக்தி வேண்டுவோம்

பாவிகளைப் புனிதராக்கும் பரமதயாளி-அவள்
பாரில் திரு மேனிகொண்ட பரமேச்வரி
சாரதையாம் நாமம் பூண்ட சக்தியேயவள்-பரா
சக்திசக்தி சக்தி என்று பாடி யாடுவோம்.

—'குலம்'

---

## பஜனம்

அனந்த ரூபிணி, அனந்த குணவதி
அனந்த நாம்னி கிரிஜே மா।
சிவஹ்ருன்-மோஹினி, விச்வவிலாஸினி
ராமக்ருஷ்ண ஜய தாயினி மா॥

(த்வம்) ஜகஜ்-ஜனனீ, த்ரிலோக பாலினி
விச்வ-ஸுவாஸினி சுபதே மா।
துர்கதி நாசினி, ஸன்மதி தாயினி
போக-மோக்ஷ-ஸுக காரிணி மா॥

பரமே பார்வதி ஸுந்தரி பகவதி
துர்கே பாமதி த்வம் மே மா।
ப்ரஸீத மாதர் நாகேந்த்ர நந்தினி
சிரஸுக தாயினி ஜயதே மா॥

— ஸ்ரீ குணாதீதானந்த சுவாமிகள்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம்: மத்யமாவதி தாளம் : ஆதி

பல்லவி

மங்களமே ஜய மங்களம்-சுப
மங்களமே நித்ய மங்களம்

அனுபல்லவி

மங்களதேவி ஸ்ரீ சாரதா அன்னைக்கு
மங்களம் பாடிக்கொண் டாடிடுவோம்-ஜய (மங்)

சரணம்

எங்கும் வணங்கும் மங்கள ஜோதியாம்
எங்கள் ஸ்ரீராம கிருஷ்ண தேவருக்கும்
பாங்குடன் தெய்விகம் பரப்பிய ஞானப்
பண்டித விவேகா னந்தருக்கும்-ஜய (மங்)

---

ராகம் : புன்னாகவராளி தாளம் : ஆதி

பூரணயோக மஹேஸ்வரி சுந்தரி
டாகினி அம்பா சாரதா ஓம்
ஜய ஜய ஹே பவதாரிணி காரிணி
பூர்ண க்ருபாகரி பாலயமாம்

ஆதிபராசக்தி ஆனந்த ரூபிணி
சாந்த மஹேஸ்வரி ஜய சாரதா ஓம்
ஜய ஜய ஹே பவதாரிணி காரிணி
பூர்ண க்ருபாகரி பாலயமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவதி ஹே - த்ரிலோக குடும்பினி
பக்தி ப்ரதாயினி ஜய சாரதா ஓம்
ஜய ஜய ஹே பவதாரிணி காரிணி
பூர்ண க்ருபாகரி பாலயமாம்

நளினி நந்தினி மாலினி ஹம்ஸினி
மானவதி ஜய சாரதா ஓம்
ஜய ஜய ஹே பவதாரிணி காரிணி
பூர்ண க்ருபாகரி பாலயமாம்

பவபய ஹாரிணி பக்த மனோஹரி
பாவனாகம்யா ஜய சாரதா ஓம்
ஜய ஜய ஹே பவதாரிணி காரிணி
பூர்ண க்ருபாகரி பாலயமாம்

---

**ராகம் : ஹம்ஸத்வனி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

சரணம் அம்மா - சரணம் அம்மா
தாயே சாரதா நின் தாளிணை துணையே

**அனுபல்லவி**

அருட்குலம் அழைக்க வந்தவதரித்தவளே
அன்பினில் சிறந்திடும் ஆனந்தப் பொருளே (சரணம்)

**சரணம்**

அன்னை பராசக்தியின் அம்ஸவக்ஷனியே
அருளமுதம் அளித்திடும் அருந்தவக் கனியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனைமறவா தெனும் ஒருவரம் நீயே
உவந்தளிப்பாய் எனக்கு உத்தமத்தாயே (சரணம்)

---

**ராகம் : மாண்டு** **தாளம் : ஏகம்**

பஜனை செய்வோம் வாருமே பஜனை செய்வோம் வாருமே
அன்னை சாரதாவை நினைந்து பஜனை செய்வோம் வாருமே

அன்பர்கூடி அருளை நாடி பஜனை செய்வோம் வாருமே
அன்னை சாரதாவை நினைந்து பஜனை செய்வோம் வாருமே

அருள்வடிவாய் அமர்ந்திருக்கும் அன்னை சாரதா
அன்பின் உருவாய் அமர்ந்திருக்கும் அன்னை சாரதா

இருள்நீக்கி ஒளியைத் தருவாள் அன்னை சாரதா
அகத்தில்ஞான ஒளியைத் தருவாள் அன்னை சாரதா

அம்மை சாரதாவைப்போற்றி பஜனைசெய்வோம் வாருமே
அன்பர் கூடி அருளைநாடி பஜனைசெய்வோம் வாருமே

ஓதாமல் எல்லாம் அறிந்த அன்னை சாரதா
வேதஞானம் எல்லாம் உணர்ந்த அன்னை சாரதா

இராமகிருஷ்ணர் பெருமை உணர்ந்த அன்னை சாரதா
இராமகிருஷ்ணர் போற்றி நின்ற அன்னை சாரதா

அம்மை சாரதாவைப்போற்றி பஜனை செய்வோம் வாருமே
அன்பர் கூடி அருளை நாடி பஜனை செய்வோம் வாருமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மைசாரதாவின் பெருமைநினைந்து நினைந்துபாருமே
அம்மைசாந்த வடிவினளைத் தியானம் செய்வோம் வாருமே
சாந்தி தியானம் செய்ய வாருமே

---

**இராகம் : அடானா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

பரமஹம்ஸர் போற்றிடும் பத்மினி ஹம்ஸமே
பராசக்திபெற்ற சாரதா மணியே

**அனுபல்லவி**

வரம்பெற்ற வாக்கினால் மாநிலம் உய்ந்திட
மாமறை பேசிய ஸ்ரீராமகிருஷ்ண ஜோதி (பரம)

**சரணம்**

மாதவம் நீயே மந்திரம் நீயே
சாதனம் நீயே சக்தியும் நீயே
நாதவிந்து கலாதீத ஞானமும் நீயே
போதமும் நீயே எம்புண்ணியத்தாயே (பரம)

தூயநன்நினைவும் சேயெனத்தெளிவும்
சுதந்திர ஜீவனும் சுகபரிபாகமும்
நீயெனப்பெண்மையை நினைந்திடும் இன்பமும்
தாயே எனக்கருள்வாய் சாந்த வேதாந்தகுரு (பரம)

பாரினில் வளம்பெற பாரத தர்மத்தை
பாலித்திடும் ஆத்மபலத்தினை அருள்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரவிவேகானந்தர் வணங்கிய தேவியே
விமல சுத்தயோக விமலரின் ஆவியே (பரம)

---

சாரதாமாதா சாரதாமாதா சாரதாமாதா சாந்தமயீ
சாரதாமாதா சாரதாமாதா சாரதாமாதா ப்ரேமமயீ

அழியா அன்பால் அணைத்துக்கொள்வாள்
அம்மை சாரதாமாதா
ஆர்வக்கனலைத் தூண்டித்தருபவள் அன்னை
சாரதாமாதா (சாரதா)

இகபரசுகந்தனை விரைவினில் அளிப்பவள்
அம்மை சாரதாமாதா
ஈஸ்வரிதேவி பராசக்தி அம்பிகை அன்னை
சாரதாமாதா (சாரதா)

உன்மனீயத்தை மனதில் எழுப்புவாள்
அம்மை சாரதாமாதா
ஊட்டி வளர்ப்பாள் உவட்டா அமுதம்
அன்னை சாரதாமாதா(சாரதா)

என்றும் அழியா அருட்செல்வம் தருவாள்
அம்மை சாரதாமாதா
ஏதம் பிறரிடம் காணா எங்கள் அன்னை சாரதாமாதா
(சாரதா)

ஐயன் ராமகிருஷ்ணர் அருள்தரவந்தவள்
அம்மை சாரதாமாதா
ஐயம் போக்கி மெய்ஞ்ஞானம் உணர்த்துவாள்
அன்னை சாரதாமாதா (சாரதா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிலிமாதா ஒண்பொருள் அருள்வாள்
அம்மை சாரதாமாதா
ஓதாமல் ஞானம் அனைத்தும் உணர்ந்தவள்
அன்னை சாரதாமாதா (சாரதா)

---

ராகம் : திலங் தாளம் : ஆதி

பாரதப் பெண்மையின் பூரணியே
பக்தர் மனத்தொளிர் காரணியே
சாரதை யென்னும் தாரதி நின்
சரிதைத் தியானம் பேரருள்செய்
அன்பாய்த்தேடி வந்தோர்க்கு
அருளாம் ஞானச் செந்தேனை
இன்பக் கருணைச் சிந்தையினால்
எளிதாய்த் தந்தாய் எமதாய் நீ
விண்ணும் மண்ணும் அதிர்ந்திடவே
வீர விவேகானந்த மகன்
திண்ணிய முரசு அறைந்திட நீ
செய்தாய் வண்மை நிறைந்த அருள்
சுத்த சக்தி வடிவான தூயதாயே நின்னருளைச்
சித்தத்துருகி யான் பாடச் செய்தாய் வாழி நின்புகழே

---

அடைக்கலம் தந்திடும் சாரதையே
அருள் மழை பொழிந்திடும் சாரதையே ll

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியும் ஞானமும் தந்திடுவாய்
ஆறுதல் தந்தே அணைத்திடுவாய் ।
தியாகமும் தவமும் ஓங்கிடவே
கருணையுடன் எம்மைக் காத்தருள்வாய் ॥

ராமகிருஷ்ணரின் வழியினிலே
பக்தியை நாங்கள் பெற்றிடவே
அன்பும் பண்பும் வாய்ந்தவளே நின்
பதமலர் பணிந்தே வாழ்கின்றோம் ॥

விவேகானந்த வள்ளலைப் போல்
வீறுடன் விளங்க அருள்புரிவாய்
உற்றமும் சுற்றமும் நீயன்றோ இதை
உணர்ந்தால் உலகினில் துயருண்டோ? ॥

— **சுவாமி கமலாத்மானந்தா**

---

ஜய ஜய ஜனனி ஜய ஸ்ரீ சாரதாமணி
கருணா ரூபிணி ஜய மா ।
ஆத்யா சக்தி பரமா ப்ரக்ருதி
அசரண கதி துமி மா ॥
ஜய ஜக தாரிணி பவ பய ஹாரிணி
துர்கதி நிவாரிணி மா ।
சித்தி ப்ரதாயினி முக்தி விதாயினி
ஜீவ கதி தாயினி மா ॥
நிகில ஜகத மாதா ஜீவ கல்யாண ரதா
லஜ்ஜா படாவ்ருதா மா ।
துர்ஜன சஜ்ஜன சந்தான அகணன
பாலன காரிணி மா ॥

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜய சாரதேஸ்வரி சீதா ராதா மாதாமேரி
யசோதரா விஷ்ணு ப்ரியா மா।
யுக தேவ வந்திதா ஸுர நர ஸேவிதா
நமோ நாராயணி மா॥
நமோ நாராயணி மா॥
நமோ நாராயணி மா॥

— **ஸ்ரீ சண்டிகானந்த சுவாமிகள்**

---

சங்கரி நாரணி கௌரி மனோன்மணி
சரஸ்வதி ரூபிணி சாரதா ஜய் ஜய்
துர்கதி நாசினி சன்மதி தாயினி
துர்க்கா தேவி சாரதா ஜெய் ஜெய்

சங்கரி நாரணி சாந்த மனோஹரி
சீதாஸ்வரூபிணி சாரதா ஜய் ஜய்
துர்க்கா ரூபிணி துக்க நிவாரிணி
ராதா ப்ரேமி சாரதா ஜய் ஜய்

பார்வதி ரூபிணி பாப விமோசினி
பரமஹம்ஸினி சாரதா ஜய் ஜய்
அருள் துணையே வாழ்முதற் பொருளே
பரப் பிரம்ம ஸ்ரீ சாரதா ஜய் ஜய்

சாரதா ஜய் ஜய் காளிமா ஜய் ஜய்
சங்கரி ஜய் ஜய் நாரணி ஜய் ஜய்
சாரதா ஜய் ஜய் காளிமா ஜய் ஜய்
சங்கரி ஜய் ஜய் நாரணி ஜய் ஜய்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதா அம்மா அம்மா சாரதா அம்மா
சாரதா அம்மா அம்மா சாரதா அம்மா

மக்கள் நாடி வந்தோம் அம்மா சாரதா அம்மா - எமை
அணைத்து ஆதரிப்பாய் அம்மா சாரதா அம்மா (சாரதா)

ஜீவசேவை செய்து அம்மா சாரதா அம்மா - உந்தன்
ஆசிபெற வேண்டும் அம்மா சாரதா அம்மா (சாரதா)

காமக்ரோதம் அகற்றி அம்மா சாரதா அம்மா - எமை
ஆட்கொள்ள வேண்டும் அம்மா சாரதா அம்மா (சாரதா)

குற்றம் களையவேண்டும் அம்மா சாரதா அம்மா - சத்வ
குணமே ஓங்க வேண்டும் அம்மா சாரதா அம்மா (சாரதா)

தூய அன்னை நீ அம்மா சாரதா அம்மா - எமைத்
தூய்மையாக்கி விடுவாய் அம்மா சாரதா அம்மா (சாரதா)

எங்கள் தாய் நீ அம்மா சாரதா அம்மா - எமை
காப்பாற்ற வேண்டுமம்மா சாரதா அம்மா (சாரதா)

நான் உந்தன் குழந்தையம்மா சாரதா அம்மா -.உந்தன்
மடியினிலே ஏந்திடம்மா சாரதா அம்மா (சாரதா)

வேறு யாரும் இல்லையம்மா சாரதா அம்மா - நீயே
எங்களுக்குத் துணையம்மா சாரதா அம்மா (சாரதா)

நீ எனக்கே உரிமை அம்மா சாரதா அம்மா - தாயே
நானுனக்கே உடைமையம்மா சாரதா அம்மா (சாரதா)

சொல்லும் - சொற்களை கேட்பேன் அம்மா
சாரதா அம்மா - நல்ல
வழியில் நான் நடப்பேன் அம்மா சாரதா அம்மா (சாரதா)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதம் பணிவோம் அம்மா சாரதாம்மா - உந்தன்
பாதம் பிடித்தோம் அம்மா சாரதா அம்மா (சாரதா)

தாயே - அபயம் அபயம் அபயம் அம்மா சாரதா அம்மா
தாயே - சரணம் சரணம் சரணம் அம்மா சாரதா அம்மா

---

## ஸ்ரீசாரதாதேவி நாம சங்கீர்த்தனம்

த்யாயேத் ஹ்ருதம்புஜே தேவீம் தருணாருண விக்ரஹாம் ।
வராபயகராம் சாந்தாம் ஸ்மிதோத்புல்ல முகாம்புஜாம் ॥
ஸ்தலபத்ம-ப்ரதீகாச-பாதாம்போஜ-ஸுசோபனாம் ।
சுக்லாம்பர-தராம் தீராம் லஜ்ஜாபட விபூஷிதாம் ॥
ப்ரஸன்னாம் தர்மகாமார்த்த-மோக்ஷதாம் விச்வமங்கலாம் ।
ஸ்வநாத-வாமபாகஸ்தாம்-பக்தானுக்ரஹ காரிணீம் ॥

ஓம் ஸர்வ தேவி தேவீ ஸ்வருபிண்யை
ஸ்ரீ சாரதாதேவ்யை நம: ।

த்வம் மே ப்ரம்ம-ஸநாதனி மா
சாரதா-ஈஸ்வரி ஸுபகே மா
ப்ரம்மானந்த ஸ்வரூபிணி மா
ப்ரம்ம-சக்தி-ஸுக-தாயினி மா
ஸச்சித் ஸுகமய-ரூபிணி மா
ஸ்ருஷ்டிஸ்திதி லய காரிணி மா
ப்ரம்மஸுதாம்புதி கேலினி மா
ப்ரம்மாத்மைக்ய ஸுபங்கரி மா

ஜீவேஸ்வரபித் கௌதுகி மா
அகாத லீலா ரூபிணி மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்மயரூப விலாஸினி மா
பஹிராந்தர ஸுகவர்த்தினி மா
ஞானானந்த ப்ரவர்ஷிணி மா
திவ்யரஸாம்ருத வர்ஷிணி மா
மூலாதார நிவாஸினி மா
ஸஹஸ்ரார சிவ ஸங்கினி மா

ஆத்யாஸக்தி ஸ்வரூபிணி மா
சிதிசுக தாயினி தாரிணி மா
சுபமதி தாயினி சாங்கரி மா
துர்க்கதி துர்மதி நாசினி மா
மஹாகாலஹ்ருதி நர்த்தினி மா
ஜீவசிவாந்தர வர்த்தினி மா
ஜகஜ்ஜனனி ஜயதாயினி மா
தடில்லஸித ஸௌதாமினி மா

ஸீதா ராமா காரிணி மா
க்ருஷ்ண ராதிகா ரூபிணி மா
கமனீயாக்ருதி தாரிணி மா
பவஸாகர பய ஹாரிணி மா
சாந்தி ஸௌக்ய சிரதாயினி மா
க்ஷாந்தி மகாகுண வர்ஷிணி மா
காந்தி வராபய தாயிணி மா
கிரிசாங்கோபரி-வாஸினி மா

ஹரார்த்த-நாரீ-ரூபிணி மா
நடன-மஹேச்வர-சங்கினி மா
ஹர-ஹர்ஷோத்கரி-நர்த்தினி மா
சாரதேஸ்வரி ஷோடசி மா
ஸாதக மானஸ சோதினி மா
ஸர்வ ஸுபாக்ய ப்ரஸாதினி மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஹ கஜமுக ஜனி தாயினி மா
ஏகானேக விபாகினி மா

ஹிமகிரி நந்தினி லாஸினி மா
ஸர்வ சராசர ஸர்ஜினி மா
ஸர்வபவாமய வாரிணி மா
ஸர்வ ஜகத்ரய ஸாக்ஷிணி மா
நிகிலாதீஸ்வரி யோகினி மா
ஏலா கந்த ஸுகேசினி மா
சின்மய சுந்தர ரூபிணி மா
பரமானந்த தரங்கிணி மா

ரம்ய காந்தி சிர தாரிணி
ஸமஸ்த ஸுகுணா பூஷணி மா
ஸத்கதி ஸன்மதி தாயினி மா
பவதாரிணி கருணேச்வரி மா
த்ரிபுரே சுந்தரி மோஹினி மா
ப்ரஹ்மாண்டோதர தாரிணி மா
ப்ரேமானந்த ப்ரவர்ஷிணி மா
ஸர்வ சராசர பாலினி மா

புவன சதுர்தச ப்ரஸவிணி மா
நானா லீலா காரிணி மா
விவித வீபூதி விதாரிணி மா
ஞானாலோக ப்ரதாயினி மா
விச்வ க்ரீடா கௌதுகி மா
விச்வாதிஷ்டித சின்மயி மா
மந்தஸ்மித ஸ்மர ஹாரிணி மா
பக்தானுக்ரஹ காரிணி மா

யோக போக வரதாயினி மா
சாந்தி ஸுதா நிஸ்யந்தினி மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ராந்தி ரோகவிஷ ஹாரிணி மா
காந்தி யோக ஸுக தாயினி மா
வீர நரேந்த்ர ப்ரஹர்ஷிணி மா
ஸமாதி சிர சிதி தாயினி மா
வீர்ய பலாபய காரிணி மா
தாபத்ரய பய ஹாரிணி மா

ஸர்வோத்துங்க ஸுவாஸினி மா
ப்ரஸன்ன வரதே பைரவி மா
ஹவன ஜபார்ச்சன ஸாதினி மா
சண்டாஸுர கல காதினி மா
ஸகல தேவ ஜய ஸாதினி மா
துஷ்ட முண்ட வதகாரிணி மா
சாமுண்டேச்வரி தர்ப்பிணி மா
மாஹிஷ தர்ப்ப விநாசினி மா

மாஹேச்வர ஸுக வர்த்தினி மா
மஹிஷாஸுர கல மர்த்தினி மா
த்ரிகுண த்ரிலோக த்ரிரூபிணி மா
நிர்குண ஸகுண விசித்ரிணி மா
காரித த்யானானந்தினி மா
தர்ப்பண சித்த விபாஸினி மா
சேதோ தர்ப்பண காசினி மா
நவ நவ ரூப ஸுதர்சனி மா

ஸமஸ்த லோகோத்தாரிணி மா
ராமகிருஷ்ண நவரூபிணி மா
தர்மக்லானி விநாசினி மா
தர்மஸ்தாபன காரிணி மா
ரம்ய ஸஹஜ பத தர்சினி மா
மாத்ரு பாவ ஸுக சோதிணி மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மல பக்தோத்கர்ஷினி மா
திவ்யாத்புத சரிதார்த்திணி மா

ராமகிருஷ்ண ஸஹ தர்மிணி மா
ஜயராமாக்ய ஸுவாடினி மா
ம்ருக கேஸரிவர வாஹினி மா
துர்க்க ஹிமாசல நந்தினி மா
நரேந்த்ர ஹ்ருதய நிவாஸினி மா
லோகோத்தர க்ருதி தர்சினி மா
ஸுந்தரரூப விகாசினி மா
திவ்ய குணாகர தாரிணி மா

துர்ப்பல ஸபல ஸுகாரிணி மா
து:க்க தைன்ய பய நாசினி மா
ஸர்வ பூத ஹித ஸாதினி மா
ஸமஸ்த லோகாபயகரி மா
துர்க்கதி நாசினி துர்க்கே மா
நாராயணி ஜகதாத்யே மா
ஜய ஜய ஜய ஜகதாத்யே மா
நாராயணி ஜய துர்க்கே மா

---

**ராகம் : சுருட்டி** **தாளம் : ஆதி**

**மங்களம்**

சாரதா தேவியார்க்கு ஜயமங்களம்-திவ்ய
சாந்த சொரூபியார்க்கு சுபமங்களம் *(சாரதா)*

வங்கஞ் செய்புண்ணியத்தால் வந்தவ தரித்தவர்க்கு
சிங்கவா ஹினிபாதம் சீராகப் பேணினர்க்கு *(சாரதா)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணையுரு வானவர்க்கு காமாதி வென்றவர்க்கு
இருளற்ற இதயமதில் இனிதுவீற் றிருப்பவர்க்கு (சாரதா)

கன்னியழி யாதிருந்தும் கனமைந்தர் பெற்றவர்க்கு
அன்னையென அந்நியரும் அழைக்கும் நிலை
யடைந்தவர்க்கு (சாரதா)

— திரு.க. இராமச்சந்திரா

---

மங்களம் தந்திடும் மாதவன் நாயகி
திங்களைச் சூடிடும் சிவன் துணைவி
எங்கும் உன் நாமமே இனிதாய் இசைத்திட
சங்கரி சாரதா அருள் புரிவாய்!

கருநிறக் குழல்கள் கற்றையாய்த் தொங்கும்
கண்களிரண்டில் கருணையும் பொங்கும்
அருங்குணமெனவே நாணமும் ஓங்கும்
அருந்தவச் செல்வி வாழ்க! வாழ்க!

தூய்மையே என்றும் குணமாய்க் கொண்டாள்
தூய்மையே என்றும் வாழ்வாய் நின்றாள்
தூய்மையே வடிவாம் சாரதா தேவி
தூமலர்ப் பதங்கள் வணங்கிடுவோம்!

ஜெயராம்வாடி புனிதமடைந்தது
பிருந்தாவனமெனப் பொலிகிறது!
உயர்வற உயர்ந்திட பக்தர்கள் வாரீர்
இணையிலா அவளடி பணிந்திடுவோம்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ விவேகானந்த ஸுப்ரபாதம்

ஹே ப்ரேஷ்ட நாத சுமஹன் யுகசக்திதாரின்
ஹே நித்யமுக்த சததம் ஹி மஹாவரேண்ய ।
ஆனந்தரூப புவி வை ஜனமுக்தகாரின்
விச்வஸ்ய வீர ஸுயதே தவ ஸுப்ரபாதம் ॥

ஹே புத்த சாச்வத விவேக ஸுபோத தாயின்
ஸத்யாச்ரயின் ஜனகணான் பததானகாரின் ।
ஹே முக்த ஸர்வஜனமுக்தி விதானகாரின்
விச்வஸ்ய வீர ஸுயதே தவ ஸுப்ரபாதம் ॥

பக்திஸ்சதே ஸுவிதிதா புவி ராமக்ருஷ்ணே
ஸ்ரீராமக்ருஷ்ண ஹ்ருதிஹே சுக்ருதாதிகார ।
ஹே மாத்ருபக்த ப்ருதிவீவிஜயீ த்ருவம் த்வம்
விச்வஸ்ய வீர ஸுயதே தவ ஸுப்ரபாதம் ॥

ஹே சுத்த பூத புவனே சுசிதாவிதாதோ
ரிக்தார்த பீடிதஜநேச்வரபுத்திகாரின் ।
நித்யம் க்ருபாமலிஹ்ருத் பரது: க்கஹாரின்
விச்வஸ்ய வீர ஸுயதே தவ ஸுப்ரபாதம் ॥

மாயாவிஹீன புவி நோ நய மோஹபாரே
த்வம் ஜாக்ரதோ ஹி சததம் ஜனமுக்திதாரின் ।
ஜாகர்தி மானவகண ஸ்தவ ஸுப்ரபாவை:
விச்வஸ்ய வீர ஸுயதே தவ ஸுப்ரபாதம் ॥

ஸம்ஸாரபார கமலாக்ஷ ஸுகர்மகாரின்
நித்யம் விவேகமதி சக்தி விதானதக்ஷ ।
ஹே புத்த ஜாகரய ந: ஸுமதிம் விவேகம்
விச்வஸ்ய வீர ஸுயதே தவ ஸுப்ரபாதம் ॥

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸந்தப்தமானவகணேஷு மஹாக்ருபா தே
ப்ரக்ஞாவதாமபி ஹி தே மஹனீய ப்ரக்ஞா ।
ஸூர்யப்ரபஸ்த்வமபி தே கமனீயகாந்தி:
விச்வஸ்ய வீர ஸுயதே தவ ஸுப்ரபாதம் ॥

ஆனந்தஸுந்தர ஹி சாந்த விவேகமூர்த்தே
தீராப்யனுக்தமகதிஸ்தவ கர்மசக்தி : ।
வீரேச்வரோSசி சிவ ஹே ச சிவத்வதாயின்
விச்வஸ்ய வீர ஸுயதே தவ ஸுப்ரபாதம் ॥

ந்யாசின் நரோத்தம பவித்ர நரேந்த்ரநாத
ஸ்ரீ ராமக்ருஷ்ண கருணாஹி ஸதா த்வயாப்தா ।
ஸந்யாஸ்யஸி த்வமபி தே பரது: க்கஸேவா
விச்வஸ்ய வீர ஸுயதே தவ ஸுப்ரபாதம் ॥

ஹே ஸத்ய ஹே ஸகல மோஹ தமோவிநாசின்
தோஜோSசி தேஹி ஸததம் ஹ்யமிதம் ஸுதேஜ : ।
ஹே ச்ரேஷ்ட : ஜாகரய ந : சமபீர்னி நாதை :
விச்வஸ்ய வீர ஸுயதே தவ ஸுப்ரபாதம் ॥

ஹே தேசப்ரேமிக ச ஜாதஸு விச்வப்ரேம
ப்ரஹ்மக்ஞ ஹே விதித மர்மக்ஞ ஸமக்ர விஸ்வ ।
ப்ரஹ்மன் மஹாபுருஷ ஜாக்ருஹி தேவ நித்யம்
விச்வஸ்ய வீர ஸுயதே தவ ஸுப்ரபாதம் ॥

நிஸ்வார்த்த ஹே கமலநேத்ர மஹாஸமுத்ர
ஸ்நிக்தம் விசாலஹ்ருதயம் ஹி தவேதி ஜானே ।
யோக்யான் நரான் ஹி குரு ந: ஸகலாம்ஸ்ச ப்ருத்வ்யா
விச்வஸ்ய வீர ஸுயதே தவ ஸுப்ரபாதம் ॥

ஸ்ரீ ராமக்ருஷ்ணசரிதே நிதராம் ஹி முக்த :
ஸ்ரீ ராமக்ருஷ்ணமனனே ஸ்திததீ : ஸதா த்வம் ।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராமக்ருஷ்ண பஜனேஷு முதஸ்தயாப்தா :
ஸ்ரீ ராமக்ருஷ்ணமய ஹே தவ ஸுப்ரபாதம் ॥

---

## ஸ்ரீ விவேகானந்த-ப்ரபாத-ப்ராஞ்ஜலி:

ஸமாதிஸ்த : சிவ : ஸ்வலோகே நிர்பரம்
ஜனானாம் க்ரந்தநாத்பவாக்நௌ பீஷணே ।
ப்ரதக்தானாம் ப்ரபோதிதஸ்த்வம் ஹ்யாகத :
விவேகானந்த தே ப்ரபாதே ப்ராஞ்ஜலி : ॥ (1)

நரேந்த்ர : சைஷவே நரேந்த்ரோ யௌவனே
நரேந்த்ர : க்ரீடனே நரேந்த்ர : சிக்ஷணே ।
நரேந்த்ர : பாலனே நரேந்த்ரோ ஹ்யர்பணே
விவேகானந்த தே ப்ரபாதே ப்ராஞ்ஜலி : ॥ (2)

ஹரீந்த்ரஸ்சேஷ்டிதை : கலாக்ஞோ காயனை :
பரிக்ஞானைர்புதோ மஹர்ஷிர்தர்சனை : ।
யதீந்த்ரோऽஸக்தி பிர்பவான் யன்னாஸ்தி கிம்
விவேகானந்த தே ப்ரபாதே ப்ராஞ்ஜலி : ॥ (3)

முமுக்ஷா தர்சிதாऽபிஹம்ஸம் தாவனை:
வினைகாம் பாதுகாம் நிதாந்தோன்மத்தவத் ।
ஸமானாம் தேஹி மே முமுக்ஷாம் மத்குரோ
விவேகானந்த தே ப்ரபாதே ப்ராஞ்ஜலி : ॥ (4)

குரோரரங்க்ர்யுத்பலே ஸ்வமாத்மானம் ததௌ
பரீக்ஷ்யானந்தரம் பஹுப்ரஷ்னைர் ப்ருஷம் ।
விஷுத்தைஸ்ஸேவனைர் பவாம்ஸ்தம் பிப்ரியே
விவேகானந்த தே ப்ரபாதே ப்ராஞ்ஜலி : ॥ (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸுகந்த : ஸ்ரீகுருர் பவான்வாயு : கலு
ஸ தூர்யம் த்வம் ச போ மகோச்சைர் கோஷக : ।
குருர் சூர்யஸ்து ஹே கிலாதர்ஷோ பவான்
விவேகானந்த தே ப்ரபாதே ப்ராஞ்ஜலி : ॥ (6)

ஸ்வதர்ம ஸ்ரேஷ்டதாம் ஸகர்வம் ஸம்ஸதாம்
ஜனானாம் த்ருஷ்டதா த்வயைவாபாஜ்ய ஹோ ।
ஸ்வதர்மோ வைதிகோ ஹ்யனர்கோ தர்ஷித :
விவேகானந்த தே ப்ரபாதே ப்ராஞ்ஜலி : ॥ (7)

ஸ்புலிங்கான் ஸ்போடயன் ஸுதீப்தாக்னிர்யதா
ததைவ த்வம் யதே விகீர்யாமானுஷீம் ।
பரிக்ஞான ப்ரபாமசாரீர் பாரதே
விவேகானந்த தே ப்ரபாதே ப்ராஞ்ஜலி : ॥ (8)

அஹோ ஆகர்ஷணம் தவாஸ்யஸ்யாதுலம்
தவாஹோ பௌருஷம் விராகோ முக்ததா ।
ப்ரகாடம் ப்ரேம ச ஹ்யகாதம் வேதனம்
விவேகானந்த தே ப்ரபாதே ப்ராஞ்ஜலி : ॥ (9)

விமோக்ஷம் ஸ்வாத்மனஸ் சதுர்யோகாத்வபி :
ப்ருதக்வா ஸம்ஹதைர் ஹிதம் லோகஸ்ய ச ।
தவாக்ஞா ஸாதயேதிதி ப்ரீத்யா நர :
விவேகானந்த தே ப்ரபாதே ப்ராஞ்ஜலி : ॥ (10)

யதேऽநூருஸ்தவ ப்ரணாமம் தாஸ்யதி
ப்ரபுல்லம் ஷட்பதை : ப்ரஸுனம் ப்ராவ்ருதம் ।
தவார்த்தம் கோகிலோ மனோக்ஞம் கூஜதி
விவேகானந்த தே ப்ரபாதே ப்ராஞ்ஜலி : ॥ (11)

உஷ:காலே பதே நமஸ்க்ருத்யாஷிஷா
லபேரன் தன்யதாமிதி ஷ்ரத்தாலவ : ।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸமேதாஸ்ஸம்முகே ததேதா தர்ஷனம்
விவேகானந்த தே ப்ரபாதே ப்ராஞ்ஜலி : ॥ *(12)*

ஹிமாத்ரேராஷ்ரமே ஜயந்த்யாம் நிர்மித :
புஜங்கஸ்ரக்விணீதிவ்ருத்தே நூதனே ।
ஸ்தவோ஽யம் ய: படேத் ஸபக்த்யா தம் நர :
ஸ சக்திம் பௌருஷம் விராகம் சார்ஜதி ॥ *(13)*

**— ஸ்ரீ ஹர்ஷானந்த சுவாமிகள்**

---

# ஸ்ரீ விவேகானந்த ஸ்தோத்ரம்

**ராகம் : சாயாகம்பாஜ்** **தாளம் : தேதால்**

மூர்த்த மஹேச்வர-முஜ்ஜ்வல பாஸ்கரம்
இஷ்ட-மமர-நரவந்த்யம் ।
வந்தே வேததனு-முஜ்ஜித-கர்ஹித
காஞ்சன-காமினீ பந்தம் ॥

கோடிபானுகர-தீப்த-ஸிம்ஹ-மஹோ
கடிதட-கௌபீன வந்தம்
அபீரபீ-ஹுங்கார-நாதித-திங்முக ।
ப்ரசண்ட-தாண்டவ-ந்ருத்யம் ॥

புக்தி முக்தி-க்ருபா-கடாக்ஷ-ப்ரேக்ஷணம்
அகதல-விதலன-தக்ஷம் ।
பாலசந்த்ர-தர-மிந்து-வந்த்யமிஹ
நௌமி குரு-விவேகானந்தம் ॥

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ விவேகானந்தர் பாடல்

ராகம் : மோஹனம் தாளம்: ஆதி

பல்லவி

ஞானம் தழைக்கச் செய்தானே-ஸமரஸ
ஞானம் தழைக்கச் செய்தானே

அனுபல்லவி

தானந்தமில்லா பரமானந்தம் நிலைபெற-விவேக
ஆனந்த கேசரி அவனி உய்ந்திட நல்கி (ஞானம்)

சரணம்

தானம் தவங்கள் எல்லாம் தன்னுயிர்போல் மன்னுயிரை
பேணும் திறங்களன்றே பெரிய பொருளைச் சொல்லி
மோனம் கடந்த பொருள் முக்தி அளிக்கும் தெய்வ
ஆனந்த வாரிதியை அடைய வழி வகுத்தே (ஞானம்)

---

ராகம் : கானடா தாளம் : ஆதி

பல்லவி

வணங்கி அடிபணிந்தோம் விவேகானந்த!
வந்தே நமோநம : என்றுனை வாழ்த்தியே (வ)

சரணம்

பார்முழுதும் பணிந்து நின்ற பாரதத்தின் ஸுதனே
பாரிலெங்கும் வெற்றி கொண்ட பாரதநன் மகனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீறுகொண் டெழச்செய்தாய் வேதாந்த சிங்கமே
வீரகர்ஜனை புரிந்த விஜயதீர சிங்கமே! (வ)

கர்மஞான பக்தியோக கனியைத்தந்த தேசிகா-நின்
கருணையாலே வாழ்வுகண்டோம் காத்தருள்வாய் குருபரா
ஜீவஸேவை செய்வதே சிவபூஜையாகுமென்றுணர்த்தி
பாவமோடு ஆற்றவே பணித்தனை தயாபரா! (வ)

ஆன்மஞான வாழ்வினிலே ஆழவழி காட்டினாய்
ஆனபெரு வாணியாலே அருளமுதம் ஊட்டினாய்
ஏற்றவரைக் கொண்டுநல்ல இயக்கமதை நாட்டினாய்
தேற்றியுனை சரணடைந்தோம் தீரவிஸ்வ நாயகா! (வ)

**— ஸ்ரீரங்கானந்த சுவாமிகள்**

---

**ராகம் : கானடா** **தாளம் : ஆதி**

மங்காப் புகழ் சேர் வங்கநாடு
தந்தவி வேகா னந்தா சரணம்
எங்கும் கீர்த்தி தங்க வைத்தாய்
எங்கள் வேந்தா சரணம் சரணம்

ஸ்ரீராம க்ருஷ்ண சீடருள் தலைவனாய்
சீருடன் திகழ்ந்த செல்வா சரணம்
பாரதப் பெருமை பாரினில் பரப்பிய
பக்தனே முக்தனே சரணம் சரணம்

அன்னை சாரதை அன்பின் மைந்தனாய்
அருளொளி பரப்பிய அருணா சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னை அவர்புகழ் எங்கும் விளங்கவே
சங்கம் அமைத்த சதுரா சரணம்

---

**ராகம் : கானடா** **தாளம் : ஆதி**

சீர்பெருகு வங்கநிலம் சிறக்க வந்தோன்
ஸ்ரீராம கிருஷ்ணபதம் சிரமேற் கொண்டோன்
பார்புகழும் வேதாந்தப் பயிர் வளர்த்தோன்
பாரதத்தின் பெருமையெங்கும் பரவச்செய்தோன்
வேர்பறிய எதிர்வாதம் விரித்துக்கூறி
வீண்வாதம் செய்பவரை வென்று வெற்றித்
தார்புனைந்த தவயோகி விவேகானந்தன்
தாள்பணிந்து வாழ்வோமித் தரணி மீதே

**— கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை**

---

# ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள்

## (திருத்தாண்டகம்)

தத்தர்செய்த தனித்தவத்தால் அவதரித்துத்
தன்மயத்தில் சின்மயமாய் தன்மைபெற்றே
பித்தனென்ற பேர்படைத்த ராமகிருஷ்ணப்
பெருமானின் திருவருளுக் குரியனாகி
அத்துவித நெறிவிளக்கும் குரவனாயெம்
ஆன்றோர்கள் தேடிவைத்த ஞானப்பேற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்திசையும் எடுத்தளித்த விவேகானந்த
ஏந்தல்பதம் ஏத்திநாம் வாழுவோமே.

— திரு.க. இராமசந்திரா

---

**ராகம் : மோஹனம்** **தாளம் : ஆதி**

தேவரெலாந் திறைகொடுக்கும் தேவ தேவன்
திகழ்முனிவர் வியந்தருளுஞ் சீர்மை சான்றோன்
யாவரெல்லாம் இகல்விளைத்து நின்றார் தம்மை
இன்னிசையஞ் சொற்படையால் வென்றமேலோன்

தாயகத்து வேதாந்தக் கடல்க டைந்து
தரணியெல்லாம் ஞானவமு தளித்தசெல்வன்
சேயகத்துத் தூய்மையெனத் தூய்மை மிக்கோன்
சேயகத்தும் பெயர்விளங்க நின்ற தோன்றல்

பிறமதங்க ளெனுமதங்கொள் வேழக் கூட்டம்
பிறழ்ந்தொடுங்க அடல்கொண்ட பெருமைச்சிங்கம்
அறமதெங்கு மருளினொடு விளங்கும் வண்ணம்
அருமொழிகள் தெளிந்துரைத்த அன்பின் வள்ளல்

வேதமொழி நுட்பங்கள் விளக்கி ஞான
வேட்கையுயிர் எய்தவருள் செய்த ஏந்தல்
நாதர்திருத் 'தேவர்'திரு அடிகள் சார்ந்து
நயந்திகழும் பேரின்பந் துய்த்த அண்ணல்

உயர்வுடைய பிரம்மசரி யத்தின் மாண்பை
உலகறியச் செய்ததனி ஞான வீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயர்வில்விவே கானந்த அடிகள் பாத
அருள்மலரின் மணமளைந்து வாழ்கு வோமே.

---

ராகம் : காபி தாளம் : ஆதி

பல்லவி

வந்தே விவேகானந்தம்-ஜயஜயேதி (வ)

அனுபல்லவி

வேதாந்த விக்ஞான விவேக தீபம்
விவேக தானைக விநோத சீலம் (வ)

சரணம்

பரமயோக த்யாகசீல பரமவைராக்ய தீபம்
தர்மரூப யதிராஜ ராமகிருஷ்ண ஸாதனம்
பரமஹம்ஸ தேவதத்த ப்ரேமரூப பாஸ்கரம்
பரமஞான விவேகானந்த ப்ரேமபாவ குருபரம்! (வ)

— ஸ்ரீரங்கானந்த சுவாமிகள்

---

ஞான சூர்ய ஸ்வாமி உனக்கு போற்றி போற்றி போற்றி ஓம்
ப்ரேம சந்த்ர ஸ்வாமி உனக்கு போற்றி போற்றி போற்றி ஓம்
கர்ம வீர ஸ்வாமி உனக்கு போற்றி போற்றி போற்றி ஓம்
தர்ம மூர்த்தி ஸ்வாமி உனக்கு போற்றி போற்றி போற்றி ஓம்

சாகரம் போல ஆழ பாவ ஸ்வாமி உனக்கு போற்றி ஓம்
வானம் போல விரிந்த மனம் ஸ்வாமி உனக்கு போற்றி ஓம்
கங்கை போல தூய வாழ்வு ஸ்வாமி உனக்கு போற்றி ஓம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுது போல மதுர வசனம் ஸ்வாமி உனக்கு போற்றி ஓம்

அருள் எமக்கு சுத்தபுத்தி ஸ்வாமி உனக்கு போற்றி ஓம்
அருள் எமக்கு ச்ரத்தை அன்பு ஸ்வாமி உனக்கு போற்றி ஓம்
சகல லோக மான்ய ஸ்வாமி போற்றி உனக்கு போற்றி ஓம்
விவேகானந்த ரூபம்கொண்ட குருதேவ சக்தி ஓம்

போற்றி போற்றி போற்றி ஓம் விவேகானந்தா போற்றி ஓம்

---

## ஸ்ரீ விவேகானந்த சுவாமி ராகமாலா

**ராகம் : ராகமாலிகை** **தாளம் : ஆதி**

**சண்முகப்ரியா**

ஆண்மை உருக்கொண்ட அந்தணன் - எங்கள்
அண்ணல் விவேகானந்தன்
மாண்பை அளந்திட எண்ணினால் - இந்த
மண்ணையும் விண்ணையும் பண்ணலாம் (ஆண்மை)

**மோகனம்**

காமனைப்போன்ற அழகினான் - பொல்லாக்
காமத்தை வென்று பழகினான்
சோமனைப் போன்ற குளிர்ந்தவன் - ஞான
சூரியன் போலக் கிளர்ந்தவன் (ஆண்மை)

**இந்தோளம்**

வீரத்துறவறம் நாட்டினான் - திண்ணை
வீணர் வேதாந்தத்தை ஓட்டினான்
தீரச்செயல்களை நாடினான் - இந்த
தேசநிலைகண்டு வாடினான் (ஆண்மை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காபி

பெண்ணின் பெருமையைப் போற்றினான் - ஆண்கள்
பேடித்தனங்க ளைத் தூற்றினான்
மண்ணில் சுகங்களை விட்டவன் - ஏழை
மக்களுக்காய்க் கண்ணீர் கொட்டினான் (ஆண்மை)

### கேதாரகௌளை

அடிமை மனதை அகற்றினான் - உயிர்
அன்பின் உறுதி புகட்டினான்
கொடுமை அகற்றிட முந்திடும் - தவக்
கூட்டத்தை நாட்டுக்குத் தந்தவன் (ஆண்மை)

---

**ராகம் : மோஹனம்** **தாளம் : ஆதி**

### பல்லவி

மோஹன ராகத்திலே உன்னைப் பாடிப் புகழ்ந்து
துதிக்க வரமருள்வாய்! வீர தீர ஸ்வாமி விவேகானந்தா

### அனுபல்லவி

அகந்தை நீக்கி உன் அருகில் இருந்தால்
உருகாதோ! மனம் உருகாதோ (வீர)

### சரணம்

பரமஹம்சரின் பேரருள் சீடரே
பாரதப் பண்பினை-பெருமையை வளர்த்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரில் ஸர்வ மத தர்மங்களை
பரப்பிய - ஆத்ம ஞான போதகரே (வீர)

---

அகிலம் போற்றும் சுவாமிஜி வா வா வா
ஆசையை அழிக்கவே வா வா வா
இன்பவெள்ளம் பொங்கவே வா வா வா
ஈகையை அளித்திட வா வா வா
உன்னையே எண்ணிட வா வா வா
ஊழ்வினை அறுத்திட வா வா வா
எங்கள்குல தெய்வமே வா வா வா
ஏழைதுயர் தீர்த்திட வா வா வா
ஐயம் அச்சம் அகற்றிட வா வா வா
ஒப்புயர் திலகமாய் வா வா வா
ஓதும்திரு நாமமாக வா வா வா
ஔவியம் பேய் அகற்றிட வா வா வா
ராமகிருஷ்ண நாமத்தை எங்கெங்கும்
நிலைக்கச் செய்த ஞானியே வா வா வா

---

ஜயகுரு தேவா ஜயகுரு தேவா
ஜயகுருதேவா ஜய ஜய ஹே
முமுக்ஷுசரண்யா மோக்ஷப்ரதாயக
மோஹனமூர்த்தே ஜய ஜய ஹே
சிவாவதார சிஷ்ய அபயங்கர
ச்ரிதஜன வத்ஸல ஜய ஜய ஹே
விவேகபூஷண விக்ஞான நிலைய
விவேகானந்தா ஜய ஜய ஹே

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தா விவேகானந்தா
விவேகானந்த சுவாமி விவேகானந்தா

அற்புத சரிதனே விவேகானந்தா
ஆனந்த ரூபனே விவேகானந்தா (விவே)

இருள்வினை போக்கும் விவேகானந்தா
ஈச்வர கோடி விவேகானந்தா (விவே)

உத்தம குருவே விவேகானந்தா
ஊக்கம் தருவாய் விவேகானந்தா (விவே)

எழில் மிகு ரூபா விவேகானந்தா
ஏதம் தவிர்த்தெனை ஆண்டிடுவாய் (விவே)

ஐயனே சுவாமி விவேகானந்தா
ஹரி ஹர மூர்த்தே விவேகானந்தா (விவே)

ஒப்பில்லா வீரா விவேகானந்தா
ஓங்கார ரூபனே விவேகானந்தா (விவே)

---

ஜெய ஜெய ஓம் ஸ்ரீ விவேகானந்தா
ஜெகமெல்லாம் போற்றும் ஸ்வாமிஜீ
ராமக்ருஷ்ணர் போற்றும் நரேந்திரா
நாடியே வந்தோம் உன்னடியே

விஸ்வநாதர் ஆசியால்
புவனேஸ்வரியின் புத்திரராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரேந்திரர் என்னும் நாமம் கொண்டு
பாரத மண்ணிடை அவதரித்தார்

சாதனை பலவும் செய்துமே
கடவுளைக் கண்ட மூர்த்தியை
சோதனை யாவும் செய்துமே
குருவாய் ஏற்ற சீடர் இவர்

அஞ்சா நெஞ்சங் கொண்டவராம்
அசையா உறுதி படைத்தவராம்
இன்னல்கள் பலவும் ஏற்றுமே
ராமக்ருஷ்ண மடமமைத்த வீரரிவர்

---

விவேகானந்தரை நினைத்திடுவோம் ।
விவேக வழியில் வாழ்ந்திடுவோம் ॥

தெய்வீகம் மனிதனின் இயல்பென்போம்
தெய்வத்தொண்டில் சிறந்திடுவோம் ।
விவேகானந்தரின் நெறியில் நின்றே
ஆண்மையுடன் நாம் வாழ்ந்திடுவோம் ॥

தொண்டும் துறவும் போற்றிடுவோம்
இதயத்தைக் கோவில் ஆக்கிடுவோம் ।
விவேகானந்தரின் குரலை முழங்கி
சிங்கமென நாம் சிலிர்த்திடுவோம் ॥

சுயநலம் களைந்தே வாழ்ந்திடுவோம்
பொதுநலம் பேணி வாழ்ந்திடுவோம் ।
விவேகானந்தரின் கொடியை ஏந்தி
தியாகத்தை உருவாய் விளங்கிடுவோம் ॥

முனிவர்கள் பரம்பரை நாம் என்போம்
பக்தியும் முக்தியும் சேர்த்திடுவோம் ।
விவேகானந்தரின் படையாய் விளங்கி
மக்கள் எங்கும் பரப்பிடுவோம். ॥

---

ப-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சிவன் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

## முதலாம் திருமுறை

**பண் : வியாழக்குறிஞ்சி ராகம் : நாட்டை தாளம் : ஆதி**

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை யிறையே.

---

## முதல் தேவாரப் பதிகம்

**பண் : நட்டபாடை ராகம் : நாட்டை தாளம் : ரூபகம்**

தோடுடையசெவியன் விடையேறியோர்
தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென் உள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்த அருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே.

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையால்தொழுதேத்தப்
பெற்றம்ஊர்ந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர் மேய
பெருநெறியபிர மாபுரம்மேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்உரை செய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தல்எளிதாமே.

---

**பண் : தக்கராகம் ராகம் : காம்போஜி தாளம் : ரூபகம்**

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்டவுருவ மென்கொலோ.

பெண்தான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக்காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டான் நஞ்சை உலக முய்யவே.

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே.

---

**பண் : தக்கேசி ராகம் : நவரோஜ் தாளம் : ஆதி**

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதா எனவும் நக்காஎனவும் நம்பாஎனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரமன்னுயர்கோட் டுலறுகூகை யலறும்மயானத்தில்
இரவிற்பூதம் பாடஆடி யெழிலாரலர்மேலைப்
பிரமன்தலையின் நறவமேற்ற பெம்மான்எமையாளும்
பரமன்பகவன் பரமேச்சுவரன் பழனநகராரே.

---

பண் : பழந்தக்க ராகம் தாளம் : திரிபுடை

ராகம் : சுத்தசாவேரி

தாயும்நீயே தந்தைநீயே சங்கரனே யடியேன்
ஆயுநின்பால் அன்புசெய்வான் ஆதரிக்கின்றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னுள் ஐவர் நின்றொன்றலொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவலம்மே யவனே.

---

பண் : வியாழக்குறிஞ்சி தாளம் : ஆதி

ராகம் : சௌராஷ்ட்ரம்

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்ற வும்பரப்
பாலேசேர்வா யேனோர்கான் பயில்கண
முனிவர்களுஞ்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்மங்கை தன்னொடுஞ்
சேர்வார்நாள்நாள் நீள்கயிலைத்திகழ்
தருபரிசதெலாஞ்
சந்தித்தே யிந்தப்பார் சனங்கள்நின்று தங்கணால்
தாமேகாணா வாழ்வாரத் தகவுசெய் தவனதிடங்
கந்தத்தால் எண்டிக்குங் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார்பூவார் சீர்மேவுங் கழுமல வளநகரே.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் : குறிஞ்சி தாளம் : திரிபுடை

தேனினும் இனியர் பாலன நீற்றர்
தீங்கரும்பனையர்தந் திருவடிதொழுவார்
ஊன்நயந்துருக உவகைகள் தருவார்
உச்சிமேலுறைபவர் ஒன்றலாதூரார்
வானகமிறந்து வையகம் வணங்க
வயங்கொளநிற்பதோர் வடிவினையுடையார்
ஆனையின்உரிவை போர்த்தஎம் அடிகள்
அச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே !

---

# இரண்டாம் திருமுறை

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமேயிருங்கடல்
வையத்து
முன்னநீ புரிநல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ் திருவலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடுமதனாலே.

---

பண் : இந்தளம் தாளம் : ஆதி
ராகம் : நாதநாமக்ரியா

சதுரம் மறைதான் துதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங் கருத்தாலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானோர் மறைமா தவத்தோர் வழிபட்ட
தேனார் பொழில்சூழ் மறைக்காட் டுறைசெல்வா
ஏனோர் தொழுதேத்த இருந்தநீ யென்கொல்
கானார் கடுவே டுவனா னகருத்தே.

---

பண் : சீகாமரம் ராகம் : ஆரபி தாளம் : ஆதி

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே.

திறங்கொண்ட அடியார்மேல் தீவினைநோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்மம் உரைத்தபிரான் அமருமிடம்
மறங்கொண்டங் கிராவணன்றன் வலிகருதி வந்தானைப்
புறங்கண்ட சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே.

---

## திருநீற்றுப் பதிகம்

பண் : காந்தாரம் தாளம் : ரூபகம்
ராகம் : நவரோஜ்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே.

முத்தி தருவது நீறு முனிவரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே.

---

பண் : நட்டராகம் தாளம் : ஆதி

ராகம் : பந்துவராளி

விண்க ளார்தொழும் விளக்கினைத் துளக்கிலா விகிர்தனை
விழவாரும்
மண்க ளார்துதித் தன்பரா யின்புறும் வள்ளலை மருவித்தம்
கண்க ளார்தரக் கண்டுநங் கடிக்குளத் துறைதரு கற்பகத்தைப்
பண்க ளார்தரப் பாடுவார் கேடிலார் பழியிலர் புகழாமே.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண் : நட்டராகம் ராகம் : பந்துவராளி தாளம் : ஆதி**

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்
லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில்மஞ்ஞை நடமிடு
மாதோட்டம்
தொண்டர் நாள்தொறுந் துதிசெய அருள் செய்கே
தீச்சர மதுதானே.

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந் தெடுத்தவன்
முடிதிண்தோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த தலைவனார்
கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும் பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடும் அடியவ ரிறைஞ்சுகே தீச்சரத் துள்ளாரே.

---

திருச்சிற்றம்பலம்

# கோளறு திருப்பதிகம்

**பண்-பியந்தைக் காந்தாரம்**

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றோ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கை யோடு வடபாலிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய் தன்று விடைமே லிருந்து
மடவாள்த னோடும் உடனாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழி லங்கை அரையன்த னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொள் ஆலைவிளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதி ஆய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்

---

# மூன்றாம் திருமுறை

**பண் : காந்தாரபஞ்சமம்** **தாளம் : ஆதி**
**ராகம் : கேதாரகௌளை**

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோ வுனதின் னருள் ஆவடுதுறை யரனே. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழினுஞ் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேனல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே

இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை யரனே. 2

நனவினுங் கனவினும் நம்பாவுன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே

இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை யரனே. 3

---

பண் : கௌசிகம் ராகம் : பைரவி தாளம் : ஆதி

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே.

நந்தி நாமம் நமச்சிவா யவெனும்
சந்தை யால்தமிழ் ஞானசம் பந்தன்சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே.

---

பண் : கௌசிகம் ராகம் : பைரவி தாளம் : ரூபகம்

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாய தென்ன கொள்கையே.

குற்றம் நீ குணங்கள்நீ கூடலாவ வாயிலாய்
சுற்றம் நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதி நீ
கற்றநூற் கருத்தும்நீ யருத்தமின்ப மென்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென்மு கம்மனே.

கோலமாய நீள்மதிற் கூடல்ஆல வாயிலாய்
பாலனாய தொண்டுசெய்து பண்டுமின்றும் உன்னையே
நீலமாய கண்டனே நின்னையன்றி நித்தலும்
சீலமாய சிந்தையில் தேர்வதில்லை தேவரே.

---

பண் : கௌசிகம் ராகம் : பைரவி தாளம் : ரூபகம்

வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவில் இன்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதும் ஏதம் இல்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரமாய மாதராள் தானோர்பாக மாயினான்
ஈரமாய புன்சடை யேற்றதிங்கள் சூடினான்
ஆரமாய மார்புடை யானைக்காவில் அண்ணலை
வாரமாய் வணங்குவார் வல்வினைகள் மாயுமே.

---

## திருக்கோணமலைப் பதிகம்

### பண் : புறநீர்மை

நிரைகழலரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடலோத நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந்தாரே. 1

பழித்திளங் கங்கை சடையிடைவைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றும் செழுங்கடற்றரளம்
செம்பொனும் இப்பியும் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்கும்
கோணமா மலையமர்ந்தாரே. 2

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பலவேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரே. 3

எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறியாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும் புகழாளர்
கோணமா மலையமர்ந்தாரே. 4

குற்றமில் லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமுமாகித் தொல்வினை அடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. 5

---

பண் : பஞ்சமம் தாளம் : ரூபகம்

ராகம் : புன்னாகவராளி

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே.

கூராரல் இரைதேர்ந்து குளமுலவி வயல்வாழும்
தாராவே மடநாராய் தமியேற்கொன் றுரையீரே
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன் பெருமான்றன் அருளொருநாட் பெறலாமே.

---

பண் : பழம்பஞ்சுரம் தாளம் : ஆதி

ராகம் : சங்கராபரணம்

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே.

---

பண் : கொல்லி ராகம் : நவரோஜ் தாளம் : ஆதி

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்
## நாலாம் திருமுறை

பண் : கொல்லி　　ராகம் : நவரோஜ்　　தாளம் : ஆதி

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
　　கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
　　பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
　　குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
　　வீரட்டா னத்துறை யம்மானே. 1

நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன்
　　நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம் இது வொப்பது கண்டறியேன்
　　வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
　　நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலு மென்னீ ரதிகைக்கெடில
　　வீரட்டா னத்துறை யம்மானே. 2

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
　　தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்
　　உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
　　உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலந்தேனடி யேனதி கைக்கெடில
# ஸ்ரீ திவ்யப் பிரபந்தம்

## திருப்பல்லாண்டு

### காப்பு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா; உன்
சேவடி செவ்வி திருக்காப்பு.

அடியோமோடும் நின்னொடும் பிரிவு இன்றி
ஆயிரம் பல்லாண்டு;
வடிவாய் நின் வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு;
வடிவார் சோதி வலத்து உறையும் சுடர்
ஆழியும் பல்லாண்டு;
படைபோர் புக்கு முழங்கும் அப் பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே.

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி
திகழ் திருச்சக்கரத்தின்
கோயிற் பொறியாலே ஒன்றுண்டு நின்று
குடிகுடி ஆட்சி செய்கின்றோம்;
மாயப் பொருபடை வாணனை ஆயிரந்
தோளும் பொழி குருதி
பாயச் சுழற்றிய ஆழி வல்லானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே.

— ஸ்ரீ பெரியாழ்வார் (திருமொழி)

---

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!
நெடியானே வேங்கடவா! நின் கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே.

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல், மாயத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளாத் துயர் தரினும் வித்துவக்கோட்டு அம்மா! நீ,
ஆளா உனது அருளே பார்ப்பன் அடியேனே.

வெங்கண்-திண்களிறு அடர்த்தாய்! வித்துவக்கோட்டு
அம்மானே!
எங்கு போய் உய்கேன்? உன் இணையடியே
அடையல் அல்லால்;
எங்கும் போய்க் கரை காணாது எறிகடல்வாய்
மீண்டு ஏயும்
வங்கத்தின் கூம்பு ஏறும் மாப் பறவை போன்றேனே.

— ஸ்ரீ குலசேகர ஆழ்வார் (பெருமாள் திருமொழி)

---

## ஸ்ரீ ஆண்டாள் ஸ்துதி

நீலா துங்க ஸ்தனகிரி தடீ ஸுப்தம்
உத்போத்ய க்ருஷ்ணம்!
பாரார்த்த்யம் ஸ்வம் ச்ருதி சத சிரஸ்-
ஸித்த-மத்யா பயந்தீ!
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகலிதம்
யா பாலாத்-க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம்
பூய ஏவாஸ்து பூய : !!

— ஸ்ரீ பராசர பட்டர்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த

# திருப்பாவை

ராகம் : மலையமாருதம் (அ) நாட்ட  தாளம் : ஆதி (அ) அடதாளம்

1. மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்;
நீராடப் போதுவீர் போதுமினோ, நேரிழையீர்!
சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர் வேற் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏர் ஆர்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார் மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்;
பாரோர் புகழப் படிந்து—ஏலோர் எம்பாவாய்.

(பூபாளம்-ஆதி (அ) கௌளை-மிஸ்ர சாபு)

2. வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ: பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடி பாடி,
நெய் உண்ணோம், பால் உண்ணோம், நாட்காலே நீராடி,
மையிட்டு எழுதோம், மலர் இட்டு நாம் முடியோம்,
செய்யாதன செய்யோம், தீக்குறளை சென்று ஓதோம்
ஐயமும் பிச்சையும் ஆம்தனையும் கைகாட்டி,
உய்யுமாறு எண்ணி உகந்து-ஏலோர் எம்பாவாய்.

(ஆரபி-ஆதி (அ) பந்துவராளி-த்ரிபுடை)

3. ஓங்கி உலகு அளந்த உத்தமன் பேர் பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீங்கு இன்றி நாடு எல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கு இருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள்:
நீங்காத செல்வம் நிறைந்து—ஏலோர் எம்பாவாய்.

(வராளி (அ) காம்போஜி-ஆதி)

4. ஆழி மழைக் கண்ணா! ஒன்றும் நீ கை கரவேல்;
ஆழியுள் புக்கு, முகந்துகொடு, ஆர்த்து ஏறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்து,
பாழியந் தோள் உடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்று அதிர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய்: நாங்களும்
மார்கழி நீர் ஆடமகிழ்ந்து—ஏலோர் எம்பாவாய்.

(மணிரங்கு-ரூபகம் (அ) ஸ்ரீராகம் – ஆதி)

5. மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணி-விளக்கைத்
தாயைக் குடல்-விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது,
வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசு ஆகும்; செப்பு—ஏலோர் எம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஸுநாதவிநோதினி-ஆதி (அ) சங்கராபரணம்-மிஸ்ர சாபு)

6. புள்ளும் சிலம்பினகாண், புள்-அரையன் கோயிலில்
வெள்ளை விளி சங்கின் பேர்-அரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சு உண்டு
கள்ளச் சகடம் கலக்கு அழியக் கால் ஓச்சி
வெள்ளத்து அரவிற் துயில் அமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரி என்ற பேர்-அரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்து-ஏலோர் எம்பாவாய்.

(பூபாளம் – ரூபகம் (அ) பைரவி-மிஸ்ர சாபு)

7. கீசு கீசு என்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசினபேச்சு-அரவம்கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாசநறுங் குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிர்-அரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?
தேசம் உடையாய்! திற–ஏலோர் எம்பாவாய்.

(ஷண்முகப்பிரியா–ஆதி (அ) தன்யாசி – கண்ட சாபு)

8. கீழ்வானம் வெள்ளென்று, எருமை சிறு வீடு
மேய்வான் பரந்தன காண்; மிக்கு உள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம்; கோதுகலம் உடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவாய்! எழுந்திராய், பாடிப் பறை கொண்டு
மா வாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆவா என்று ஆராய்ந்து அருள்–ஏலோர் எம்பாவாய்.

**(ஸாரங்க (அ) ஹமீர்கல்யாணி – ஆதி)**

9. தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கு எரியத்
தூமம் கமழத் துயில்–அணைமேல் கண்வளரும்,
மாமான் மகளே! மணிக் கதவம் தாள் திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ? உன் மகள் தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மா மாயன் மாதவன் வைகுந்தன் என்று என்று
நாமம் பலவும் நவின்று–ஏலோர் எம்பாவாய்.

**(ஸாவேரி (அ) தோடி – ஆதி)**

10. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மானாய்
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால்; பண்டு ஒருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகர்ணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்துதிற–ஏலோர் எம்பாவாய்.

**(இந்தோளம்–த்ரிபுடை (அ) உசேனி–மிஸ்ர சாபு)**

11. கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து
செற்றார் திறல் அழியச் சென்று செருச் செய்யும்
குற்றம் ஒன்று இல்லாத கோவலர்தம் பொற்கொடியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றரவு-அல்குற் புனமயிலே! போதராய்,
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்து நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர் பாடச்
சிற்றாதே பேசாதே, செல்லப் பெண்டாட்டி! நீ
எற்றுக்கு உறங்கும் பொருள்?—ஏலோர் எம்பாவாய்.

(கேதாரகௌளை—ஆதி)

12. கனைத்து இளங்கற்று-எருமை கன்றுக்கு இரங்கி
நினைத்து முலை வழியே நின்று பால் சோர
நனைத்து இல்லம்சேறு ஆக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித் தலை வீழ நின் வாசற் கடை பற்றி,
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கு இனியானைப் பாடவும் நீ வாய் திறவாய்!
இனித் தான் எழுந்திராய், ஈது என்ன பேர் உறக்கம்
அனைத்து இல்லத்தாரும் அறிந்து-ஏலோர் எம்பாவாய்.

(அடாணா – ரூபகம்)

13. புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப் போய்
பிள்ளைகள் எல்லாம் பாவைக்-களம் புக்கார்;
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று!
புள்ளும் சிலம்பின காண்; போது-அரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்து—ஏலோர் எம்பாவாய்.

(பிலஹரி (அ) ஆனந்த பைரவி—ஆதி)

14. உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர்வாய் நெகிழ்ந்து, ஆம்பல்வாய் கூம்பினகாண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கற்பொடிக்கூறை வெண்பற் தவத்தவர்
தங்கள் திருக்கோயிற் சங்கிடுவான் போதந்தார்;
எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடு-ஏலோர் எம்பாவாய்.

**(பேகட-ரூபகம் (அ) ஸௌராஷ்ட்ரம்-அடதாளம்)**

15. எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ!
சில்என்று அழையேன்மின், நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லை உன் கட்டுரைகள், பண்டே உன் வாய் அறிதும்!
வல்லீர்கள் நீங்களே நானே தான் ஆயிடுக!
ஒல்லை நீ போதாய், உனக்கு என்ன வேறு உடையை?
எல்லாரும் போந்தாரோ? போந்தார், போந்து
எண்ணிக்கொள்!
வல் ஆனை கொன்றானை மாற்றாரை மாற்று அழிக்க
வல்லானை மாயனைப் பாடு-ஏலோர் எம்பாவாய்.

**(மோஹனம் (அ) யமுனாகல்யாணி – ஆதி)**

16. நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில் காப்பானே! கொடித் தோன்றும் தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள் திறவாய்,
ஆயர் சிறுமியரோமுக்கு அறை பறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்;
தூயோமாய் வந்தோம், துயிலெழப் பாடுவான்;
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே, அம்மா! நீ
நேய நிலைக் கதவம் நீக்கு-ஏலோர் எம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கல்யாணி - ரூபகம் (அ) யமுனா கல்யாணி - கண்டசாபு)

17. அம்பரமே தண்ணீரே சோறே அறஞ் செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா! எழுந்திராய்;
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே! குலவிளக்கே
எம்பெருமாட்டி! யசோதாய்! அறிவுறாய்;
அம்பரம் ஊடு அறுத்து ஓங்கி உலகு அளந்த
உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய்;
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கு - ஏலோர் எம்பாவாய்.

(ஸஹானா (அ) ஸாவேரி - ஆதி)

18. உந்து மத களிற்றன்—ஓடாத தோள்—வலியன்
நந்த கோபாலன் மருமகளே; நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடை திறவாய்
வந்து எங்கும் கோழி அழைத்தன காண், மாதவிப்
பந்தர்மேல் பல்கால் குயில்—இனங்கள் கூவின காண்
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக் கையால் சீர் ஆர் வளைஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்து—ஏலோர் எம்பாவாய்.

(ஆனந்த பைரவி (அ) ஸாவேரி—ஆதி)

19. குத்து விளக்கு எரியக் கோட்டுக்காற் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச—சயனத்தின் மேல் ஏறிக்
கொத்து அலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர் மார்பா! வாய்திறவாய்
மைத் தடங்கண்ணியாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயில் எழ ஒட்டாய் காண்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை யேலும் பிரிவு ஆற்றகில்லாயால்;
தத்துவம் அன்று தகவு—ஏலோர் எம்பாவாய்.

(பீம்ப்ளாஸ் (அ) செஞ்சுருட்டி—ஆதி)

20. முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயில் எழாய்
செப்பம் உடையாய்! திறல் உடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயில் எழாய்;
செப்பு அன்ன மென் முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயில் எழாய்!
உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை
இப்போதே எம்மைநீர் ஆட்டு—ஏலோர் எம்பாவாய்.

(கானடா (அ) ஆதி நாதநாமக்ரியா-மிஸ்ர சாபு)

21. ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீது அளிப்ப
மாற்றாதே பால் சொரியும் வள்ளற் பெரும் பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே; அறிவுறாய்;
ஊற்றம் உடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே துயில் எழாய்!
மாற்றார் உனக்கு வலி தொலைந்து உன் வாசற் கண்
ஆற்றாது வந்து உன் அடிபணியுமா போலே
போற்றி யாம் வந்தோம் புகழ்ந்து—ஏலோர் எம்பாவாய்.

(பைரவி—ஆதி (அ) யமுனா கல்யாணி—மிஸ்ர சாபு)

22. அங்கண் மா ஞாலத்து அரசர் அபிமான
பங்கமாய் வந்து நின் பள்ளிக்கட்டிற் கீழே
சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்;
கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப் போலே
செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்
அங்கண் இரண்டும் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல்,
எங்கள் மேல் சாபம் இழிந்து—ஏலோர் எம்பாவாய்.

(சுப—பந்துவராளி (அ) பிலஹரி—ஆதி)

23. மாரி மலை முழைஞ்சில் மன்னிக்கிடந்து உறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமாப் போலே நீ பூவைப்பூ வண்ணா! உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளி, கோப்புஉடைய
சீரிய சிங்காசனத்து இருந்து, யாம் வந்த
காரியம் ஆராய்ந்து அருள்—ஏலோர் எம்பாவாய்.

(ஸிந்துபைரவி (அ) பியாகட—ஆதி)

24. அன்று இவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி!
சென்று அங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி!
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி!
கன்று குணிலா எறிந்தாய்! கழல் போற்றி!
குன்று குடையா எடுத்தாய்! குணம் போற்றி!
வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி!
என்று என்று உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கு—ஏலோர் எம்பாவாய்.

(பேஹாக் (அ) சங்கராபரணம்—ஆதி)

25. ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்
தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பு என்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம்: பறை தருதி யாகில்,
திருத் தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி
வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்து—ஏலோர் எம்பாவாய்.

(குந்தலவராளி (அ) ஆரபி: ஆதி)

26. மாலே! மணிவண்ணா மார்கழி நீர் ஆடுவான்
மேலையோர் செய்வனகள் வேண்டுவன, கேட்டியேல்;
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடு உடையனவே;
சாலப் பெரும் பறையே, பல்லாண்டு இசைப்பாரே
கோல விளக்கே, கொடியே விதானமே;
ஆலின் இலையாய்! அருள்—ஏலோர் எம்பாவாய்.

அமிர்த வர்ஷினி: ஆதி (அ) பூர்வி கல்யாணி மிஸ்ர: சாபு)

27. கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம் பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப் பூவே,
பாடகமே என்று அனைய பல்கலனும் யாம் அணிவோம்;
ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற் சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்து—ஏலோர் எம்பாவாய்.

(பாகேஸ்ரீ (அ) காம்போஜி: ஆதி)

28. கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்து உண்போம்;
அறிவு ஒன்றும் இல்லாத ஆய்க் குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவு ஒன்றும் இல்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறியருளாதே
இறைவா! நீ தாராய் பறை—ஏலோர் எம்பாவாய்.

**(ஸிந்துபைரவி : ஆதி (அ) மத்யமாவதி மிஸ்ர சாபு)**

29. சிற்றஞ் சிறுகாலே வந்து உன்னைச் சேவித்து உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்திற் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது;
இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்று—ஏலோர் எம்பாவாய்.

**(சுருட்டி—மிஸ்ர சாபு)**

30. வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் -திருமுகத்துச் சேயிழையார் சென்று இறைஞ்சி
அங்கப் பறைகொண்ட-ஆற்றை அணி புதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கு இப்பரிசு உரைப்பார் ஈரிரண்டு மால் வரைத் தோள்
செங்கண்-திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்.

**திருப்பாவை முற்றும்**
**ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாச்சியார் திருமொழி

ராகம் : ஸௌநாதவிநோதினி தாளம் : ஆதி

என்பு உருகி இன வேல் நெடுங் கண்கள்
இமை பொருந்தா பல நாளும்,
துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பது ஓர்
தோணி பெறாது உழல்கின்றேன்!
அன்பு உடையாரைப் பிரிவு உறு நோயது
நீயும் அறிதி குயிலே!
பொன் புரை மேனிக் கருளக் கொடி உடைப்
புண்ணியனை வரக்கூவாய்.

---

## கனாக்கண்டேன் தோழீ!

ராகம் : ராகமாலிகா தாளம் : ஆதி

(பூபாளம்)

வாரணம் ஆயிரம் சூழ வலஞ்செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்று எதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறம் எங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன், தோழீ! நான்.

(ஸாரங்க)

மத்தளம் கொட்ட, வரி-சங்கம் நின்று ஊத,
முத்து உடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தற் கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன், தோழீ! நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மோஹனம்)

இம்மைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் பற்று ஆவான்,
நம்மை உடையன், நாராயணன் நம்பி
செம்மை உடைய திருக்கையால் தாள் பற்றி
அம்மி மிதிக்கக் கனாக் கண்டேன், தோழீ! நான்.

(பேஹாக்)

குங்குமம் அப்பிக் குளிர் சாந்தம் மட்டித்து
மங்கல வீதி வலம் செய்து, மா மண நீர்
அங்கு அவனோடும் உடன் சென்று, ஆனைமேல்
மஞ்சனம் ஆட்டக் கனாக் கண்டேன், தோழீ! நான்.

— ஸ்ரீ ஆண்டாள்

---

# திருப்பள்ளியெழுச்சி

ராகம் : ராகமாலிகா | தாளம் : ஆதி

(பூபாளம்)

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்து அணைந்தான்;
 கனை இருள் அகன்றது காலை அம் பொழுதாய்;
மது விரிந்து ஒழுகின மாமலர் எல்லாம்;
 வானவர் அரசர்கள் வந்து வந்து ஈண்டி,
எதிர்திசை நிறைந்தனர்; இவரொடும் புகுந்த
 இருங் களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலை-கடல் போன்றுளது எங்கும்;
 அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பிலஹரி)

புலம்பின புட்களும் பூம் பொழில்களின் வாய்;
போயிற்றுக் கங்குல்; புகுந்தது புலரி;
கலந்தது குணதிசைக் கனைகடல் அரவம்;
களி வண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கல் அம் தொடையல் கொண்டு அடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தனர்; ஆதலில், அம்மா!
இலங்கையர்கோன் வழிபாடு செய் கோயில்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே.

(அடாணா)

இரவியர் மணி நெடுந் தேரொடும், இவரோ!
இறையவர் பதினொரு விடையரும், இவரோ!
மருவிய வலியினன் ஆறுமுகன், இவனோ!
மருதரும் வசுக்களும் வந்து வந்து ஈண்டி
புரவியொடு ஆடலும் பாடலும் தேரும்
குமர-தண்டம் புகுந்து ஈண்டிய வெள்ளம்
அருவரை அனைய நின் கோயில் முன், இவரோ!
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.

— ஸ்ரீ தொண்டரடிப்பொடி ஆழ்வார்

## திரு அருள்மொழிகள்

வையம் தகளியா வார் கடலே நெய் ஆக
வெய்ய கதிரோன் விளக்கு ஆக, செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்-ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்- மாலை
இடர்-ஆழி நீங்குகவே என்று.

— ஸ்ரீ பொய்கை ஆழ்வார்

அன்பே தகளியா ஆர்வமே நெய் ஆக
இன்பு உருகு சிந்தை இடு திரியா, நன்பு உருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன், நாரணற்கு,
ஞானத் தமிழ் புரிந்த நான்

— ஸ்ரீ பூதத்தாழ்வார்

திருக் கண்டேன்; பொன் மேனி கண்டேன்; திகழும்
அருக்கன் அணி நிறமும் கண்டேன்; செருக் கிளரும்
பொன் ஆழி கண்டேன்; புரி சங்கம் கைக் கண்டேன்
என் ஆழி வண்ணன்பால் இன்று.

— ஸ்ரீ பேயாழ்வார்

உளன் கண்டாய்; நல் நெஞ்சே! உத்தமன் என்றும்
உளன் கண்டாய்; உள்ளுவார் உள்ளத்து, உளன் கண்டாய்;
தன் ஒப்பான் தான் ஆய் உளன் காண்-தமியேற்கும்
என் ஒப்பார்க்கு ஈசன் இமை.

— ஸ்ரீ திருமழிசை ஆழ்வார்

அவரவர் தமதமது அறிவு அறி வகைவகை
அவரவர் இறையவர் என அடி அடைவர்கள்;
அவரவர் இறையவர் குறைவு இலர்; இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே.

— நம்மாழ்வார் (திருவாய்மொழி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் : சீகாமரம் தாளம் : இடைபொத்து

பொலிக! பொலிக! பொலிக!
போயிற்று வல் உயிர்ச் சாபம்;
நலியும் நரகமும் நைந்த;
நமனுக்கு இங்கு யாது ஒன்றும் இல்லை;
கலியும் கெடும்; கண்டுகொண்மின்;
கடல் வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்து, இசை பாடி,
ஆடி, உழிதரக் கண்டோம்.

கண்டோம், கண்டோம், கண்டோம்;
கண்ணுக்கு இனியன கண்டோம்;
தொண்டீர்! எல்லீரும் வாரீர்;
தொழுது தொழுது நின்று ஆர்த்தும்
வண்டு ஆர் தண் அம் துழாயான்
மாதவன் பூதங்கள் மண்மேல்
பண்-தான் பாடி நின்று, ஆடி
பரந்து திரிகின்றனவே.

— ஸ்ரீ நம்மாழ்வார் (திருவாய்மொழி)

பிறை தங்கு சடையானை வலத்தே வைத்து,
பிரமனைத் தன் உந்தியிலே தோற்றுவித்து,
கறை தங்கு வேல் தடங் கண் திருவை மார்பில்
கலந்தவன் தாள் அணைகிற்பீர்! கழுநீர் கூடி,
துறை தங்கு கமலத்துத் துயின்று, கைதைத்
தோடும் ஆரும் பொதி சேற்றுச் சுண்ணம்நண்ணி;
சிறை வண்டு களிபாடும் வயல் சூழ் காழிச்
சீர்மல்குவிண்ணகரே சேர்மின் நீரே.

— ஸ்ரீ திருமங்கை ஆழ்வார் (பெரிய திருமொழி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : நீலாம்பரி தாளம் : சுத்தாங்கம்

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே; ஆயர் தம்
கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிரயான் போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகர் உளானே.

---

# ஸ்ரீ சக்தி பாடல்கள்

## ஸ்ரீ ஸரஸ்வதி த்யானம்

யா குந்தேந்து-துஷார-ஹார-தவலா
யா சுப்ர-வஸ்த்ரா-வ்ருதா
யா வீணா-வரதண்ட-மண்டித கரா
யா ச்வேத-பத்மாஸனா ।
யா ப்ரஹ்மாச்யுத-சங்கர-ப்ரப்ருதிபிர்
தேவைஸ்-ஸதா வந்திதா
ஸா மாம் பாது ஸரஸ்வதீ பகவதீ
நி:சேஷ ஜாட்யாபஹா ॥

மாணிக்ய வீணாம் உபலாலயந்தீம்
மதாலஸாம் மஞ்ஜுல வாக்-விலாஸாம் ।
மாஹேந்த்ர-நீல த்யுதி- கோமலாங்கீம்
மாதங்க-கன்யாம் மநஸா ஸ்மராமி ॥
சதுர்புஜே சந்த்ர - கலாவதம்ஸே
குசோன்னதே குங்கும - ராக - சோணே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ட்ரேக்ஷு - பாசாங்குச - புஷ்பபாண
ஹஸ்தே நமஸ்தே ஜகதேக - மாத: ||

---

ராகம் : ஆரபி தாளம் : ஆதி

பல்லவி

ஸ்ரீ ஸரஸ்வதி நமோஸ்துதே - அம்பா
ஸகல லோக நாயகி தயாபரி (ஸ்ரீ)

அனுபல்லவி

தாஸ போஷணி சுபாஷிணி - அம்பா
விமல லோசனி சாஸ்த்ர ஸ்வரூபிணி (ஸ்ரீ)

சரணம்

அபயம் தந்து அருள் புரிவாய் - அம்பா
ஸதானந்த அனுக்ரஹ ப்ரதாயினி
பாபமோசனி பல ப்ரதாயினி
வாரிஜாஸ வர பூஷணி பாஷிணி (ஸ்ரீ)

---

## வெள்ளைத் தாமரை வீணையள்

ராகம் : பீம்ப்ளாஸ்ஸ்ரீ தாளம் : ஆதி

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்,
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்;
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள தாம்பொருள் தேடியுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்;
கள்ள மற்ற முனிவர்கள் கூறுங்
கருணை வாசகத்துட்பொரு ளாவாள் *(வெள்ளை)*

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்;
மக்கள் பேசும் மழலையி லுள்ளாள்;
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்;
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரங் கோபுரங் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள். *(வெள்ளை)*

**— மகாகவி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார்**

---

**ராகம் : ஷண்முகப்பிரியா** **தாளம் : ஆதி**

வெள்ளைக் கமலத்தி லே-அவள்
வீற்றிருப் பாள், புக ழேற்றிருப் பாள்
கொள்ளைக் கனியிசை தான்- நன்கு
கொட்டுநல் யாழினைக் கொண்டிருப் பாள்
கள்ளைக் கடலமு தை-நிகர்
கண்டதோர் பூந்தமிழ்க் கவிசொல வே
பிள்ளைப் பருவத் திலே-எனைப்
பேணவந் தாளருள் பூணவந் தாள்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : ஸரஸ்வதி தாளம் : ஆதி

**பல்லவி**

*ஆயகலை அனைத்தும் தந்திடுவாய் தேவி*
*அன்புடனே உன்னை அனுதினம் துதித்திட (ஆய)*

**அனுபல்லவி**

வாய்மையும் நேர்மையும் வரமிகு கல்வியும்
வளமுடனே எனக்கு வழங்கிடுவாய் வாணீ (ஆய)

**சரணம்**

நான்முகன் நாயகி நலமருள் தாயே
நாத ஸ்வரூபிணி நாரணி காரணி
வீணா புஸ்தக பாணி வெண் அன்ன வாஹினி
வேத கலாவல்லீ லலிதமுடன் எனக்கு (ஆய)

— லலிதகானம்

---

## சகலகலாவல்லிமாலை

**(ராகம்-ராகமாலிகை)**

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென்
வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண்டாக்கும்
வண்ணங்
*கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலாவல்லியே. 1*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகலகலாவல்லியே. 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன்னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங்
கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகலகலாவல்லியே. 3

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ்
சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந்
நாவிநின்று
காக்குங் கருணைக் கடலே சகலகலாவல்லியே. 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகலகலாவல்லியே. 5

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகலகலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும்
பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங்
கொண்டுதொண்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகலகலாவல்லியே. 7

சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதன் றொருகால முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகலகலாவல்லியே. 8

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின்
றோற்றமென்ன
*நிற்கும பிராமியென் னாவிலென் னோநின்
நிலைபுழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே சகலகலாவல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேம்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப்
போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும்
விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகலகலாவல்லியே. 10

— ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

---

**ராகம் : சிவரஞ்சனி (அ) அஸாவேரி** **தாளம்: த்ரிதால்**

ஜய ஜகதீச்வரி மாத ஸரஸ்வதீ
சரணாகத ப்ரதி பாலன ஹாரீ ॥ (ஜய)

---

* நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
– என்றும் பாடல் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்த்ர பிம்ப ஸம வதன விராஜே
சீச முகுடமாலா கலதாரீ ॥ (ஜய)

வீணா வாம அங்கமே சோபே
ஸாம கீத த்வனி மதுர பியாரீ ॥ (ஜய)

ஸ்வேத வஸன கமலாஸன ஸுந்தர
ஸங்க ஸகி சுப ஹம்ஸ ஸவாரீ ॥ (ஜய)

ப்ரஹ்மானந்த மை தாஸ துமாரோ
தே தர்சன பரப்ரஹ்ம துலாரீ ॥ (ஜய)

— ஸ்ரீ ப்ரஹ்மானந்த சுவாமிகள்

---

## நாமாவளிகள்

**ராகம் : சங்கராபரணம் (அ) புன்னாகவராளி தாளம் : ஆதி**

ஜய ஜய தேவி தயா லஹரி
ஜனனீ ஸரஸ்வதி பாலய மாம்
அமலே கமலாஸன ஸஹிதே
அற்புத சரிதே பாலய மாம்
மாதர் மங்கள குணஜாலே
மனோக்ஞ சீலே பாலய மாம்
கிரீட குண்டல ஸுசோபிதே
கின்னர கீதே பாலய மாம்
பகவதி பார்வதி கீர்வாணி
பன்னக வேணி பாலய மாம்
ஸர்வலோக பரிபூஜித சரணே
ரத்னாபரணே பாலய மாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமலமதே விது-மகுடி
விபுத கணார்ச்சித சரண-யுகே
வித்வன்-மானஸ ராஜஹம்ஸி
வித்யா ரூபே ஸரஸ்வதீ

வாணீ ஸரஸ்வதி வாக்தேவி
பகவதி பாரதி மாம் பாஹி
துர்கதி நாசினி துர்க்கா ஜய ஜய
கால விநாசினி காளீ ஜய ஜய
அம்ப பரமேச்வரி அகிலாண்டேச்வரி
ஆதிபராசக்தி பாலய மாம்
வீணாபாணி விமல ஸரஸ்வதி
வேதாந்த ரூபிணி பாலய மாம்

---

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி
ஆதி சக்தி மஹா சக்தி பரா சக்தி ஓம்.

---

## ஸ்ரீ பராசக்தி கீர்த்தனைகள்

**ராகம் : ஹம்ஸத்வனி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

பராசக்தி ஜனனி-எமை
பரிபாலனைபுரி பர்வத குமாரி (பரா)

**அனுபல்லவி**

ஸுராஸுரர் பணி ஸரோஜ சரணே
ஸுந்தரி நின் சரணாம்புஜம் நம்பினோம் (பரா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணம்**

சங்கரி க்ருபாகரி வராபயகரி எமை
யாதரி ஹரி ஸோதரி (பரா)

தாயே பரசிவ ஜாயே மன இருள்
மாயை யகல அருள்வாயே மாயே (பரா)

கோர மஹிஷ ஸம்ஹாரிணி ச்யாமள
ரூபிணி ஸிம்ஹ வாஹினி மஹேச்வரி (பரா)

— பாபநாசம் சிவன்

---

## மலை வளர் காதலி

**ராகம் : மோஹனம்** **தாளம் : அடதாளம்**

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி எழில்
புங்கவி விளங்குசிவ சங்கரி சஹஸ்ரதள
புட்பமிசை வீற்றி ருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சக்தி என்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே
நானுச் சரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவு ளாரணி யெனப் புகழ
அகிலாண்ட கோடி யீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே
வாரணியு மிருகொங்கை மாதர் மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவை யரசே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைராச னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்கா தலிப்பெ ணுமையே.

— ஸ்ரீ தாயுமான சுவாமிகள்

---

ராகம் : செஞ்சுருட்டி & ஸிந்துபைரவி (அ) குரஞ்சி
தாளம் : ஏகம்

பர்வத ராஜ குமாரி பவானி
பஞ்ஜய க்ருபயா மம துரிதானி ।

தீனதயாபரி பூர்ண கடாக்ஷி
த்ரிபுர ஸுந்தரி தேவி மீனாக்ஷி ॥

ஆரணி நாரணி காரணி நீலி
பூரணி யோக புராதன சீலி ।

சங்கர நாயகி சாந்த மஹேச்வரி
ஸுந்தரி வேத விதக்ஷிணி கௌரி ॥

அம்ப சிதம்பர நாத நடேச்வரி
அம்பண காதலி தேவி ஸர்வேச்வரி ।

சம்பு மோஹினி சாந்த தயாமணி
துக்க பேதினி சோக நிவாரணி ॥

பஞ்ச தசாக்ஷர பஞ்ஜர வாஸினி
குஞ்சித பாத மஹேச விலாஸினி ।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஞ்சி காமாக்ஷி காசி விசாலாக்ஷி
காருண்ய லாவண்ய அகிலாண் டேச்வரி ||

---

ராகம் : மாண்டு தாளம் : திஸ்ர ஏகம்

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்
சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்

சத்தியஞான தர்மசக்தி சாந்தசக்தி ஓம்சிவம்
சச்சிதானந் தாத்மசக்தி சர்வசக்தி ஓம்சிவம் (சு)

வேதசாஸ்த்ர சகலகலா வித்யாசக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம்சிவம் (சு)

நாதகீத கானகலா நடனசக்தி ஓம்சிவம்
மஹாமந்த்ர யந்த்ர-தந்த்ர வச்யசக்தி ஓம்சிவம் (சு)

யோகபோக த்யாகசக்தி லோகசக்தி ஓம்சிவம்
தாகமோஹ சோகரஹித தபோசக்தி ஓம்சிவம் (சு)

துஷ்டசத்ரு நாசசக்தி துர்க்காசக்தி ஓம்சிவம்
அஷ்டலக்ஷ்மி ஞானவாணி அமரசக்தி ஓம்சிவம் (சு)

குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சிதபல தாயகம்
குருபரசிவ ஹரஹர நடராஜ சுத்த சக்தி ஓம் (சு)

— ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : மோஹனம் தாளம் : ஆதி

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்

ஸுந்தரவதனி ஸுகுண மனோஹரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தன குங்கும அலங்கார முடனே
தந்திடுவா யுந்தன் தரிசனமே (ஓம்)

நந்திதேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையாயுன் புகழ் பாடிடவே (ஓம்)

தங்கச் சிலம்பு சலசலவென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்குமானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம்)

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பி ஸரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்தமான ஜோதிஸ்வரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம் (ஓம்)

— சாது ஸ்ரீ முருகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : ராகமாலிகை தாளம் : ஆதி

பல்லவி

கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வா யம்மா! (கற்பக)

அனுபல்லவி

பற்பலரும் போற்றும் பதி மயிலாபுரியில்
சிற்பம் நிறைந்த உயர் சிங்கார கோயில் கொண்ட
(கற்பக)

சரணம்

நீ இந்த வேளைதன்னில் சேயன் எனை மறந்தால்
நானிந்த நானிலத்தில் நாடுதல் யாரிடமோ?
ஏனிந்த மௌன மம்மா ஏழை எனக்கருள
ஆனந்த பைரவியே ஆதரித்தாளு மம்மா! (கற்பக)

எல்லோருக்கும் இன்பங்கள் எழிலாய்இரங்கி என்றும்
நல்லாசி வைத்திடும் நாயகியே நித்ய
கல்யாணியே கபாலி காதல் புரியும் அந்த
உல்லாசியே உமாஉனை நம்பினே னம்மா (கற்பக)

நாகேச்வரி நீயே நம்பிடும் எனைக் காப்பாய்
வாகீச்வரி மாயே வாராயிது தருணம்
பாகேஸ்ரீ தாயே பார்வதியே-இந்த
லோகேச்வரிநீயே உலகினில் துணையம்மா (கற்பக)

அஞ்சன மையிடும் அம்பிகை எம்பிரான்
கொஞ்சிக் குலாவிடும் வஞ்சியே உன்னிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சம்என அடைந்தேன் தாயே உன் சேய்நான்
ரஞ்ஜனியே ரக்ஷிப்பாய் கெஞ்சுகிறேன் அம்மா (கற்பக)

---

## திருமகள் துதி

**ராகம் : சக்கரவாகம்** **தாளம் : திஸ்ரஏகம்**

நித்தமுனை வேண்டி மனம்
நினைப்ப தெல்லாம் நீயாய்ப்
பித்தனைப் போல் வாழ்வதிலே
பெருமை யுண்டோ? திருவே!
சித்தவுறுதி கொண் டிருந்தார்
செய்கை யெல்லாம் வெற்றிகொண்டே
உத்தமநிலை சேர்வ ரென்றே
உயர்ந்த வேதமுரைப்ப தெல்லாம்
சுத்த வெறும் பொய்யோடீ?
சுடர் மணியே! திருவே!
மெத்த மையல் கொண்டுவிட்டேன்
மேவிடு வாய் திருவே!
உனையன்றி இன்ப முண்டோ
உலகமிசை வேறே?
பொன்னை வடிவென் றுடையாய்
புத்தமுதே, திருவே!
மின்னொளி தருநன் மணிகள்
மேடை யுயர்ந்த மாளிகைகள்
வன்ன முடைய தாமரைப்பூ
மணிக்குள முள்ள சோலைகளும்
அன்னம் நறுநெய் பாலும்
அதிசயமாகத் தருவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்னருளை வாழ்த்தி என்றும்
நிலைத்திருப்பேன், திருவே!

— மகாகவி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார்

---

## ஸ்ரீ காளி ஸ்தோத்ரம்

**ராகம் : வராளி** **தாளம் : ஆதி**

*யாது மாகி நின்றாய்—காளி*
*எங்கும் நீ நிறைந்தாய்:*
*தீது நன்மை யெல்லாம்—நின்றன்*
*செயல்க ளன்றி யில்லை*
*போதும் இங்கு மாந்தர்—வாழும்*
*பொய்மை வாழ்க்கை யெல்லாம்,*
*ஆதி சக்தி, தாயே! என்மீ*
*தருள் புரிந்து காப்பாய்* *(யாது)*

*எந்த நாளும் நின்மேல்—தாயே!*
*இசைகள் பாடி வாழ்வேன்!*
*கந்த னைப்ப யந்தாய்—தாயே!*
*கருணை வெள்ள மானாய்!*
*மந்த மாரு தத்தில்—வானில்*
*மலையி னுச்சி மீதில்,*
*சிந்தை யெங்கு செல்லும்—அங்குன்*
*செம்மை தோன்று மன்றே!* *(யாது)*

— மகாகவி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவி கீதம்

**ராகம் : பைரவி** **தாளம்: ரூபகம்**

மங்களமா மனைத்தினுக்கும் மங்களமே சிவமே
மக்கள்விழை நாற்பொருளும் வழங்குநலத் தாயே
எங்கள்புக லேவிழிமூன் றேய்ந்தவளே கௌரீ
எழில்நாரா யணியுன்னை இறைஞ்சிடுவோம்
யாமே.

ஆக்குதற்கு மளிப்பதற்கும் அழிப்பதற்கும் வல்ல
அகண்டபெருஞ் சக்திவடி வானபழம் பொருளே
சீர்க்குணங்கட் குறைவிடமே திரிகுணங்கள் மயமே
திருநாரா யணியுன்னைத் தெண்டனிடு வோமே.

சரணடைந்தார் ஏதுமிலார் சார்துயரில் உழந்தார்
தமையருளி நனிபுரக்கும் தகையமுந்தும் அம்மே
தரணியுளார் யாவருக்கும் சங்கடங்கள் தீர்க்கும்
தனிநாரா யணிதேவி தாள்பணிவோம் யாமே.

---

**ராகம் : இந்துஸ்தானி ஸாரங்க** **தாளம் : த்ரிதால்**

ஜய துர்க்கே துர்கதி பரிஹாரிணீ।
சும்ப விதாரிணி மாதா பவானி ॥ (ஜய)

ஆதிசக்தி பர ப்ரஹ்ம ஸ்வரூபிணி।
ஜகஜ்—ஜனனீ சதுர்வேத பகானி ॥ (ஜய)

ப்ரஹ்மா சிவ ஹரி அர்ச்சன கீனோ।
த்யான தரத ஸுர நர முனி க்ஞானி ॥ (ஜய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ட புஜகர கட்க விராஜே।
ஸிம்ஹ ஸவார ஸகல வரதானி ॥ (ஜய)
ப்ரஹ்மானந்த சரண மே ஆயே।
பவ–பய நாசகரோ மஹாராணி ॥ (ஜய)

— ஸ்ரீ ப்ரஹ்மானந்த சுவாமிகள்

---

## ஸ்ரீ மஹிஷாஸுர மர்தினி ஸ்தோத்ரம்

அயி கிரிநந்தினி நந்தித மேதினி
விச்வ விநோதினி நந்தனுதே
கிரிவர விந்த்ய சிரோதி–நிவாஸினி
விஷ்ணு விலாஸினி ஜிஷ்ணுநுதே।
பகவதி ஹே சிதிகண்ட்ட குடும்பினி
பூரி குடும்பினி பூரிக்ருதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர–மர்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே ॥

ஸுரவர–வர்ஷிணி துர்தர தர்ஷிணி
துர்முக மர்ஷிணி ஹர்ஷரதே
த்ரிபுவன போஷிணி சங்கர–தோஷிணி
கில்பிஷ மோஷிணி கோஷரதே।
தனுஜ–நிரோஷிணி திதிஸுத ரோஷிணி
துர்மத சோஷிணி ஸிந்து ஸுதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர–மர்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே ॥

அயி ஜகதம்ப மதம்ப கதம்ப
வனப்ரிய வாஸினி ஹாஸரதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகரி சிரோமணி துங்க ஹிமாலய
ச்ருங்க நிஜாலய மத்யகதே ।
மதுமதுரே மதுகைடப கஞ்ஜினி
கைடப பஞ்ஜினி ராஸரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர-மர்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே ॥

கமலதலாமல கோமல காந்தி
கலாகலிதாமல பாலலதே
ஸகலவிலாஸ கலாநிலயக்ரம
கேலி சலத்கல ஹம்ஸகுலே ।
அலிகுல ஸம்குல குவலய மண்டல
மௌலிமிலத் பகுலாலிகுலே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர-மர்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே ॥

கனகலஸத்கல ஸிந்து ஜலைரநு
ஸிஞ்சிநுதே குண ரங்கபுவம்
பஜதி ஸகிம் ந சசீ குச கும்ப
தடீபரிரம்ப ஸுகாநுபவம் ।
தவசரணம் சரணம் கரவாணி
நதாமரவாணி நிவாஸி சிவம்
ஜய ஜய ஹே மஹிஷாஸுர-மர்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே ॥

---

மத்ஸம: பாதகீ நாஸ்தி பாபக்னி த்வத்ஸமா ந ஹி ।
ஏவம் க்ஞாத்வா மஹாதேவி யதா யோக்யம் ததா குரு ॥

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : ப்ருந்தாவனஸாரங்கா                    தாளம் : ஏகம்

லலிதே மாம் பாலய பரசிவ வனிதே
ஸௌபாக்ய ஜனனீ

சீதே! பரமானந்த விலாஸிதே
குரு பக்த ஜனௌக வ்ருதே
பரதத்வ ஸுதாரஸ மிலிதே – அம்ப
சாஸினி துரிதவினாசினி நிகம –
நிவாஸினி விஜய விலாஸினி பகவதி                    (லலிதே)

பாலே குங்கும ரோகாங்கித பாலே
பரிபாலித ஸுர முனி ஜாலே
பவபாச விமோசன மூலே – அம்ப
ஹிமகிரி தனயே கமல ஸுநிலயே
ஸுமஹித ஸதயே ஸுந்தர ஹ்ருதயே                    (லலிதே)

ராமே! கன ஸுந்தர மேகச்யாமே
நிலயீக்ருத ஹரதனு வாமே
ஸகலாகம விதித ஸுதாமே – அம்ப
வாமாசாரிணி காம விஹாரிணி
ஸாம வினோதினி ஸோம சேகரிணி                    (லலிதே)

துங்கே! ப்ருங்காலக பரிலஸதங்கே
பரிபூரித கருணாபாங்கே
ஸுர சாத்ரவ கர்வ விபங்கே – அம்ப
ஸங்க ரஹித முனிபுங்கவ நுத பதே
மங்கள சுபகரி ஸர்வ மங்களே                    (லலிதே)

குந்தே! பரிவந்தித ஸனக ஸனந்தே
வந்தாரு மஹீஸுர வ்ருந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்ருகராஜ ஸ்கந்த ஸ்பந்தே – அம்ப
இந்திரா மந்திரே பிந்து ஸமாகுலே
ஸுந்தர சரணே த்ரிபுரஸுந்தரி (லலிதே)

---

ஜய ஜய ஜய சக்தி – ஓம் ஸ்ரீ ஜய ஜய ஜய சக்தி
ஜய ஜய வென தினம் பாடிப்பணிந்தோம்
ஜகம் எங்கும் அமைதியைத் தா – ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் மறைய – அம்மம்மா
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை — ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி பலமருள்வாய் – அம்மம்மா
கரம் குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் — ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் – அம்மம்மா
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலம் நான் — ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து – அம்மம்மா
நமஸ்காரம் செய்து ஆரதி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா — ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : ஹம்ஸத்வனி தாளம் : ஆதி

பாஹி பாஹி பவதாரிணி காளி சொரூபிணி பவதாரிணி
ஸ்ரீசக்ரவாஸினி பவதாரிணி தக்ஷணாமூர்த்தே பவதாரிணி
ஓங்கார ரூபிணி பவதாரிணி ஹ்ரீங்கார மர்த்தனி பவதாரிணி
அங்கயற்கண்ணி பவதாரிணி ஜகதாம்ப பவானி பவதாரிணி
ஸம்ஹார ரூபிணி பவதாரிணி துர்க்கா லக்ஷ்மி பவதாரிணி
துக்கநிவாரணி பவதாரிணி அன்னபூர்ணேஸ்வரி பவதாரிணி

---

சங்கரிபரமேஸ்வரி சசிசேகரி அம்பா
சர்வேஸ்வரி ஜெகதீஸ்வரி மஹேஸ்வரி அம்பா
சுந்தரி குலமஞ்சரி சிவசங்கரி அம்பா
காதம்பரி ஸ்வேதம்பரி ஹரிஸோதரி அம்பா

---

ராகம் : ஹம்ஸத்வனி தாளம் : ஆதி

ஓங்கார ஸ்ரீதரியே
என்னை நினைத்தருள்வாய்

பூர்வ வினைத்தளையால் வாடித்தளர்ந்தேனம்மா
ஆரமுதத்தாயே என்னையணைத்திடுவாய்

உற்றார் உறவினர்கள்
என் உற்றவர் அல்லர் தாயே
உன்னை அல்லாது மற்றார்
யாரும் துணையில்லையே

ஞானமலர் மலர்ந்தாய்
ஞான மதுவை உண்டு
ஐம்பிழைத் தீர்த்திடுவேன்
ஆனந்தத் தீங்கனியே

ஞானப் பிழம்பொளியே - நின்
பேரன்பில் ஏற்றிச் செல்வாய்
ஊனுடலை நம்பி வாழ்வதும் வாழ்வாமோ
தெய்வத்திரு மணியேமாதுரி நீயே கதி ஓங்கார

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி பராசக்தி தாயே நமோ
அம்ப பரமேஸ்வரி தாயே நமோ
அதிரூப சுந்தரி தாயே நமோ
அகிலாண்டேஸ்வரி தாயே நமோ

ஆதி பராசக்தி தாயே நமோ
ஸ்ரீ புவனேஸ்வரி தாயே நமோ
ஸ்ரீ ஸர்வேஸ்வரி தாயே நமோ
ராஜ ராஜேஸ்வரி தாயே நமோ

---

## நவராத்திரிப் பாட்டு

### (மாதா பராசக்தி)

#### பராசக்தி

மாதா பராசக்தி வையமெலாம் நீ நிறைந்தாய்!
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே!
ஏதாயினும் வழிநீ சொல்வாய் எமதுயிரே!
வேதாவின் தாயே மிகப்பணிந்து வாழ்வோமே.

#### வாணி

வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போலே அறிவுமுத்து மா லையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெலாங் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ தேவி

பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி
மின்னுநவரத்தினம்போல் மேனி யழகுடையாள்,
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள், ஸ்ரீ தேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே.

## பார்வதி

மலையிலே தான்பிறந்தாள், சங்கரனை மாலையிட்டாள்,
உலையிலே யூதி உலகக் கனல்வளர்ப்பாள்
நிலையில் உயர்ந்திடுவாள், நேரே அவள்பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே.

---

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் – பராசக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி – பராசக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

கணபதி ராயன் – அவனிரு
காலைப் பிடித் திடுவோம்;
குண முயர்ந் திடவே – விடுதலை
கூடி மகிழ்ந் திடவே

(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

சொல்லுக் கடங்காவே – பராசக்தி
சூரத் தனங்க ளெல்லாம்;
வல்லமை தந்திடுவாள் – பரா சக்தி
வாழி யென்றே துதிப்போம்

(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி வடிவேலன் – அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்;
சுற்றி நில்லாதே போ! – பகையே !
துள்ளி வருகுது வேல்

(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

தாமரைப் பூவினிலே – சுருதியைத்
தனியிருந் துரைப்பாள்
பூமணித் தாளிணையே – கண்ணி லொற்றிப்
புண்ணிய மெய்திடுவோம்.

(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

பாம்புத் தலைமேலே – நடஞ் செயும்
பாதத்தினைப் புகழ் வோம்;
மாம்பழ வாயினிலே – குழலிசை
வண்மை புகழ்ந்திடுவோம்.

(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

செல்வத் திருமகளைத் – திடங்கொண்டு
சிந்தனை செய்திடுவோம்;
செல்வமெல்லாந் தருவாள் – நமதொளி
திக்க னைத்தும் பரவும்.

(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

---

# துக்க நிவாரணி அஷ்டகம்

மங்கள ரூபிணி மதியணி சூலினி
மன்மத பாணியளே
சங்கடம் தீர்த்திடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கண பாணியள் கனிமுகங் கண்டநல்
கற்பகக் காமினியே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

கானுறு மலரெனக் கதிர் ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்
தானுறு தவஒளி தாரொளி கதிரொளி
தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

சங்கரி சௌந்தரி சதுர் முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே
எங்குலந் தழைத்திட எழில் வடிவுடனே
எழுந்தநல் துர்க்கையளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

தண தண தந்தண தவிலொலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்
பண பண பம்பண பறையொலி கூவிடப்
பண் மணி நீ வருவாய்
கண கண கங்கண கதிர் ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேலனைக்
கொடுத்த நல்குமரியளே
சங்கடம் தீர்த்திட சமரது செய்தநற்
சக்தியெனும் மாயே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

எண்ணியபடி நீ யருளிட வருவாய்
எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்
பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

இடர் தரு தொல்லை இனிமேல் இல்லை
யென்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமதைத் தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

ஜெயஜெய பாலா சாமுண்டேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய துர்க்கா ஸ்ரீபரமேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

---

## தேவி கருமாரியம்மன் ஸ்தோத்திரம்

கற்பூர நாயகியே! கனகவல்லி!
காளி மகமாயி! கருமாரியம்மா!
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா!
பூவிருந்தவல்லி தெய்வயானையம்மா!

விற்கோல வேதவல்லி விசாலாட்சி!
விழிக்கோல மாமதுரை மீனாட்சி!
சொற்கோவில் நானமைத்தேன் இங்குதாயே!
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே!

புவனமுழுதாளுகின்ற புவனேஸ்வரி!
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி!
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி!
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி!

கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி!
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி!
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி!
உன்னடிமைச் சிறியேனை நீயாதரி!
உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவிடத்தில் முறையிடுவேன்! தாயே எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா!

கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவாம்மா!
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா!
சின்னவளின் குரல்கேட்டு முகம் திருப்பு!
சிரித்தபடி என்னைத் தினம் வழி அனுப்பு!

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும்
பண்ணமைக்கும் நாஉனையே பாடவேண்டும்!
பக்தியோடு கையுனையே கூடவேண்டும்!

எண்ணமெல்லாம் உன்நினைவே ஆக வேண்டும்!
இருப்பதெல்லாம் உன்னுடையதாக வேண்டும்!
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா!
மகனுடைய குறைகளை நீ தீருமம்மா!

நெற்றியிலுன் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சினுளுன் திருநாமம் வழியவேண்டும்!
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருகவேண்டும்!
கவிதையிலே உன்நாமம் வாழவேண்டும்!

சுற்றமெல்லாம் நீடுழி வாழவேண்டும்!
ஜோதியிலே நீயிருந்து ஆளவேண்டும்!
மற்றதெல்லாம் நான் உனக்குச் சொல்லலாமா!
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா!

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ!
அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுக்கு இமையன் றிக்காவலுண்டோ!
கன்றுக்கு பசுவன்றி சொந்தமுண்டோ!

முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ!
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ!
எண்ணைக்கும் விளக்குக்கும் பேதமுண்டோ!
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ!

அன்புக்கே நானடிமை ஆகவேண்டும்!
அறிவுக்கே என்காது கேட்கவேண்டும்!
வம்புக்கே போகாமலிருக்க வேண்டும்!
வஞ்சத்தை என் நெஞ்சம் அறுக்க வேண்டும்!

பண்புக்கே உயிர்வாழ ஆசைவேண்டும்!
பரிவுக்கே நானென்றும் பணிய வேண்டும்!
என்பக்கம் இவையெல்லாம் இருக்கவேண்டும்!
என்னோடு நீ என்றும் வாழவேண்டும்!

கும்பிடவோ கையிரண்டும் போதவில்லை!
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை!
நம்பிடவோ மெய்யதனில் சக்தி இல்லை!
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை!

செம்பவளவாயழகி! உன்னெழிலோ!
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை!
அம்பளவு விழியாளே! உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவுமில்லை!

காற்றாகி கனலாகிக் கடலாகினாய்!
கருவாகி உயிராகி உடலாகினாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நேற்றாகி இன்றாகி நாளாகினாய்!*
*நிலமாகிப் பயிராகி உணவாகினாய்!*

*தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்!*
*தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்!*
*போற்றாத நாளில்லை தாயே உன்னை!*
*பொருளோடும் புகழோடும் வைப்பாய் என்னை!*

---

## ஸ்ரீ ராமர் பாடல்கள்

**ராகம் : குந்தலவராளி** **தாளம் : ஆதி**

*ஸ்ரீராம் ஜயராம் ஜய ஜய ராம் (3 தடவை)*
*நாராயண ஓம் நம: சிவாய வெனுஞ்*
*சாரமான நல்ல தாரக மந்த்ரம் (ஸ்ரீராம்)*
*நாரதர் வால்மீகி முனிவர் நவின்றது*
*ஆரமுதாய் அன்பர்க் கானந்தம் ஈன்றது (ஸ்ரீராம்)*
*காமாதி கள்வரைக் கட்டுட னொழிப்பது*
*நேமநிஷ்டை யுள்ள நெஞ்சினில் செழிப்பது (ஸ்ரீராம்)*
*சஞ்சலத்தைக் கெடுத்து சாந்தத்தைக் கொடுப்பது*
*அஞ்சலி அளித்து நம் அச்சம் ஒழிப்பது (ஸ்ரீராம்)*
*ஆண்மையும் வீரமும் ஆற்றலும் வெற்றியும்*
*மேன்மையும் தருவது விரும்பினால் வருவது (ஸ்ரீராம்)*
*பக்தி வைராக்யமும் பரந்த ஸமரஸமும்*
*சுத்த சச்சிதானந்த ஸித்தியும் அளிப்பது (ஸ்ரீராம்)*

— **ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : மோஹனம் தாளம் : ஆதி

பல்லவி

தஞ்சம் என அடைந்தேன் தசரதன் மைந்தனே
அஞ்சேல் என்றே எனக்கு அபயம் தந்து அருள்வாய் (தஞ்)

அனுபல்லவி

ஸஞ்சித வினைநீங்க ரஞ்சித மலர்பாதம்
நெஞ்சுருகப் பாடிக் கெஞ்சுகிறேன் ராமா (தஞ்)

சரணம்

ஸீதை மனம் மகிழும் மோஹனாங்கனே-இதய
வேதனை போக்கிடும் மாதவனே
ஸ்ரீதரனே ரகு ராகவனே லலித
ஸோதரனே ஜய ரகுகுல திலகனே. (தஞ்)

— லலிதகானம்

---

# நாமாவளிகள்

ஸ்ரீராம ஜய ராம ஜய ஜய ராம, ஓம்
ஸ்ரீராம ஜய ராம ஜய ஜய ராம, ஓம்

---

அயோத்யா வாஸீ ராம்... தசரத நந்தன ராம்
ஜானகி ஜீவன ராம... ஸ்ரீராம ராம ஜய ராம் (அயோத்)
ஜானகி ஜீவன ராம ராம... ராம ராம ஜய ராம்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம ராம ராம ராம ராம நாம தாரகம்
ராம க்ருஷ்ண வாஸுதேவ புக்தி முக்தி தாயகம்
ஜானகீ மனோஹரம் ஸர்வ லோக நாயகம்
சங்கராதி ஸேவ்யமான புண்யநாம கீர்த்தனம்

---

தசரத நந்தன ராம் ராம் தசமுக மர்தன ராம் ராம்
பசுபதி ரஞ்ஜன ராம் ராம், பாபவிமோசன ராம் ராம்
மணிமய பூஷண ராம் ராம், மஞ்ஜுன, பாஷண ராம் ராம்
ரணஜய ரக்ஷக ராம் ராம், ராக்ஷஸ காதக ராம் ராம்

---

ஸீதாராம் ஸீதாராம் ஸீதாராம் ஜய ஸீதாராம் —
தசரத நந்தன தேசிக ராம் கங்கா யமுனா ஸீதாராம்.

---

பாஹி ராம பாவன நாம
பல பவ பீம பாஹி ஸ்ரீராம
ரகூத்தம பாஹி ஸ்ரீராம

ராம ஸீதா ராம லீலா ராம ராகா ஸோமவதன
ராம யோகி ராம சரண ராம பாத மோஹித ராம ॥ (பாஹி)

---

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே ।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥
ராம ராம ராம ராம ராம ராம ராம்.

---

**ராகம் : ராகமாலிகா** **தாளம் : ஆதி**

**(பூபாளம்)**

மாசில் அயோத்தியில் மன்னன் தசரதன்
மாதவத் தால்வந்த மைந்தனே தாலோ!
கோசிகனைத் தொடர்ந்து கொடியவனை வதைத்து
யாகந்தனைக் காத்த தீரனே தாலோ!

**(பிலஹரி)**

பாதை யிலேயொரு கல்லுருவாய் நின்ற
பாவைக் கருள்செய்த பாலனே தாலோ!
சீதை மனம்மகிழ சோதனை யில்வென்ற
ஸ்ரீதரனே ரகு ராமனே தாலோ!

**(கேதாரகௌள)**

தந்தை சொல்காக்கவே தம்பியும் தாரமும்
தொடர வனம்சென்ற ராமனே தாலோ!
சுந்தரி யைப்பிரிந்து அந்திப்பக லலைந்து
சிந்தை தளர்ந்திட்ட ஐயனே தாலோ!

**(ஷண்முகப்ரியா)**

வானரப் படையுடன் ஸேது லங்கேசனை
வென்ற வனேஜய ராமனே தாலோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள் ஆசியுடன் அரசுறுதி தரித்த
ஆனந்த ராமனே அருள்புரி தாலோ

— நீலா ராமமூர்த்தி

---

நாடியபொருள் கைகூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறுவோர்க்கே.

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராமவென் றிரண் டெழுத்தினால்.

— ஸ்ரீ கம்பநாட்டாழ்வார்

---

ராகம் : கானடா தாளம் : ஆதி

ஆத்மா ராமா ஆனந்த ரமணா
அச்யுதா கேசவ ஹரி நாராயணா (ஆத்மா)
பூத்த மலர்போல் புன்னகை புரிவாய்
பூரண சக்தியை மழையெனப் பொழிவாய் (ஆத்மா)
துஷ்ட ராக்ஷதரைத் தூருடன் கொய்வாய்
துருவாதி முனிவரை நிறைவராய் செய்வாய் (ஆத்மா)
அஷ்டமா சித்திகள் அன்பருக் களிப்பாய்
அவனியைக் காத்திட அவதரித்தாயே (ஆத்மா)

— ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஜனம்

| | |
|---|---|
| ராம ராம | ரகுவீரா |
| ராம சந்த்ர | ரணதீரா! |
| ராம ராம | ரகு வீரா |
| ராம சந்த்ர | பரந் தாமா! |
| ராம ராம | ரகு நாதா |
| ராம சந்த்ர | ஜகந் நாதா! |
| ராம ராம | ரகு வீரா |
| ராம சந்த்ர | ரகு ராமா |
| ராம ராம | ஜய ஸீதா |
| ராம சந்த்ர | ஜய ராம! |

---

**ராகம் : சுருட்டி (அ) அஸாவேரி** **தாளம் : ஆதி**

ஸ்ரீராம சந்த்ரனுக்கு ஜய மங்களம் – நல்ல
திவ்யமுக சந்த்ரனுக்கு சுப மங்களம் (ஸ்ரீராம)

மாராபிராமனுக்கு மன்னு பரந்தாமனுக்கு
ஈராறு நாமனுக்கு ரவிகுல சோமனுக்கு (ஸ்ரீராம)

கொண்டல்மணி வண்ணனுக்குக் கண்ணனுக்கு மங்களம்
கோசலை குமாரனுக்கு வீரனுக்கு மங்களம்
புண்டரீகத் தாளனுக்கு பூசக்கிர வாளனுக்குத்
தண்டுளவத் தோளனுக்கு ஜானகி மணாளனுக்கு (ஸ்ரீராம)

பகிரண்ட நாதனுக்கு வேதனுக்கு மங்களம்
பரதனாம் அன்பனுக்கு முன்பனுக்கு மங்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல உல்லாசனுக்கு தருமந்த ஹாசனுக்கு
அகில விலாஸனுக்கு அயோத்யா வாஸனுக்கு (ஸ்ரீராம)

— ஸ்ரீ அருணாசலக் கவிராயர்

---

**ராகம் : மோஹனம்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

அஞ்சன வண்ணனைத் தஞ்சமென அடைவாய்
நெஞ்சுருகப்பாடிப் பரந்தாமனைப் பணிவாய்!

**அனுபல்லவி**

அஞ்சனை புதல்வன் ஆஞ்சநேயனின்
வஞ்சமிலா நெஞ்சில் உறைந்திடும் (அ)

**சரணம்**

மிதிலைநகர் செல்வி மைதிலியை மணந்தான்
கதியெனக் கெஞ்சிடில் பதம்தனைத் தருவான்
வைதேஹி கொஞ்சிடும் வைஜயந்தி மலர் மார்பன்
கைதனில் வில்லேந்தும் காகுத்தன் ஸ்ரீராமன்.

---

## ஸ்ரீ கண்ணன் பாடல்கள்

**ஸ்தோத்ரம்**

ஓம் க்ருஷ்ணாய வாஸுதேவாய தேவகீ நந்தனாய ச।
நந்தகோப குமாராய கோவிந்தாய நமோ நம ॥

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம: பங்கஜ–நாபாய நம: பங்கஜமாலினே।
நம: பங்கஜ–நேத்ராய நமஸ்தே பங்கஜாங்க்ரயே ॥

மூகம் கரோதி வாசாலம் பங்கும் லங்கயதே கிரிம்।
யத் க்ருபா தமஹம் வந்தே பரமாநந்த மாதவம் ॥

---

வஸுதேவ ஸுதம் தேவம் கம்ஸ சாணூர மர்தனம்।
தேவகீ பரமானந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும் ॥

வந்தே வம்சீதரம் க்ருஷ்ணம் ஸ்மயமான முகாம்புஜம்
பீதாம்பர தரம் நீலம் மால்ய சந்தன பூஷிதம் ॥
ராதாசித்த சகோரேந்தும் ஸௌந்தர்ய ஸுமஹோததிம்
பராத்பரதரம் தேவம் ப்ரஹ்மானந்த க்ருபாநிதிம் ॥

---

**ராகம் : மாண்டு** **தாளம் : ஏகம்**

கோகுலத்திலே வளர்ந்தாய் *கண்ணா கண்ணா*
ஆகுலம் தவிர்க்க வந்தாய் *கண்ணா கண்ணா*
யோகு செய்யும் சிந்தையர் *கண்ணா கண்ணா*
நோகுமுன் களைவாய் துயர் *கண்ணா கண்ணா*

அஞ்சே லென்றே யுரைப்பாய் *கண்ணா கண்ணா*
சஞ்சலமே தீர்த்து வைப்பாய் *கண்ணா கண்ணா*
பஞ்சைப் போல் உன் நினைப்பாய் *கண்ணா கண்ணா*
தஞ்சமென்றே என்னை வைப்பாய் *கண்ணா கண்ணா*

தேவர்களும் இன்புறவே *கண்ணா கண்ணா*
தவசியர் குறையறவே *கண்ணா கண்ணா*
தேவகியின் அன்புருவே *கண்ணா கண்ணா*
அவனியின் ஸத்குருவே *கண்ணா கண்ணா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமனம் கோகுலமே கண்ணா கண்ணா
அன்பருள்ளம் கோகுலமே கண்ணா கண்ணா
தூயமனம் கோகுலமே கண்ணா கண்ணா
சேயருள்ளம் கோகுலமே கண்ணா கண்ணா

---

**ராகம் : ஹமீர் (அ) பேஹாக் தாளம் : திஸ்ரஏகம் (அ) ஆதி**

கண்ணன் எங்கள் கண்ணனாம்
கார் மேக வண்ணனாம்
வெண்ணெய் உண்ட கண்ணனாம்
மண்ணை உண்ட கண்ணனாம்.

குழலி னாலே மாடுகள்
கூடச் செய்த கண்ணனாம்
கூட்ட மாக கோபியர்
கூட ஆடும் கண்ணனாம்.

மழைக்கு நல்ல குடையென
மலை பிடித்த கண்ணனாம்
நச்சுப் பாம்பு மீதிலே
நடன மாடும் கண்ணனாம்.

கொடுமை மிக்க கம்சனைக்
கொன்று வென்ற கண்ணனாம்
தூது சென்ற பாண்டவர்
துயரம் தீர்த்த கண்ணனாம்.

— திரு. அழ. வள்ளியப்பா.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காராய வண்ண மணிவண்ண
கண்ண கன சங்கு சக்ரதர, நீள்
சீராய தூய மலர்வாய நேய
ஸ்ரீராம ராமன் எனவே

தாராய வாழ்வு தரு நெஞ்சு
சூழ்க தாமோதராய நம ஓம்
நாராயணாய நம வாமனாய நம
கேசவாய நமவே.

---

**ராகம் : காபி** **தாளம் : திஸ்ர ஏகம்**

கண்ணன் மாடு கன்று மேய்த்து
வேணுகானம் பாடுவான்
வெண்ணெய் திருடித் தின்பதற்கு
வீடு வீடாய் ஓடுவான்!

வீட்டி லுள்ளோர் உறங்கு கின்ற
வேளை நோக்கி ஓர் தினம்
வாட்ட மின்றித் துணிவு கொண்டு
வந்து சேர்ந்தான் மாயவன்!

ஊர்ந்து சென்று பூனை போலே
உறியை எட்டித் தொட்டனன்
சேர்ந்த பானை மூடி வீழ்ந்து
சிதறி யோசை கேட்டது!

ஆச்சி அந்த ஓசை கேட்டு
யார தென்று கூவினாள்
கூச்சமின்றிக் கண்ணன் என்று
கூறி நின்றான் மாயவன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கு வந்தாய் என்ன வேலை
என்று ஆச்சி கேட்டனள்
எங்களாச்சி வீடு தேடி
எய்தினன் காண் அம்மையே

கெட்டிக் காரன் உறியை எட்டிக்
கையை வைத்த தேனடா?
சட்டி மூடி தட்டி உள்ளே
எட்டிப் பார்த்த தேனடா?

ஒன்று மில்லை என்று கண்ணன்
உண்மை போலப் பேசுவான்
வெண்ணெய் தன்னில் மொய் எறும்பை
விரட்டினன் காண் அம்மையே!

பெண்கள் மாயன் விந்தை யெல்லாம்
பேசு தற்குக் கூடினர்
வெண்ணெய் தன்னை மாதர் மீது
வீசிக் கண்ணன் ஓடினான்!

— திரு. அழ. வள்ளியப்பா

---

ராகம் : ஷண்முகப் பிரியா தாளம் : ஆதி

பல்லவி

கண்ணனைப் பணி மனமே – தினமே

அனுபல்லவி

மண்ணில் யசோதை செய் புண்ய ஸ்வரூபனை
மாதவனை நமது யாதவ தீபனைக் (கண்ணனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

பாண்டவர் நேயனை பக்த ஸஹாயனைப்
பவளச் செவ்வாயனை பரமனை மாயனைக் (கண்ணனை)
மங்கள மூலனை கோகுல பாலனை
மணமிகு துளஸீ மாலனை - பாலனைக் (கண்ணனை)
விண்ணவர் போற்றவே மண்ணில் வரும்வேதப்
பண்ணனை ச்யாமள வண்ணனைத் தாமரைக்
(கண்ணனை)

— ஸ்ரீ பாபநாசம் சிவன்

---

ராகம் : ஹிந்துஸ்தானி மிஸ்ர யமன் தாளம் : ஆதி

பல்லவி

யதுகுலதிலகா தேவகி ஸூதனே
யமுனாதீர விஹாரா (யமுனா)

சரணம்

என்துணை நீயே உனையே நம்பினேன்
ஏழையைக் கண்ணால் பாராயோ?
சஞ்சலந் தீர தருணம் இரங்கி
தயவாய் அருகினில் வாராயோ?
தீனபந்தோ தேவர்கள் பணியும்
திருவடி நான் மறவேனே! (யமுனா)

வேணுவிலோலா துளஸீமாலா!
மனமோஹனனே கோபாலா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேக ச்யாமா ஸஜ்ஜன பாலா!
மாதவனே ராதா லோலா!
ஜய முகுந்தா பேரானந்தம்
தந்தருள் லோகாதாரா! (யமுனா)

---

**ராகம் : யமுனாகல்யாணி** **தாளம் : ஆதி**

க்ருஷ்ணா முகுந்தா முராரே! – ஜய
க்ருஷ்ணா முகுந்தா முராரே!

கருணாஸாகர – கமலா நாயக
கனகாம்பரதாரீ– கோபாலா! (க்ருஷ்ணா)

காளியமர்தன – கம்ஸநிஸூதன
கமலாயத நயன – கோபாலா! (க்ருஷ்ணா)

கோபீஜனமன – மோஹன வ்யாபக
குவலய தலநீலா – கோபாலா! (க்ருஷ்ணா)

---

**ராகம் : காபி (மிஸ்ர)** **தாளம் : ஆதி**

**பல்லவி**

கோகுலக் கண்ணனைக் கூடிநாளும் பாடுவோம்

**சரணம்**

பாதமலரின் நிதம் படிந்திடும் வண்டாய்
நாதனின் புகழ்பாட நாடியே நீர் வாரீர்! (கோ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளா அடிமையாய், மீராவைக் கொண்ட
மாளா ப்ரேமையுடன் வணங்கிட வாரீர்! *(கோ)*

தாமரைப் பாதனே தயைபுரிந் தருள்வாய்
தேவகி மைந்தனே தூயனே சரணம் *(கோ)*

வேய்ங்குழல் நாதம் வேத நற்கீதம்
மாய்ந்திடும் மனமயல் மாதவன் இசையால் *(கோ)*

லீலைகள் செய்வான் பால கோபாலன்
நீலமுகில் வண்ணன் தாமரைக் கண்ணன் *(கோ)*

திருமுகம் அதனில் குறுநகை மலர
வரும் கண்ணன் மலரடிக்கன்புமலர் தூவுவோம்! *(கோ)*

— புவனேச்வரி

---

**ராகம் : யமுனாகல்யாணி** **தாளம் : ஆதி**

ராதா ஸமேத க்ருஷ்ணா – க்ருஷ்ணா
ராதா ஸமேத க்ருஷ்ணா! *(ராதா)*

நந்தகுமார நவநீத சோர
ப்ருந்தாவன கோவிந்த முராரே! *(ராதா)*

கோபி மனோஹர – கோகுல வாஸா
சோபித முரலீ – கான விலாஸா
ஸுந்தர மன்மத – கோடி ப்ரகாசா! *(ராதா)*

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : ராகமாலிகை (பேஹாக்) தாளம் : ஆதி

பல்லவி

கானமழை பொழிகின்றான் — கண்ணன்
யமுனா தீரத்தில் யாதவகுலம் செழிக்க (கான)

அனுபல்லவி

ஆனந்தமாகவே அருள்பெருகவே
முனிவரும் மயங்கிடும் மோஹன ரூபன் (கான)

சரணம்

தீஞ்சுவை இதழில் வேய்ங்குழல் வைத்தே
தெவிட்டா அமுதாய் தேவரும் விரும்பும் (கான)

(பூபாளம்)

குயிலினம் கூவிட மயிலினம் ஆடிட
ஆவினம் கரைந்திட அஞ்சுகம் கொஞ்ச
கோவலர் களித்திட கோபியர் ஆட
கோவிந்தன் குழல் ஊதி (கான)

(மணிரங்கு)

அம்பரந்தனிலே தும்புரு நாரதர்
ரம்பையரும் ஆடல்பாடல் மறந்திட
அச்சுதன் அனந்தன் ஆயர்குலத் திலகன்
அம்புஜ நாபன்—ஆர்வமுடன் முரளி (கான)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : மாண்டு                                    தாளம் : ஆதி

பல்லவி

கானம் பொழிவான் கண்ணன் மதுரக்
கனிமொழி வாயில் தீங்குழல் கொண்டு (கான)

அனுபல்லவி

தீனன் கருணாதேவன் ஞான
தேனாய் அமுதம் ஊனில் மேவிய (கான)

சரணம்

நாதசுகமே நானிலம் யாவும்
போதநிலையில் விளங்கிடச் செய்யும்
வேதநயமே விளங்கிடும் கானம்
விண்ணுறை அமரரும் வியந்திடும் (கான)

---

ராகம் : நாட்டைக்குறிஞ்சி                                    தாளம் : ஆதி

பல்லவி

பால் வடியும் முகம் நினைந்து நினைந்தென்னுள்ளம்
பரவச மிக வாகுதே கண்ணா (பால்)

அனுபல்லவி

நீலக்கடல் போலும் நிறத்தழகா எந்தன்
நெஞ்சம் குடிகொண்ட அன்றுமுதல் இன்றும்– எந்த
பொருள் கண்டும் சிந்தனை செலாதொழிய (பால்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

வான முகட்டில் சற்று மனம் நோக்கினும்
உன் மோனமுகம் வந்து தோணுதே தெளி-
வான தெண்ணீர் தடத்தில் என்சிந்தனை மாறினும்
உன் சிரித்த முகம் வந்து காணுதே சற்று
கானக்குயில் குரலில் கருத்தமைந்திடினும் அங்கும்
உன் கானக் குழலோசை மயக்குதே
கருத்த குழலோசை மயக்குதே
கருத்த குழலொடு நிறத்த மயிலிற-
கிறுக்கி அமைத்த திறத்திலே
கான மயிலாடும் மோனக்குயில் பாடும்
நீல நதியோடும் வனத்திலே
குரல் முதலெழிலசை குழைய
வரு மிசையின் குழலொடு மிளிரிள கரத்திலே
கதிரும் மதியும் என நயன விழிகள்
இரு நளின மான சலனத்திலே
காளிங்க சிரத்திலே கதித்த
பதத்திலே என் மனத்தை இருத்தி
கனவு நனவினொடு பிறவி பிறவி
தொறும் கனிந்துருக வரந்தருக பரங்கருணை (பால்)

— ஊத்துக்காடு ஸ்ரீ வேங்கட சுப்பையர்

---

ராகம் : கானடா　　　　தாளம் : ஆதி

பல்லவி

அலைபாயுதே கண்ணா என்மனம் மிக
அலைபாயுதே உன்ஆனந்த மோஹன வேணுகானமதில்
(அலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபல்லவி

நிலை பெயராது சிலைபோலவே நின்று
நேரமாவ தறியாமலே மிக விநோதமான முரளீதரா
என் மனம் (அலை)

## சரணம்

தெளிந்த நிலவு பட்டப்பகல்போல் எரியுதே உன்
திக்கைநோக்கி என்னிரு புருவம் நெரியுதே
கனிந்த உன் வேணுகானம் காற்றில் வருகுதே
கண்கள் சொருகி ஒருவிதமாய் வருகுதே

கதித்த மனத்தில் உறுத்தி பதத்தை எனக்கு
அளித்து மகிழ்த்த வா ஒரு
தனித்த வனத்தில் அணைத்து எனக்கு
உணர்ச்சி கொடுத்து முகிழ்த்த வா

கனைகடல் அலையினில் கதிரவன் ஒளியென
இணையிரு கழலெனக் களித்தவா
கதறி மனமுருகி நானழைக்கவோ
இதர மாதருடன் நீ களிக்கவோ

இது தகுமோ இது முறையோ
இது தர்மம் தானோ குழல்
ஊதிடும் பொழுது ஆடிடும் குழைகள் போலவே
மனது வேதனை மிகவொடு (அலை)

— ஊத்துக்காடு ஸ்ரீ வேங்கட சுப்பையர்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : மத்யமாவதி தாளம் : ஆதி

பல்லவி

ஆடாது அசங்காது வா கண்ணா—உன்
ஆடலில் ஈரேழு புவனமும் அசைந்து
அசைந்தாடுதே எனவே (ஆடாது)

அனுபல்லவி

ஆடலைக் காணத் தில்லையம்பலத் திறைவனும்
தன் ஆடலை விட்டு இங்கு கோகுலம் வந்தார்
ஆதலினால் சிறு யாதவனே ஒரு மா மயிலிறகணி
மாதவனே நீ (ஆடாது)

சரணம்

சின்னஞ் சிறு பதங்கள் சிலம்பொலித் திடுமே அதை
செவிமடுத்த பிறவி மனங் களித்திடுமே நான்
பின்னிய சடை சற்றே வகை கலைந்திடுமே மயில்
பீலி அசைந்து அசைந்து நிலை கலைந்திடுமே
பன்னிருகை யிறைவன் ஏறுமயில் ஒன்று
தன் பசுந்தோகை விரித்தாடி பரிசளித்திடுமே
பாடிவரும் அழகா உனைக் காண
வரும் அடியாரெவ ராயினும்
கனக மணியசையும் உனது திருநடனம்
கண்பட்டுப் போனால் மனம் புண்பட்டு போகுமே
(ஆடாது)

— ஊத்துக்காடு ஸ்ரீ வேங்கட சுப்பையர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : குரஞ்சி தாளம் : ஆதி

ப்ரூஹி முகுந்தேதி—ரஸனே

கேசவ மாதவ கோவிந்தேதி
க்ருஷ்ணானந்த ஸதானந்தேதி (ப்ருஹி)

ராதா ரமண ஹரே ராமேதி
ராஜீவாக்ஷ கனச்யாமேதி (ப்ருஹி)

அக்ரூரப்ரிய சக்ரதரேதி
ஹம்ஸ நிரஞ்ஜன கம்ஸஹரேதி (ப்ருஹி)

— ஸ்ரீ ஸதாசிவப்ரஹ்மம்

## நாமாவளிகள்

ராம க்ருஷ்ண ஹரி–ஜயஜய
ராம க்ருஷ்ண ஹரி

க்ருஷ்ணா க்ருஷ்ணா கோவிந்த க்ருஷ்ணா
கோவிந்த கோவிந்த கோபால க்ருஷ்ணா!

ராஜகோபால ரமணீய வேஷா
ராதா வல்லப கோபால க்ருஷ்ணா (க்ருஷ்ணா)

கமலா வல்லப கமலாயதாக்ஷ
கம்ஸ மர்தன கோபால க்ருஷ்ணா (க்ருஷ்ணா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதா க்ருஷ்ண ஜய குஞ்ஜவிஹாரி
முரலீதர கோவர்த்தன தாரி
சங்க சக்ர பீதாம்பர தாரி
கருணாஸாகர க்ருஷ்ண முராரி

---

ஜய அச்யுதம் கேசவம் ராம நாராயணம்
க்ருஷ்ணம் தாமோதரம் வாஸுதேவம் ஹரிம்-ஜய

---

க்ருஷ்ணம் வந்தே நந்த குமாரம்
ராதா வல்லப நவநீத சோரம் ॥

---

ச்யாம ஸுந்தர மதன மோஹன
மோர மகுட தாரி ।
மாதவ ஹரி மாதவ ஹரி
மாதவ கிரிதாரீ ॥

---

ஸ்ரீஹரே சௌரே முராரே, முகுந்த ஹரே
மாதவ பாஹி சௌரே, கேசவ
கோவிந்த ஸதா பாஹி முகுந்த ஹரே ।

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜலதி சயன துரித தமன, ஸுந்தரே கோவிந்த
ச்ரிதபால ஸ்ரீலோல, கருணால-வால, முகுந்த ஹரே ||

---

**ராகம் : மத்யமாவதி** **தாளம் : ஆதி**

கோபால கோபால-கோகுல நந்தன கோபால
நந்த முகுந்த கோபால-நவநீத சோர கோபால *(கோபால)*

வேணு விலோல கோபால-விஜய கோபால கோபால
ராதாக்ருஷ்ண கோபால-ரமணீய வேஷ கோபால *(கோபால)*

காளிய மர்த்தன கோபால-கௌஸ்துப பூஷண கோபால
முரலீ லோல கோபால-முசுகுந்த ப்ரிய கோபால
*(கோபால)*

---

**நாமாவளி**

ஸத்ய ஸநாதன ஸுந்தர *ச்யாம்**
நித்யா-நந்த-கணேச்வர *ச்யாம்*
லக்ஷ்மி ஸேவித பதயுக *ச்யாம்*
ஸுரமுனி வரகண யாசித *ச்யாம்*
தர்ம ஸ்தாபந சீலன *ச்யாம்*
மாயாதீச்வர சின்மய *ச்யாம்*
தாமோதர குணமந்திர *ச்யாம்*
கோபீ ஜன கண மோஹன *ச்யாம்*
ஜய ப்ருந்தாவன சரவர *ச்யாம்*

---

* ''ச்யாம'' — என்றும் பாடலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபீ பாவித ப்ரியகர ச்யாம்
மோஹன முரலீ வாதன ச்யாம்
ராஸ மஹோத்ஸவ கேலன ச்யாம்
மதுரா புரஜன மோஹக ச்யாம்
ஸனகா திகமுனி சிந்தித ச்யாம்
பாண்டவ குல ஸம்மானித ச்யாம்
கீதாம்ருத ஸந்தோஹக ச்யாம்
மங்கலகர கதி தாயக ச்யாம்
மாதவ கேசவ நர ஹரி ச்யாம்
ஸர்வ சராசர தாரண ச்யாம்
பூர்ண சராசர கேலன ச்யாம்
ஸுரகண வந்தித மோதன ச்யாம்
மோஹன நடனானந்தன ச்யாம்

---

த்ரிகுணாதீத குணேச்வர ச்யாம்
ராதா மாதவ ராதா ச்யாம்
ஸ்ருஷ்டி ஸ்திதி லய காரண ச்யாம்–(ராதா)
கோவிந் தாச்யுத யாதவ ச்யாம்–(ராதா)
நாராயண ஹரி கேசவ ச்யாம்–(ராதா)
முகுந்த முரஹர வாமன ச்யாம்–(ராதா)
ஜயஜய கோபீ வல்லப ச்யாம்–(ராதா)
அநுபம ஸுந்தர மோஹன ச்யாம்–(ராதா)
அகில ரஸாம்ருத ஸாகர ச்யாம்–(ராதா)
ராம க்ருஷ்ண ஹரி கிரிதர ச்யாம்–(ராதா)

---

**ராகம் : யமன் கல்யாணி** **தாளம் : மிஸ்ர பாபு**

க்ருஷ்ணா நீவேகமாய் வாராய்
வேகமாய் வாராய் நின் முகசேவைதாராய்
(கிருஷ்ணா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்களிலே சதங்கை கலகல ஒலிசெய்ய
நீலவர்ணனே நாட்யம் ஆடிநீவாராய் (கிருஷ்ணா)

தாய்உனைவாவென வாய்திறந்து அண்டங்கள்
ஆயனே காட்டினாய் ஆனந்தஸ்ரீகிருஷ்ணா
(கிருஷ்ணா)

இடையினில் பொற்சலங்கை விரல்களில்மோதிரம்
தடமார்பில் அணிந்த வையந்திமா லைதுலங்க
(கிருஷ்ணா)

---

**ராகம் : சிந்துபைரவி** **தாளம் : ஆதி**

யமுனாதீரவிஹாரி ப்ருந்தாவன சஞ்சாரி
கோவர்த்தன கிரிதாரி கோபாலகிருஷ்ண முராரி

சரயூதீர விஹாரி முனிமானஸ சஞ்சாரி
தானவமத சம்ஹாரி தர்மோத்தாரணகாரி

கங்காதீர விஹாரி ப்ரம்மானந்த சஞ்சாரி
லீலாவிக்ரஹதாரி ஸ்ரீராமகிருஷ்ண முராரி

மங்களகுண கணதாரி சமாதிமார்க்க சஞ்சாரி
ஸஜ்ஜன மங்களகாரி சமரஸபாவனதாரி

---

**ராகம் : நாதனாமக்ரிய** **தாளம் : ஆதி**

பூதநா ஸம்ஹார க்ருஷ்ண புவநநாத பாஹிமாம்
புண்டரீக நயன க்ருஷ்ண புண்யரூப பாஹிமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணுகானலோல க்ருஷ்ண விமலநாத பாஹிமாம்
விச்வரூப வாஸுதேவ வீரராம ரக்ஷமாம்

நந்த நந்தன முகுந்த நாத க்ருஷ்ண பாஹிமாம்
இந்துவதன மந்தஹாஸ ஈச க்ருஷ்ண ரக்ஷமாம்

தேவதேவ தேவ க்ருஷ்ண தீனபந்தோ பாஹிமாம்
நீலமேகச்யாம க்ருஷ்ண நித்யமுக்த ரக்ஷமாம்.

---

**ராகம் :கேதாரம்** **தாளம் : ஆதி**

கமலா வல்லப கோவிந்த மாம் பாஹி
கல்யாண க்ருஷ்ண கோவிந்த ॥
கமனீயானன கோவிந்த மாம் பாஹி
கல்யாண க்ருஷ்ண கோவிந்த ॥
யசோதாபால கோவிந்த மாம் பாஹி
யதுகுல திலக கோவிந்த ॥
வேணுவிநோத கோவிந்த மாம் பாஹி
விஜயகோபால கோவிந்த ॥
பக்த வத்ஸல கோவிந்த மாம் பாஹி
பாகவத ப்ரிய கோவிந்த ॥
பத்ராத்ரி வாஸ கோவிந்த மாம் பாஹி
கல்யாண க்ருஷ்ண கோவிந்த ॥

**— ஸ்ரீ பத்ராத்ரிவாஸ சுவாமிகள்**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த சாகரா முரளிதரா
மீரா ப்ரபு ராதே ஸ்யாம் வேணு கோபாலா
நந்த யசோதா ஆனந்த கிஷோரா
ஜெய்ஜெய் கோகுல பால ஜெய் ராஜ கோபாலா

கௌஸல்ய சுப்ரஜா ராமசந்த்ரா
சீதா மனோகரா ராகவேந்த்ரா
தீன தயாளோ பரி பூர்ண க்ருபாளோ
ஜெய்ஜெய் பக்த வத்ஸல ஜெய் ரவிகுல ராமா

---

# ஸ்ரீ முருகன் பாடல்கள்

## ஸ்தோத்ரம்

ஓம் ஸ்கந்தாய கார்த்திகேயாய பார்வதி நந்தனாய ச।
மஹாதேவ குமாரர்ய ஸுப்ரஹ்மண்யாய தே நம: ॥

### ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்கம்

மயூராதிரூடம் மஹாவாக்ய கூடம்
மனோஹாரி தேஹம் மஹச்சித்த கேஹம்।
மஹீதேவதேவம் மஹாவேத பாவம்
மஹாதேவபாலம் பஜே லோகபாலம் ॥ *(1)*

குமாரேச ஸூனோ குஹ ஸ்கந்த ஸேநா-
பதே சக்திபாணே மயூராதிரூட।
புலிந்தாத்மஜா காந்த பக்தார்தி ஹாரிந்
ப்ரபோ தாரகாரே ஸதா ரக்ஷ மாம் த்வம் ॥ *(2)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம: கேகினே சக்தயே சாபி துப்யம்
நமச்சாக துப்யம் நம: குக்குடாய ।
நம: ஸிந்தவே ஸிந்து தேசாய துப்யம்
புந: ஸ்கந்த மூர்த்தே நமஸ்தே நமோ஽ஸ்து ॥ *(3)*

ஜயாநந்த பூமன் ஜயாபார தாமன்
ஜயாமோக கீர்த்தே ஜயாநந்த மூர்த்தே ।
ஜயாநந்த ஸிந்தோ ஜயாசேஷ பந்தோ
ஜய த்வம் ஸதா முக்தி தானேச ஸூனோ ॥ *(4)*

**— ஸ்ரீமத் சங்கர பகவத்பாத சுவாமிகள்**

---

**ராகம் : பேஹாக்** **தாளம் : ஆதி**

கார்த்திகேயா கலியுக வரதா
கந்தா முருகா! கதிர்வடி வேலா! *(கார்த்தி)*

தோத்திரஞ் செய்துனைத் துதித்தோம் காவாய்
தூய்மையும் அன்பும் துலங்கிடச் செய்வாய் *(கார்த்தி)*

சாத்திர கோத்திரச் சண்டையைத் தீர்ப்பாய்
சன்மார்க்க மொன்றே சகமிசைக் காப்பாய் *(கார்த்தி)*

பாரில் உனையே பணிந்திட வைப்பாய்
பக்தர்கள் கூட்டம் பரவிடப் பணிப்பாய் *(கார்த்தி)*

சீருடன் ஆத்ம சித்தியும் தருவாய்
பேரும் புகழும் பிணியாது காப்பாய் *(கார்த்தி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வக் கனலை அடியார்க் கீவாய்
அவனியில் அமைதி ஆண்டிட அருள்வாய் *(கார்த்தி)*

கார்மழை போல்நின் கருணையைப் பொழிவாய்
காங்கேயா ஷண்முகா கதிர்காமத் தேவே! *(கார்த்தி)*

**— திரு.க. இராமச்சந்திரா**

---

**ராகம் : தேசிகதோடி** **தாளம் : ஆதி**

*கந்தா கடம்பா கார்த்திகேயா!*
*கலியுக வரதா கதிர்காமா* *(கந்தா)*

தேவர்கள் துயர்தனை நீக்கிடவே
திரு அவதாரம் செய்தாயே
சங்கரன் மைந்தனாய் வந்துதித்தே
சரவணப் பொய்கையில் வாழ்ந்தாயே! *(கந்தா)*

சூர பத்மனை ஸம்ஹரித்த
வீரா தீரா வெற்றிவேலா!
வள்ளிப் பெண்ணைத் தினைப்புனத்தில்
கொள்ளை கொண்ட கள்வனானாய்! *(கந்தா)*

அருண கிரியுன் சரணெனவே
கருணை யுடனே ஆண்டுவந்தாய்!
நக்கீ ரனுக்கு அருள் புரிந்தே
பக்தி யோடுனைப் பாடவைத்தாய்! *(கந்தா)*

முருகா முருகா என்றிடவே
முருக னாய்வந் தருள்புரிவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்கா மந்தனில் எழுந்தருளி
காந்தம் போலே கவருகின்றாய்! (கந்தா)

---

முருகா! முருகா! முருகா! முருகா!
முருகா! முருகா! முருகா! முருகா!
முருகா! முருகா! முருகா! முருகா!
முருகா! முருகா! முருகா! முருகா!

கதிநீ மதிநீ கதிர்வேல் முருகா
துதிசெய் அடியார் துணைநீ அரசே
விதிசெய் வினையும் விலகப் புரிவாய்
புதிதா கியவாழ் வருள்புங் கவனே! (முருகா)

சக்திக் கனலே சமர்செய் பகையைக்
குத்திக் குமுறும் கொதிவேற் கரனே
தொத்தித் தொடரும் துயரங் களைவாய்
பக்தர்க் கருளும் பரமன் மகனே! (முருகா)

அருளார் முகமும் அடியார்க் கபயம்
தருபொற் கரமும் தணலார் விழியும்
கருணை பொழியக் கனிவாய் நகையும்
திருமார் பழகுந் திகழும் முருகா (முருகா)

அன்பர்க் கெளிதாய் தருவாய் அபயம்
நம்பன் உமைநா தன்அருட் கனலே
உன்பா தம்உளத் தினில்ஊன் றிடவே
என்பால் குருவாய் வருவாய் இறைவா! (முருகா)

இரவும் பகலும் இதயத் துனையே
பரவும் அறிவும் பணியுந் தருவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியுந் தொழில்யா வையும்பூ சனையாய்ப்
புரியும் படிசெய் பரிபூ ரணனே! (முருகா)

---

ஜய சிவ முருகா! ஜய சிவ முருகா!
ஜய சிவ முருகா! ஜய சிவ முருகா! (ஜய)

மங்கள மான மலர்வனச் சோலை
தங்கிடு முருகா செங்கதிர் முருகா! (ஜய)

பூந்திரு அழகிற் பொலிந்திடும் முருகா
தீந்தமிழ் எனவே தித்திக்கும் முருகா (ஜய)

மாணிக்க கங்கை வளமெனப் பெருகி
காணக் கண்குளிரும் காருண்ய முருகா (ஜய)

துன்பத்தைத் துரத்தி துயர்களை விலக்கி
அன்பரைக் காப்பாய் அருட்பெரு முருகா! (ஜய)

முத்து முத்தாகச் சித்தர்கள் சூட்டும்
முத்தமிழ் மாலை மொய்த்த பொன்னழகா! (ஜய)

முப்பொரு ளுண்மை மொழிந்திடும் முருகா
எப்பொரு ளுக்கும் உட்பொரு ளாவாய் (ஜய)

குமரா குழகா குருவே முருகா
அமரா அழகா அருளே முருகா! (ஜய)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமாவளி

ஜய ஜய முருகா—ஜய வேல் முருகா
முருகா முருகா—திருமால் மருகா!
முருகா முருகா—வெற்றிவேல் முருகா
மயில் வாஹனனே—மனமோஹனனே!

---

மரகத மயில்மேல் வருமுருகா
ஹரஹர சிவசிவ அறுமுகவா
சரவண பவனே ஷண்முகனே
வரந்தர வாவா என்முன்னே
அரவணி சிவனா ரருள்பாலா
பரவ வரமருள் பரமதயாளா!

---

சிவசிவ சிவசிவ குருநாதா
சிவஸுந் தரஷண் முகநாதா
சிவசிவ ஷண்முக சிவநாதா
சிவபதந் தந்தருள் குருநாதா
கந்தா முருகா உமைமைந்தா
கருணைக் கடலே கதிர்காமா
வருகவே மயில்மிசை குருநாதா
வள்ளிதெய் வானை மணவாளா
ஹரிஓம் ஹரஹர சரவண பவனே
சரணம் சரணம் ஷண்முக குஹனே
முருகா முருகா திருமால் மருகா
முருகா முருகா கதிர்வேல் குமரா!

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பு நந்தன காங்கேயா! ஜக—
தம்பா குஹ ஓம் காங்கேயா।
ஸ்கந்தம் வந்தே லோகேசம்
கௌரீ புத்ரம் வல்லீசம் ॥

---

## நாமாவளி

குருபரா குஹா ஷண்முகா வெற்றிவேலா வா வா
வள்ளி தெய்வயானை மருவும் மயில் முருகா வா வா
அன்பர்மனம் வீற்றிருக்கும் ஆண்டவா நீ வா வா
ஆறுபடை வீடுடையாய் இன்பமாய் நீ வா வா
இன்புருகு சிந்தையிலே இலகுமீசா வா வா
ஈசற்குப தேசம் செய்த உத்தமனே வா வா
உம்பர்கட் குவப்பளித்த ஊழியனே வா வா
ஊனுயிரும் கலந்து நின்ற எங்கள் கோவே வா வா
எண்ணே கண்ணே என்று ஏத்த இசைந்துநின்றாய் வா வா
ஏத்தி உன்னைத் தொழுவார்வினை களைந்திடுவாய் வா வா
ஐங்கரனுக் கருமைத் தம்பி ஆன அழகா வா வா
ஒன்றும் பலவும்வெளியொளியாய் ஓங்கி நின்றாய் வா வா
ஓதற்கரிய ஔதார்ய அடியார் வாழ்வே வா வா
ஔவையார் அருணகிரி பாட்டுவித்தாய் வா வா
குருபரா குஹா ஷண்முகா வெற்றிவேலா வா வா

---

**ராகம் : மாண்டு** **தாளம்: திஸ்ரஏகம்**

**பல்லவி**

வேல் முருகா மால் மருகா வா வா ஷண்முகா
கால் பிடித்தேன் காத்தருள வா வா ஷண்முகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணம்**

நால் வேதப் பொருளான நாதா ஷண்முகா
நல்லதெல்லாம் உன்பால்கொண்டாய் நாதா ஷண்முகா
செல்வமாக சிவை அணைக்கும் சேயே ஷண்முகா
செங்கதிர்வேல் தாங்கிய என் தேவே ஷண்முகா
(வேல்)

ஆறுபடை வீடுடைய ஆண்டவா ஷண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா ஷண்முகா
தேறுதலை தருபவனே தேவா ஷண்முகா
சிங்கார ஓங்கார சீலனே ஷண்முகா (வேல்)

நாறுமாலை யணிமார்பா நாயகா ஷண்முகா
நாதவிந்து கலாதீத நாயகா ஷண்முகா
ஏறுமயில் வாஹனனே ஏந்தலே ஷண்முகா
நீறணிந்தார் வினைபோக்கும் நீதமே ஷண்முகா
(வேல்)

பாடும்பணி தந்திடுவாய் பண்டிதா ஷண்முகா
பக்தருடன் கூட்டிடுவாய் முத்தனே ஷண்முகா
ஆடும்சேவற் கொடியழகா ஆண்டவா ஷண்முகா
அடியார் உள்ளக் குஹையமர்ந்த ஆனந்தா ஷண்முகா
(வேல்)

வீடும் நாடும் நின்திருத்தாள் வேண்டினேன் ஷண்முகா
வீரன் சூரன் உடல்கிழித்த வேலனே ஷண்முகா
ஓடும்மனம் உன்னைநாட ஆடிவா ஷண்முகா
ஒருவனே என் வினையழித்த உத்தமா ஷண்முகா
(வேல்)

எல்லையில்லா ஆனந்தனே ஏகாந்தா ஷண்முகா
எங்கும் நிறை அன்புருவே ஓம் முருகா ஷண்முகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையிலே ஆடும்தேவி பாலகா ஷண்முகா
திருட்டுத் தனமாய்க் குறக்கொடியைக்
கொண்டவா ஷண்முகா (வேல்)

தொல்லையெல்லாம் கடந்தபதம் தந்திடும் ஷண்முகா
தோத்தரித் தோம்எங்கள்முன்னே வந்திடாய்
ஷண்முகா
கல்லையொத்த மனமுருகக் கருணைசெய் ஷண்முகா
கல்லெனச் சிலம்பொலிக்க ஓடிவா ஷண்முகா
(வேல்)

— ஸாது ஸ்ரீ முருகதாஸ்

---

ராகம் : பேஹாக் தாளம் : திஸ்ர ஏகம்

அன்பருக்கு அன்பனே நீ வா வா முருகா
ஆறுபடை வீடுடையாய் வா வா முருகா
இன்பமய ஜோதியே நீ வா வா முருகா
ஈசனுமை பாலகனே வா வா முருகா
உரகநாதன் மருகனே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே வா வா முருகா
எட்டுக்குடி வேலவா நீ வா வா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வா வா முருகா
ஐங்கரனுக் கிளையவனே வா வா முருகா
ஆறுமுக வேலவனே வா வா முருகா
ஒன்றான பரம் பொருளே வா வா முருகா
ஓங்கார தத்துவமே வா வா முருகா
ஔவைக்குப தேசித்தவா வா வா முருகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில லோக நாயகனே வா வா முருகா
ஓடிவா நீ ஓடிவா நீ வா வா முருகா
ஆடிவா நீ ஆடிவா நீ வா வா முருகா

---

**ராகம் : சாமா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

கந்தனையே எண்ணி வந்தனைசெய் மனமே
காலமெல்லாம் நம்மை கனிவுடனே காக்கும்

*(கந்தனை)*

**அனுபல்லவி**

சிந்தையில் நினைத்தாலும் ஸஞ்சலங்கள் தீர்ப்பான்
சிந்தித்திருப்போர்க்கு ஸகலநலம் தருவான்

*(கந்தனை)*

**சரணம்**

பந்தவினை களைந்து பரிவுடனே காப்பான்
பாபங்கள் யாவையும் பறந்திடவே வைப்பான்
சந்தத் தமிழ்பாலன் ஸுந்தரனைப் பணிந்தால்
ஸந்ததமும் கருணை சிந்தி நமக்கருள்வான்

*(கந்தனை)*

**— லலிதகானம்**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : நாட்டைக்குறிஞ்சி (அ) நவரோஜ் தாளம் : ஆதி

### பல்லவி

முருகா — முருகா! — முருகா!

### சரணங்கள்

வருவாய் மயில்மீ தினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும் (முருகா)

அடியார் பலரிங் குளரே;
அவரை விடுவித் தருள்வாய்!
முடியா மறையின் முடிவே! அசுரர்
முடிவே கருதும் வடிவே லவனே! (முருகா)

சுருதிப் பொருளே வருக!
துணிவே, கனலே, வருக!
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல் (முருகா)

அமரா வதிவாழ் வுறவே
அருள்வாய்! சரணம்! சரணம்!
குமரா, பிணியா வையுமே சிதறக்
குமுறும் கூர்வே லவனே, 'சரணம்! (முருகா)

அறிவா கியகோ யிலிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய்! அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய்! (முருகா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*குருவே! பரமன் மகனே!*
*குகையில் வளருங் கனலே!*
*தருவாய் தொழிலும் பயனும் அமரர்*
*சமரா திபனே! சரணம் சரணம்!* *(முருகா)*

**— மகாகவி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார்**

---

**ராகம் : பன்துவராளி கானடா** **தாளம் : ஆதி**

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

**— கந்தர நுபூதி**

---

**ராகம் : யதுகுலகாம்போஜி** **தாளம் : மிசிரம்**

**பல்லவி**

வேலைத் தூக்கிவிளை யாடுந் தெய்வமே—யென்
வினைப்பகைதீர் தெய்வமே *(வேலை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அனுபல்லவி

காலைத்தூக்கி யாடும் கண்ணுதல் தந்த
கதிர்காமத் தையனே கழலடி நம்பி வந்தேன்

(வேலை)

### சரணம்

எங்கெங்குந் திருமுகம் எங்கெங்குந் திருவிழி
எங்கெங்குந் திருச்செவி எங்கெங்குந் திருக்கரம்
எங்கெங்குந் திருவடி எங்கேநீ அங்கே நான்
ஈசனே கதிர்காம வாசனே முருகேசா

(வேலை)

— ஸ்ரீ யோக சுவாமிகள்

---

## ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ்

**ராகம் : மோஹனம் (அ) பாகேஸ்ரீ** **தாளம் : கண்டசாபு**

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : காபி தாளம் : சதுஸ்ர ஜம்பை

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடும் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்த போதென் துயர்கெடமாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

ராகம் : நவரோஜ் தாளம் : ஆதி

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

ராகம் : ஹம்ஸத்வனி தாளம் : ஆதி

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்த னென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டின்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

**ராகம் : ஹுசேனி தாளம் : கண்டஜாதி திரிபுடை**

இயலிசையி லுசித வஞ்சிக் கயர்வாகி
இரவுபகல் மனது சிந்தித் துழலாதே
உயர்கருணை புரியு மின்பக் கடல்மூழ்கி
உனையெனது ளறியு மன்பைத் தருவாயே
மயில் தகர்க லிடைய ரந்தத் தினைகாவல்
வனசகுற மகளை வந்தித் தணைவோனே
கயிலைமலை யனைய செந்திற் பதிவாழ்வே
கரிமுகவ னிளைய கந்தப் பெருமாளே.

**ராகம் : ஸிம்மேந்த்ர மத்யமம் தாளம் : ஆதி**

வசனமிக வேற்றி மறவாதே
மனதுதுய ராற்றி லுழலாதே
இசைபயில்ச டாக்ஷ ரமதாலே
இகபரசௌ பாக்ய மருள்வாயே
பசுபதிசி வாக்ய முணர்வோனே
பழநிமலை வீற்ற ருளும்வேலா
அசுரர்கிளை வாட்டி மிகவாழ
அமரர்சிறை மீட்ட பெருமாளே.

**ராகம் : பூரிகல்யாணி தாளம் : ஆதி**

எதிரி லாத பக்தி தனைமேவி
இனிய தாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர காம வெற்பி லுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே.

**ராகம் : கமாஸ் தாளம் : ஆதி**

காரணம தாக வந்து புவிமீதே
காலனணு காதி சைந்து கதிகாண
நாரணனு வேதன் முன்பு தெரியாத
ஞானநட மேபு ரிந்து வருவாயே
ஆரமுத மான தந்தி மணவாளா
ஆறுமுக மாறி ரண்டு விழியோனே
சூரர்கிளை மாள வென்ற கதிர்வேலா
சோலைமலை மேவி நின்ற பெருமாளே.

**ராகம் : ஸஹானா (அ) ஸாவேரி தாளம் : ஆதி**

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

**ராகம் : மோஹனம் தாளம் : ரூபகம்**

காலனிடத் தணுகாதே காசினியிற் பிறவாதே
சீலஅகத் தியஞான தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே நாககிரிப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : கமாஸ் தாளம் : ஆதி

அகரமு மாகி அதிபனு மாகி
அதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி
அரனென வாகி அவர்மேலாய்
இகரமு மாகி எவைகளு மாகி
இனிமையு மாகி வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ
எனதுமு னோடி வரவேணும்
மகபதி யாகி மருவும்வ லாரி
மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை
மகிழ்கதிர் காம முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே.

ராகம் : ஹரிகாம்போஜி தாளம் : ஆதி

திருமக ளுலாவு மிருபுய முராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
ஜெகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதரு குமாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளையாடு
மரகத மயூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினை விடாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.

ராகம் : நடபைரவி தாளம் : ஆதி

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முற அருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி அயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வலம்வரு மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனி லுறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே.

ராகம் : செஞ்சுருட்டி தாளம் : ஆதி

நாதவிந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம வெகுகோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்

சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீர நமோநம கிரிராஜ

தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்

ஈத லும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈரமுங்குரு சீர்பாத சேவையு மறவாத

ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா

ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி

ஆதியந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்நன்னாட்டதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

**ராகம் : ஸிந்துபைரவி** **தாளம் : ஆதி**

முடியா முதலே சரணம் சரணம்
முருகா குமரா சரணம் சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவேல் அரசே சரணம் சரணம்
மயிலூர் மணியே சரணம் சரணம்
அடியார்க் கெளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியாக் கதியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

**ராகம் : மத்யமாவதி (அ) புன்னாகவராளி** **தாளம் : ஆதி**

**போற்றி**

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி

---

**ராகம் : மாண்டு** **தாளம் : ஆதி**

**வாழ்த்து**

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் னணங்கு வாழ்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீர் அடியா ரெல்லாம்!

---

அரஹரோஹரா, அரஹரோஹரா
அரஹரோஹரா – சுவாமி அரஹரோஹரா
திருச்செந்தூர் முருகனுக்கும் – அரஹரோஹரா
திருத்தணிகை வேலனுக்கும் – அரஹரோஹரா (அர)
பழனிமலைபாலனுக்கும் – அரஹரோஹரா
பரம சிவன் மைந்தனுக்கும் – அரஹரோஹரா (அர)
கதிர்காம வேலனுக்கும் – அரஹரோஹரா
கந்தசாமி கடவுளுக்கும் – அரஹரோஹரா (அர)
கலியுக வரதனுக்கும் – அரஹரோஹரா
கண்கண்ட தேவனுக்கும் – அரஹரோஹரா (அர)
வெள்ளிமலை வேலனுக்கும் – அரஹரோஹரா
வள்ளிமண வாளனுக்கும் – அரஹரோஹரா (அர)
அபிஷேகப் பிரியனுக்கும் – அரஹரோஹரா
ஆனந்த வடிவனுக்கும் – அரஹரோஹரா (அர)

---

**ராகம் : சிவரஞ்சனி** **தாளம் : ஆதி**

ஓம் முருகா ஓம் முருகா (2)
தீராத எண்ணச் சுழியில் சுழன்று
தீராத துன்பத்தில் ஆழ்ந்தேன் முருகா (ஓம்)

மெய் போலத் தோன்றும் பொய்யுலகில் பிறந்து
பொய்யான அன்பில் மயங்கினேன் முருகா (ஓம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயா மயக்கம் தெளிந்து முருகா
மெய்யன்பில் நீராடி நிற்கும் மனத்தால்
உன்னை நினைந்து நினைந்து உருகி
உள்ளொளி காண்பது என்றோ முருகா... (ஓம்)

காலமெல்லாம் போன பின்பு முருகா
காலினைக் காணக் காலம் வருமோ முருகா
நிர்மல மேனியனைக் கண்குளிரக் காணும்
நேரமிதே........ முருகா......... நேரமிதே

---

ஆறுமுகம் சிவ சண்முகம்
ஸ்ரீ பால சுப்ரமண்யம்
கந்தா முருகா கடம்பா வடிவேலா
சூர சம்ஹாரா சேவற் கொடியா
ஈஸ்வர நேத்ர குமர குரு குஹ
தேவ சேனாபதே சுப்ரமண்யா
சுப்ரமண்யா சுப்ரமண்யா
சுப்ரமண்யா சுப்ரமண்யா

---

சரவணா சிவ குமார சண்முக நாதா ஜய்ஜய்
சுப்ரமண்யா கார்த்திகேயா கதிர்வேலா
சண்முக நாதா ஜய்ஜய் சண்முக நாதா
சரணம் சரணம் சண்முக நாதா.

---

பழனி முருகா வேல் முருகா
சரணம் சரணம் வேல் முருகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி சோதர வேல் முருகா
கார்த்திகேயா வேல் முருகா
சுப்ரமண்ய வேல் முருகா
அரஹரோஹரா முருகா அரஹரோஹரா
அரோஹரா அரோஹரா அரஹரோஹரா

---

குன்றிலாடும் குமரேசா
தண்டபாணி முருகேசா
தெய்வ சிகாமணியே ஷண்முகநாதா
கந்தா ஷண்முகநாதா
நீலமயில் மீதுவரும் ஈராறுதோள் முருகா
சிவஞான குருநாதா உமைபாலா ஆறுமுகா! ।

---

மரகத மயில்மீது வேல்தாங்கும் முருகா
மாலயன் காணாத ஜோதியின் பாலகா
மாறாத கருணை எனக்கருள் கந்தா
ஓம் முருகா ஞானவேல் முருகா
ஓம் முருகா வெற்றிவேல் முருகா ।

---

சரவண பவகுஹ ஓம் முருகா
இருவினை கெட வரம் அருள் முருகா
பழனி கிரீசா பால முருகா
சிவமுருகா ஹர ஹர முருகா ॥

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவமும் உருவுமாகி அனாதியாய்ப்
பலவாயொன்றாய்ப்
பிரமமாய் நின்றஜோதிப் பிழம்பதோர்
மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள்பன்
னிரண்டுங்கொண்டே
ஒருதிரு முருகன்வந்தாங்(கு) உதித்தனன்
உலகமுய்ய.

---

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ன மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மநுதினமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகர்திரு வேரகத்தின் முருகோனே.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ புத்தர் பாடல்கள்

**ராகம் : மணிரங்கு** **தாளம் : ஆதி**

அருட்கட லாகிய அகளங்க நாதன்
அறவழிச் செல்லுமின் ஐம்புலன் அடக்குமின்
இருட்கடல் கடந்திடும் இணையறு தோணி
எம்பெருமான் சொல்லும் செம்பொருள் ஒன்றே! 1

நில்லாது இளமை நில்லாது செல்வம்
நில்லாது தேகம் நில்லாது மோஹம்
அல்லல் அரசே ஆட்சி நில்லாதே
ஆசை வலையில் அகப்பட்டுக் கொள்ளாதே! 2

பொன்னாசை மண்ணே புவியாசை மண்ணே
பொருளெல்லாம் மண்ணே அருளினை நண்ணீர்
பெண்ணாசை எல்லாம் பிணி நரகமாமே
பிறப்பதும் மூப்பதும் இறப்பதும் இயல்பே! 3

அரியணைச் செல்வத்தை அரண்மனை சுகத்தை
அழகியாம் மனைவியை அருமைப் புதல்வனை
உரிய செல்வங்களை உதறி எம்பெருமான்
ஓடினன் கானகம் வாடினன் மேனி! 4

---

**("தூண்டிற் புழுவினைப் போல்" என்ற மெட்டு)**

**ராகம் : செஞ்சுருட்டி & ஸிந்துபைரவி** **தாளம் : ஆதி**

ஞானஒளி யடைந்தான்–கருணை
நாயகன் புத்தன் எம்மான்
வானத்துத் தெய்வமென–இந்த
வையகம் வந்தா னம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈனநிலை யடைந்து–மாந்தர்
ஏங்கித் தவிப்ப தெல்லாம்
ஆனதின் காரணத்தைப்–புத்தன்
அறிந்து அறம் வகுத்தான்!

மாயைஎன இவ்வுலகைப்–பழித்து
மனிதரைத் தாழ்த்தி நின்றோர்
தாயினும் அன்புமிஞ்சும்–புத்தன்
தாளிணை போற்றி நின்றார்!

---

## புத்த ஜோதி

**ராகம் : ராகமாலிகா** **(நாட்டை)** **தாளம் : ஆதி**

ஆருயிர் உலகுக்கெல்லாம் அன்புடன் அருளு மேவிக்
காருயர் வானம்போல் கருணையே புரிந்த வள்ளல்
பாருயர் இன்பமேநின் பணிதரும் இன்ப மானாய்
சீருயர் புத்த தேவா! சேவடி பணிகின் றேனே.

**(இந்தோளம்)**

செழுந்திரு வழகன்வீரத் திருவுறு மார்பன் இன்பக்
கொழுந்தொளிர் செல்வன் இந்தக் குவலய உயிர்களெல்லாம்
அழுந்திருள் ஆசைவாய்ப்பட்டழுந்துயர்க் கிரங்கியிங்கே
எழுந்தருள் புத்தஜோதி இறைவனைப் போற்றுவோமே.

**(மோஹனம்)**

அரசமென் றரசைநீத்தோன் அரசுவீற் றிருந்து ஞான
அரசனாய் அரசர் போற்றும் அரசனுக் கரச னாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரசகோ தரர்களுய்ய நலிவறு தொண்டு செய்த
வரன் அறச் செல்வன்வாமன் மாசறு புத்தன் வாழ்க!

— ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

## விருத்தம்

வந்திருந்து செல்லுமுயிர் வாழ்வில் மக்கள்
வருந்துகின்ற வருத்தமெல்லாம் நேரில் பார்த்து
தந்தையுரைத் தவையெல்லாம் தவறென்றெண்ணி
தரணியாள் வதைத்துறந்து தவமேற்கொண்டு
முந்தைவினை கட்டறுத்து முனிவனாகி
மூவுலகும் தொழுதேத்தும் முதன்மைபெற்றே
இந்தவுல குள்ளளவும் இறவாக்கீர்த்தி
எய்தியஎம் புத்தர்பிரான் இணைத்தாள் போற்றி

— திரு.க. இராமச்சந்திரா

## நாமாவளி

ராகம் : இந்தோளம் (மால்கோஷ்) தாளம் : ஆதி

சுத்தா சரணம் புத்தா சரணம்
ஸித்தா சரணம் செல்வா சரணம்
மாரனை வென்ற வீரா சரணம்
பிறர்க்கென வாழும் பெரியோய் சரணம்
கருணை பொங்கும் கண்ணா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளே யான பொருளே சரணம்
போதி ஜோதி நாத சரணம்
மணிபத்ம ஹூம் மணிபத்ம ஹூம்!

---

# இயேசுநாதர் பாடல்கள்

**ராகம் : சங்கராபரணம் பல்லவி தாளம் : ஆதி**

தேன் இனிமையிலும் இயேசுவின் நாமம் திவ்ய
மதுரமாமே-அதைத்
தேடியே நாடி ஓடியே வருவீர் திருச்சபையானோரே

**சரணங்கள்**

காசினி தனிலே நேசமதாக கஷ்டத்தை உச்சரித்தே - பாவக்
கசடதை அறுத்துச் சாபத்தைத் தொலைத்தார்
கண்டுணர் நீ மனமே!
பாவியை மீட்கத் தாவியே உயிரைத் தாமே ஈந்தவராம்
- பின்னும்
நேமியாங் கருணை நிலைவரமுண்டு நிதம் துதி என் மனமே!
காலையில் பனிபோல் மாயமாய் உலகம் உபாயமாய்
நீங்கிவிடும்-என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு கருத்தாய் நீ மனமே!
துன்பத்தில் இன்பம் தொல்லையில் நல்ல
துணைவரும் நேசரிடம்-நீ
அன்பதாய்ச் சேர்ந்தால் அணைத்து உனைக் காப்பார்
ஆசைகொள் நீ மனமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூலோகத்தாரும் மேலோகத்தாரும் புகழ்ந்து போற்றும்
நாமம்–அதைப்
பிடித்துக் கொண்டாற்றான் பேரின்ப வாழ்வை
பெறுவாய் நீ மனமே!

---

## சமரசப் பிரார்த்தனை

கண்ணன் என்றான் கந்தன் என்றான்
கருணை வடிவான ஈசன் என்றான்
ஆதி என்றான் அநாதி என்றான்
ஆதிபராசக்தி காளி என்றான்
அல்லா என்றான் யேசு என்றான்
அஹுர்மஸ்தா ஜெஹோவா புத்தன் என்றான்
ராமன் என்றான் கிருஷ்ணன் என்றான்
ராமகிருஷ்ணபரமஹம்சர் அவரே என்றான்
உள்ளும் என்றான் வெளியும் என்றான்
உருவம் என்றான் அருவம் என்றான்
எத்தனை எத்தனை எத்தனை உருவங்கள்
எத்தனை எத்தனை எத்தனை நாமங்கள்
உள்ளது உள்ளது உள்ளது ஒன்றே
உள்ளது ஒன்றே நீ ஒன்றே இறைவா.

---

ரகுபதி ராகவ ராஜாராம் பதித பாவன சீதாராம்
ரகுபதி ராகவ ராஜாராம் பதித பாவன சீதாராம்

ஈஸ்வர அல்லா தேரே நாம்
சப்கோ சன்மதி தே பகவான் (ரகுபதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புத்த பகவான் தேரே நாம்*
*சத்திய அஹிம்ஸா தே பகவான் (2)* *(ரகுபதி)*

*யேசு கிறிஸ்து ஆதி தவநாம்*
*சப ஸந்தனகே கரே ப்ரணாம்* *(ரகுபதி)*

*ராம ராம ராம ராம ராம ராம ராம்*
*ராம ராம, ராம ராம, ராம் ராம ராம் (2)*

ஜெய ஜெயராம் கோவிந்தஹரிஹரி
ஜெய ஜெயராம் முகுந்தஹரி ஹரி
*(ராமராம)*

---

## மங்களம்

**ராகம் : சுருட்டி** **பல்லவி** **தாளம் : ஆதி**

தேவாதி தேவருக்கு ஜய மங்களம்–நித்ய
திவ்ய பத்ம பாதருக்கு சுப மங்களம் (தேவா)

**சரணம்**

1. ஸ்ரீகஜ நாதருக்கு சிவகண பாலருக்கு
ஸித்திபுத்தி தந்தருளி முத்திவர தாயருக்கு (தேவா)

2. கதிர்காம கந்தருக்கு கருணைபொழி வேலருக்கு
ஸ்ரீவள்ளி லோலருக்கு சிங்காரசெவ் வேளருக்கு
(தேவா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மாதாபரா சக்திக்கு மங்கள மகேச்வரிக்கு
ஸ்ரீதேவி வாணிக்கு திவ்யசுப மங்களமே (தேவா)

4. சம்போ மஹா தேவருக்கு சங்கரீ மணாளருக்கு
பங்கஜ தாளருக்கு பார்வதீ ஸமேதருக்கு (தேவா)

5. கோசலை குமாரருக்கு கொண்டல்மணி வண்ணருக்கு
ஜானகி மணாளருக்கு ஜானவிஸ்ரீ பாதருக்கு (தேவா)

6. வேதாந்த கீதருக்கு வேணுவி லோலருக்கு
நாதாந்த நாதருக்கு நந்தகு மாரருக்கு (தேவா)

7. ஸ்ரீவிவேகா னந்தருக்கு திவ்யகுரு வானவர்க்கு
சாரதா ஸமேதருக்கு ஸ்ரீராம க்ருஷ்ணருக்கு (தேவா)

8. ஆதிப்பொரு ளானவர்க்கு ஆதியந்தம் அற்றவர்க்கு
பேருருவம் ஏற்றவர்க்கு பேணிநம்மை காப்பவர்க்கு
(தேவா)

**- ஸ்ரீரங்கானந்த சுவாமிகள்**

**பண்-கௌசிகம் ராகம் : பைரவி தாளம் : ஆதி**

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்தன் நல்ல
எல்லார் களும்பரவும் ஈசனை யேத்து பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லார் களும்மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும் வல்ல ரன்றே.

– திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

---

வான் முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்

---

**பல்லவி**

*சங்கராய சங்கராய சங்கராய மங்களம்*
*சங்கரீ மனோஹராய சாச்வதாய மங்களம் (சங்க)*

**சரணம்**

*கஜானனாய மங்களம் ஷடானனாய மங்களம்*
*குருபராய மங்களம் குருதேவாய மங்களம் (சங்க)*
*ஸ்ரீஸீதாராம மங்களம் ஸ்ரீராதாக்ருஷ்ண மங்களம்*
*ஸ்ரீராமக்ருஷ்ண மங்களம் ஸ்ரீசாரதாயை மங்களம்*
*ஸ்ரீ சாரதாயை மங்களம் ஸ்ரீ விவேகானந்த மங்களம்*
*ஸ்ரீ விவேகானந்த மங்களம் சர்வதேவ மங்களம் (சங்க)*

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேத பாடம்

ஓம் ஸஹ நாவவது ।
ஸஹ நௌ புனக்து ।
ஸஹ வீர்யம் கரவாவஹை ॥
தேஜஸ்விநா - வதீதமஸ்து மா வித்விஷாவஹை ॥

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி: ॥

ஓம் (குருசிஷ்யர்களாகிய எங்களை) இருவரையும் சேர்த்து (பிரம்மம்) காப்பாற்றட்டும்; சேர்த்துப் போஷிக் கட்டும். இருவரும் சேர்ந்து வீரியத்துடன் உழைப்போமாக. எங்கள் அத்தியயனம் ஒளி பொருந்தியது ஆகவேண்டும். (நாங்கள் ஒருவரையொருவர்) பகைத்துக் கொள்ளாமலிருக் வேண்டும்.

ஓம். முவ்வகையிலும் சாந்தி நிலவுக.

ஓம் அஸதோ மா ஸத்கமய ।
தமஸோ மா ஜ்யோதிர்கமய ।
ம்ருத்யோர்மா அம்ருதம் கமய ॥

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி: ॥

ஓம் அசத்தியத்திலிருந்து சத்தியத்திற்கு என்னை அழைத்துச் செல்வாயாக! அஞ்ஞான இருளிலிருந்து மெய்ஞ்ஞான ஒளிக்கு என்னை அழைத்துச் செல்வாயாக! மரணத்திலிருந்து மரணமிலாப் பெருநிலைக்கு என்னை அழைத்துச் செல்வாயாக! ஓம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம். தேஜோஸி தேஜோ மயி தேஹி ।
வீர்யமஸி வீர்யம் மயி தேஹி ।
பலமஸி பலம் மயி தேஹி ।
ஓஜோஸி ஓஜோ மயி தேஹி ।
மன்யுரஸி மன்யும் மயி தேஹி ।
ஸஹோஸி ஸஹோ மயி தேஹி ॥

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி : ॥

ஓம். இறைவா, நீ எல்லையற்ற ஆற்றல், எனக்கு ஆற்றலைக் கொடு. நீ எல்லையற்ற வீரியம், எனக்கு வீரியத்தைக் கொடு. நீ எல்லையற்ற வலிமை, எனக்கு வலிமையைக் கொடு. நீ எல்லையற்ற ஊக்கம், எனக்கு ஊக்கத்தைக் கொடு. நீ எல்லையற்ற வீரம், எனக்கு வீரத்தைக் கொடு. நீ எல்லையற்ற உறுதி, எனக்கு உறுதியைக் கொடு.

ஓம் ஸர்வே பவந்து ஸுகின : ।
ஸர்வே ஸந்து நிராமயா : ।
ஸர்வே பத்ராணி பச்யந்து ।
மா கச்சித் துக்கபாக் பவேத் ॥

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி : ॥

ஓம். எல்லோரும் நலமாக வாழ்க! எல்லோரும் நோயின்றி வாழ்க! எல்லோருக்கும் மங்களம் உண்டாகுக! யாரும் துன்புறாதிருக்கட்டும்!

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடல் குறிப்பகராதி


அகரமுமாகி 271
அகிலம் போற்றும் 103
அங்கண் மாஞாலத்து 192
அஞ்சன வண்ணனை 236
அடியோமோடும் 183
அடைக்கலம் 81
அண்ணாமலையான் 149
அதுபழச்சுவை 142
அம்பரமே 191
அம்பலத்தரசே 158
அயிகிரி நந்தினி 217
அயோத்யா வாஸீராம் 231
அரஹர சிவகத 19
அரஹரோர்ஹரா 275
அருட் சோதி 156
அருட்கடலாகிய 279
அருணனிந்திரன் 140
அருநெறிய மறை 107
அருவமும் உருவுமாகி 278
அருள்படைத்த 48
அலைபாயுதே 246
அவரவர் 199
அளிக்குஞ் செழுந்தமிழ் 205
அன்பர்தஞ் சிந்தையில் 160
அன்பருக்கு அன்பனே 263
அன்பினுள்ளான் 152
அன்பும் சிவமும் 151
அன்பே 199
அன்று இவ்வுலகம் 193
அன்னே இவையும் 145
அன்னை சாரதாமணி தேவி 71
அனந்த ரூபிணி 75
அஸித கிரி 175

ஆகார சூந்யம் 23
ஆசை வன்பாசம் 126
ஆடாது அசங்காது 248
ஆடும் பரிவேல் 266
ஆண்மை உருக்கொண்ட 101
ஆத்மா ராமா 234
ஆதிபராசக்தி 222
ஆதியாம் 42
ஆதியும் அந்தமும் 143
ஆயகலை 204
ஆர்த்த 147
ஆருயிர் உலகுச்கெல்லாம் 280
ஆழிமழைக் கண்ணா 186
ஆறிரு தடந்தோள் 274
ஆறுமுகம் சிவ சண்முகம் 276
ஆனந்த சாகரா 255
ஆனந்த நடமாடுவார் 162

இசைந்த ஏறும் 268
இட்டனும்மடி 131
இடதுபாதம் 161
இடரினுந் தளரினும் 114
இடுக்கண் பட்டிருக்கினும் 125
இடையறியேன் 135
இம்மைக்கும் 197
இமையாது 129
இயலிசையில் 269
இரவியர் 198
இரவாமல் பிறவாமல் 270
இன்னிசை வீணையர் 141

உங்கள் புழைக்கடை 189
உங்கையில் பிள்ளை 149


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணாது உறங்காது 130
உந்துமத 191
உம்பர்தரு 12
உரமன்னுயர் 108
உருவளர் 113
உலகெலாம் 153
உளன்கண்டாய் 199
உனைத்தேடி 19
உனையன்றி 43
உற்றுமை சேர்வது 119

ஊராகி நின்ற 128

எங்குந் திருமேனி 152
எடுத்தவன் தருக்கை 118
எதிரிலாத பக்தி 269
எல்லே இளங்கிளியே 190
எல்லையில் புகழ் 132
என்பு உருகி 196
என்பொடு 113
என்ன புண்ணியம் 109
என்னை எனக்கு 9

ஏற்ற கலங்கள் 192
ஏறுமயில் ஏறி 267

ஐங்கார ஹ்ரீங்கார 21
ஐந்து கரத்தனை 11

ஒண்ணித்தில 144
ஒருத்தி மகனாய் 193
ஒளிவளர் விளக்கே 150

ஓங்கார வேத்ய 32
ஓங்கார ஸ்ரீதரியே 221
ஓங்கி உலகளந்த 185

ஓடும் பொன்னும் 39
ஓம் க்ருஷ்ணாய 236
ஓம் சக்தி ஓம் 208
ஓம் சக்தி ஓம் பராசக்தி 223
ஓம் சுக்லாம் 9
ஓம் நம: சிவாய 164
ஓம் நமோ நாராயணாய 179
ஓம் நமோ ஸ்ரீ ராமக்ருஷ்ண 50
ஓம் நாகேந்த்ர 163
ஓம் பசூனாம் 170
ஓம் முருகா ஓம் முருகா 275
ஓம் ஜய கங்காதர 171
ஓம் ஸ்கந்தாய 255
ஓம் ஸ்தாபகாய ச தர்மஸ்ய 61
(அஷ்டோத்தரம்)
ஓம் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவா 51
ஓம் ஹ்ரீம் ருதம் 2
ஓரொருகால் 148

க்ருஷ்ணம் வந்தே 250
க்ருஷ்ணா க்ருஷ்ணா 249
க்ருஷ்ணா நீ வேகமாய் 252
க்ருஷ்ணா முகுந்தா முராரே 242
க்ருஷ்ணா முகுந்தா ஜனார்த்தனா 182

கங்கைநதிபாய் 55
கண்டன பவ 1
கண்டோம் 200
கண்ணன் எங்கள் 238
கண்ணன் என்றான் 283
கண்ணன் மாடுகன்று 239
கண்ணனைப் பணிமனமே 240
கண்ணாய் ஏழுலகும் 132
கணநாதம் 15
கணபதி கணபதி 15
கதாதரா 47


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கதிரவன் குணதிசை | 197 |
| கந்தனையே எண்ணி | 264 |
| கந்தா கடம்பா | 257 |
| கமலாவல்லப | 254 |
| கருணை செய்வாய் | 13 |
| கல்வாத கல்வி | 39 |
| கல்லார்க்கும் கற்றவர்க்கும் | 156 |
| கலைநிறை கணபதி | 20 |
| கள்ளார்ந்த | 110 |
| கற்பகவல்லி | 213 |
| கற்பனை கடந்த | 153 |
| கற்பூர நாயகியே | 227 |
| கற்றுக் கறவை | 188 |
| கறவைகள் பின்சென்று | 194 |
| கனைத்து இளங்கற்று | 189 |
| கஸ்தூரி ரெங்கா | 182 |
| கஜானனம் பூத | 10 |
| | |
| **கா**ண்பார்க்கும் | 152 |
| காண இனியது | 111 |
| காதலாகி | 115 |
| காதார் குழை | 147 |
| காயமே கோயிலாக | 125 |
| காயாவிலினிதமர்ந்தே | 39 |
| காயியே கணபதி | 16 |
| கார்கொள் | 133 |
| கார்த்திகேயா | 256 |
| காரணமதாக | 270 |
| கால கால காமதஹன | 165 |
| காலனிடத்தணுகாதே | 270 |
| கானம் பொழிவான் | 245 |
| கான மழை பொழிகின்றான் | 244 |
| காஹோரே | 66 |
| | |
| **கீ**சு கீசு | 187 |
| கீதத்தை மிகப்பாடும் | 110 |
| கீழ்வானம் வெள்ளென்று | 187 |
| | |
| **கு**ங்குமம் அப்பி | 197 |
| குத்து விளக்கெரிய | 191 |
| குரு சரணம் | 7 |
| குரு தேவ தயாகர | 7 |
| குரு தேவ தேவ | 45 |
| குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு | 53 |
| குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு | 6 |
| குருபரா குஹா சண்முகா | 261 |
| குருவே சிவமென | 151 |
| குற்றம் நீ | 116 |
| குற்றமில்லாதார் | 118 |
| குன்றிலாடும் | 277 |
| | |
| **கூ**டாரை வெல்லும் | 194 |
| கூடி அடியார் | 134 |
| கூரா ரல் | 119 |
| கூவின் பூங்குயில் | 141 |
| கூற்றாயினவாறு | 120 |
| | |
| **கை**த்தல நிறைகனி | 12 |
| கைப்போது | 122 |
| | |
| **கோ**குலக் கண்ணனை | 242 |
| கோகுலத்திலே வளர்ந்தாய் | 237 |
| கோபால கோபல | 251 |
| கோலமாய | 116 |
| கோழி சிலம்ப | 145 |
| | |
| **ச்**யாம | 250 |
| | |
| **ச**க்தி சொரூபம் | 68 |
| சங்கரா சிவ | 166 |
| சங்கராய சங்கராய | 286 |
| சங்கரி நாரணி | 83 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சங்கரி பரமேஸ்வரி | 221 |
| சதுரம் மறைதான் | 109 |
| சந்ததம் | 268 |
| சம்பு நந்தன | 261 |
| சர்வ ஜீவ-பரப்ரஹ்ம | 59 |
| சரணம் அம்மா | 77 |
| சரவண பவகுஹ | 277 |
| சரவணா சிவ | 276 |
| சலம் பூவொடு | 120 |
| சலமிலன் | 125 |
| **சா**ரதா அம்மா | 84 |
| சாரதா தேவியார்க்கு | 89 |
| சாரதா தேவி பாதம் | 72 |
| சாரதாமணி சர்வகாரணி | 72 |
| சாரதா மாதா சாரதா மாதா | 80 |
| சாரதா ஜயந்தியை | 74 |
| **சி**ந்தனை செய்ய | 153 |
| சில்லுருவாய் | 128 |
| சிவ சிவ சிவ சிவ சபாபதே | 165 |
| சிவ சிவ சிவ சிவ குருநாதா | 260 |
| சிவ சிவ சிவ சிவ நாம | 168 |
| சிவ மஹேஸ்வரா | 167 |
| சிவ ஹர சங்கர | 165 |
| சிவாய நம ஓம் | 164 |
| சிவாய பரமேஸ்வராய | 166 |
| சிற்றஞ் சிறுகாலே | 195 |
| **சீ**ர் பெருகு வங்க நிலம் | 98 |
| **சு**ண்ணவெண் சந்தன | 122 |
| சுத்த சக்தி சுத்த சக்தி | 211 |
| சுத்தா சரணம் | 281 |
| **செ**ங்கணவன்பால் | 148 |
| செடியாய | 183 |
| செய்வினை | 135 |
| **சொ**ல்விற்பனமு | 206 |
| சொற்கும் பொருட்கும் | 206 |
| சொற்றுணை | 124 |
| **ஞா**ன ஒளி | 279 |
| ஞான சூர்ய சுவாமி | 100 |
| ஞானந் தழைக்க | 96 |
| **த்**யாயேத் ஹ்ருதம்புஜே | 85 |
| த்ரிகுணாதீத | 252 |
| **த**சரத நந்தன | 232 |
| தஞ்சம் என | 231 |
| தத்தர் செய்த | 98 |
| தர்மஸ்ய | 21 |
| தருமம் எங்கும் | 26 |
| தலையே நீ வணங்காய் | 122 |
| தன்னையறிந்தின் பமுற | 157 |
| **தா**யாகி தந்தையுமாய் | 157 |
| தாயினும் நல்ல | 117 |
| தாயும் நீயே | 108 |
| தாரமாய | 117 |
| **தி**ருக் கண்டேன் | 199 |
| திருமகளுலாவு | 271 |
| திருவருள் தாருமையா | 44 |
| தில்லைவாழ் | 135 |
| திறங்கொண்ட | 110 |
| **தீ**யிற்பொலிகின்ற | 183 |
| **து**மி ப்ரஹ்ம | 49 |
| துறவுக்கும் | 70 |
| **தூ**க்கும் பனுவல் | 205 |
| தூணிலும் இருப்பார் | 180 |
| தூமணி மாடத்து | 188 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெ**ண்ணிலா 154
தென்னிலங்கையர் 112

**தே**வரெலாந் 99
தேவாதி தேவருக்கு 284
தேவி பாதம் பணிவோம் 73
தேன் இனிமையிலும் 282
தேனமர் 114
தேனினும் இனியர் 109
தேவனே 37

**தோ**டுடைய செவியன். 106

**ந**டராஜா நடராஜா 165
நந்தி நாமம் 115
நம்புவாரவர் 115
நமச்சிவாய வாழ்க 136
நமச்சிவாயவே 126
நமன கரும் 7
நமாமி சங்கர 165
நரதேவ தேவ 66
நலங்கொள் 107
நன்மையும் செல்வமும் 234
நனவினுங் கனவினும் 115

**நா**டிய பொருள் 234
நாடும் பொருட்சுவை 205
நாதவிந்து கலாதீ 272
நாயகனாய் 190
நாயேன் பலநாளும் 131
நாராயண ஹரே 179
நாராயணம் பஜே 178

**நி**த்தமுனை 214
நித்ய மங்கள 36
நிரை கழலரவம் 117
நிலைபெறுமாறு 130

நீல கண்ட 167
நீலாதுங்க 184
நெஞ்சம் உமக்கே 120
நெடிய விசும்போடு 129

**நோ**ற்றுச் சுவர்க்கம் 188

**ப்**ரக்ருதிம் 4
ப்ரலய பயோதி 176
ப்ரஹ்ம முராரி 168
ப்ரஹ்ம ரூப 33
ப்ரூஹி முகுந்தேதி 249

**ப**க்தியால் யானுனை 268
பக்தியினை 44
பச்சைமா மலைபோல் 201
பசியாத அமுதே 159
பஞ்சப் பிதந்தரு 205
படமாடக் கோயில் 151
பண்டு நால்வருக்கு 112
பண்டே நின் 132
பண்ணின் இசையாகி 128
பண்ணும் பரதமும் 205
பண்ணேன் 155
பத்தராய் 136
பந்தத்தால் 108
பப்பறவீட்டிருந்து 142
பர்வத ராஜகுமாரி 210
பரமகுரு 46
பரமஹம்ஸர் போற்றிடும் 79
பரவும் பரிசொன்று 133
பராசக்தி ஜனனி 208
பல்லாண்டு பல்லாண்டு 182
பவபய பஞ்ஜன 31
பழனி முருகா 276
பழித்திளங் கங்கை 117
பஜனை செய்வோம் 78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| **பா**சம் பரஞ்சோதி | 144 |
| பாட்டும் பொருளும் | 205 |
| பாடுகின்ற | 154 |
| பாதாளம் ஏழினும் | 146 |
| பாதிமதி நதி | 272 |
| பாரதத்தின் வேதாந்த | 70 |
| பாரதப் பெண்மையின் | 81 |
| பாருக்கே ஒளி | 48 |
| பால் வடியும் | 245 |
| பாஹி பாஹி | 14 |
| பாஹி பாஹி பவதாரிணி | 221 |
| பாஹி ராம பாவன நாம | 232 |
| **பி**ச்சாடல் பேயோடு | 127 |
| பிடியதன் உருஉமை | 106 |
| பித்தா பிறை சூடி | 130 |
| பிழையுளன | 134 |
| பிறை தங்கு | 200 |
| **பு**லம்பின | 198 |
| புவனியில் | 143 |
| புள்ளின்வாய் | 189 |
| புள்ளும் சிலம்பின | 187 |
| **பூ**ச இனியது | 111 |
| பூதங்கள் தோறும் | 141 |
| பூதநா ஸம்ஹார | 253 |
| பூரணயோக மஹேஸ்வரி | 76 |
| பூரணி புராதனி | 209 |
| பூவினுக் கருங்கலம் | 125 |
| **பெ**ண்தான் பாக | 107 |
| **பை**ங்குவளை | 147 |
| பைங்கோட்டு | 118 |
| **பொ**லிக பொலிக | 200 |
| பொன்னரசி | 223 |
| பொன்னார் மேனியனே | 132 |
| பொன்னும் | 133 |
| **போ**லோ நாதா உமாபதே | 166 |
| போற்றி அருளுக | 149 |
| போற்றியென் | 140 |
| **ம**ங்களம் தந்திடும் | 90 |
| மங்களம் தேசிகேந்த்ராய | 24 |
| மங்கள மா மனைத்தினுக்கும் | 216 |
| மங்களமே ஜய மங்களம் | 76 |
| மங்கள ரூபிணி | 224 |
| மங்காப் புகழ் சேர் | 97 |
| மடையில் வாளை | 107 |
| மண் கண்ட | 206 |
| மண்ணில் நல்ல வண்ணம் | 119 |
| மத்தளங் கொட்ட | 196 |
| மத்ஸம: பாதகீ | 218 |
| மதிநுதல் மங்கை | 113 |
| மந்திரமாவது நீறு | 110 |
| மயூராதிரூடம் | 255 |
| மரகத மயில் மேல் | 260 |
| மரகத மயில் மீது | 277 |
| மருவார் புர மூன்றும் | 127 |
| மலையிலே தான் பிறந்தாள் | 223 |
| மற்றுப்பற்றெனக்கு | 131 |
| மன்னுக தில்லை | 151 |
| மஹா கணபதிம் | 17 |
| மஹா கணபதே | 20 |
| மஹா தேவ நீலகண்ட | 167 |
| **மா**சில் அயோத்தியில் | 233 |
| மாசில் வீணையும் | 126 |
| மாணிக்கக் கூத்தனை | 152 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்ய 201
மாதங்க வதனா 20
மாதர்ப் பிறைக்கண்ணி 121
மாத: ஸமஸ்த 67
மாதா பராசக்தி 222
மாயனை மன்னு 186
மார்கழித் திங்கள் 185
மாரிமலை 193
மாலறியா 144
மாலே மணிவண்ணா 194
மானே நீ நென்னலை 145

**மு**டியா முதலே 273
முத்தன்ன 144
முத்தி தருவது 111
முத்தி நெறி 150
முதாகராத்த மோதகம் 10
முந்திய முதல் நடு 142
முப்பத்து மூவர் 192
முருகா முருகா முருகா 258
முருகா முருகா முருகா 265
முற்றலாமையிள 106
முன்னிக் கடலை 148
முன்னைப் பழம் 146
முன்னையோர் 40

**மூ**ர்த்த மஹேஸ்வர 95
மூவாய் பிறவாய் 129
மூவிரு முகங்கள் 274
மூஷிக வாஹன 11

**மொ**ய்யார் தடம் 146
மோஹன ராகத்திலே 102

**ய**துகுலதிலகா 241
யமுனாதீர விஹாரி 253

**யா** குந்தேந்து 201
யாதுமாகி நின்றாய் 215

**ர**குபதி ராகவா 283
ரங்க நின் 181

**ரா**தா க்ருஷ்ண 250
ராதா ஸமேத 243
ராமக்ருஷ்ண-சரண 46
ராமக்ருஷ்ண சரணம் 50
ராமக்ருஷ்ண ராமக்ருஷ்ண 52
ராமக்ருஷ்ண ஹரி ஜய ஜய 249
ராம ராம சீதாராம் 49
ராம ராம ரகுவீரா 235
ராம ராம ராம ராம 232
ராமஸ்வரூபா 52

**ல**லிதே மாம் பாலய 219

**வ**க்ர துண்ட 10
வங்கக் கடல் 195
வசனமிகவேற்றி 269
வணங்கி அடிபணிந்தோம் 96
வந்திருந்து 281
வந்தே விவேகானந்தம் 100
வளர்மதிக் கண்ணியினானை 121

**வா**ணி கலைத் தெய்வம் 222
வாதாபி கணபதிம் 18
வாரணம் ஆயிரம் 196
வாழ்க அந்தணர் 285
வாழ்த்த வாயும் 126
வாழினும் சாவினும் 115
வாளால் அறுத்து 183
வான் முகில் 286
வானத்தார் 128


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீராமகிருஷ்ண மிஷன், கொழும்பு-6

பஜனாவளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை ரூ 60.00